

TAMILNADU TEACHERS
HOUSING & WELFARE TRUST
நெம்மேலி
டீச்சர்ஸ் காலனி
GST ROAD
Project Approved by SBI




August 2010
இதயநிலா
R.மணிமாலா
முழு நாவலுடன் குடும்ப மாத இதழ்
10
குக்கர் பரிசு
யாருக்கு?
காதல்
ராஜ்ஜியம்
எனது

இதய நிலா வெளியீட்டு விழா நிகழ்ச்சி சென்னையில் தென்னிந்திய நடிகர் சங்க மினி அரங்கில் நடைபெற்றது. சூப்பர் ஹீரோ ஆர்.சரத்குமார் அவர்கள் பிரதிகளை வெளியிட அடையார் ஆனந்தபவன் இயக்குனர் திருமதி சீனிவாச ராஜா, கோல்டன் குரூப் நிறுவனங்களின் சேர்மன் எஸ்.சி.பாண்டியன், தமிழக அரசு ஐ.ஏ.எஸ். பயிற்சி மையத்தின் முன்னாள் முதல்வர் திருமதி. மேகலா மனோகரன் பிரதிகளை பெற்றுக் கொண்டனர். பிரபல நாவல் எழுத்தாளர்கள் நிகழ்ச்சியில் கவுரவிக்கப்பட்டனர். டிரஸ்ட் சேர்மன் விஸ்வநாத ரெட்டியார், தொழிலதிபர்கள் எம்.எ... ராஜா, டி.வி.ஏ.மனோகரன், வருண்குமார், கரு.சி.சின்னதுரை, ராஜரத்தின... இன்ஜினியர் சிவக்குமார், வாஸ்து இன்ஜினியர் சரவணக்குமார், ஜோதி... தங்க திருப்பதி, சென்னை ஆன்லை... முருகவேல், இதயநிலா முகவர்... ராஜாராம், சிவசுப்ரமணியம், கோம... மேன் சிவக்குமார், ஆர்.டி. சாமியப்பன், அச்சிட்டாளர் அசோக் ரவி, விடியல் இயக்குனர் செல்வராஜ், பிரமுகர்கள் கலந்து கொண்டனர். லட்சுமி ராஜரத்தினம் இறை வணக்கம் பாட ஆசிரியர் கருப்பையா நாகராஜன் வரவேற்றார்.







லட்சுமி பிரபா

கற்பகம் நாகராஜன்



நிகழ்ச்சியில் பங்கேற்ற சிறுமி லதா நாராயணன்



வி.உஷா



...யா ...ணியன்



லட்சுமி ராஜரத்தினம்



ஆர்.மணிமாலா



சியாமளாராவ்



உமா பாலகுமார்



## இதயநிலா

# வெளியீட்டு விழா நிகழ்ச்சி






## 'காதல் ராஜ்ஜியம் எனது'

வெறும் காதலை மட்டுமே
சொல்லப்போவதில்லை. துரோகத்தால்
கைவிடப்பட்ட பாக்கியம் என்ற அழகிய
பெண்மணியின் தன்னம்பிக்கை...
அவரை போன்ற பெண்களுக்கு
வாழ்க்கையை எதிர்கொள்ளும்
தைரியத்தையும், நம்பிக்கையையும்
தரும் என்பது நிஜம்.
உண்மைக்காதல்... மண்ணில்
புதைக்கப்பட்டாலும், விண்ணில் பறக்க
விட்டாலும் ஒரு உணர்வு அலைகள்
அந்த உள்ளத்தை இணைத்தே தீரும்...
அது உண்மையாக இருக்கும் பட்சத்தில்!
அதைத் தான் புதிய கோணத்தில் கூறி
இருக்கின்றேன்.
'இதயநிலா' எல்லோர் இதயங்களிலும்
பவுர்ணமி நிலவாக ஒளி வீசப்போவது
நிச்சயம்.
அன்பு வாசகர்களின் கருத்துக்களை
ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளேன்.

உங்கள்




பனி.... காற்றோடு கலந்து சில்லென்று மோதியது. அந்த ஸ்பரிசத்தில் இலைகளும், பூக்களும் வியர்த்துப் போயின.

கால்களை விட்டு நழுவியிருந்த பெட்ஷீட்டை இழுத்துப் போர்த்திக் கொண்டாள் தீபிகா. தொப்பென்று அவள் மேல் ஒரு காலைப் போட்டான் தினேஷ்.

ச்சை.... சுகமான உறக்கம் கெட்ட அவஸ்தையோடு அவன் காலை தள்ளிவிட்டு உறங்க முற்பட்டாள்.

வறட்.... வறட்டென்று பக்கத்து வீட்டில் வாசல் பெருக்கும் சப்தம்.

தீபிகா தலைவரை இழுத்துப் போர்த்திக் கொண்ட போது.... ஙொய்ங்... ஙொய்ங்.... என்ற செல்போனில் மெசேஜ் வரும் சப்தம்.

அறைகுறை விழிப்பிலும் ஆச்சர்யம் எட்டிப் பார்த்தது.

இந்த நேரத்தில் மெசேஜா? யார் அனுப்பினது?

தலையணை அடியிலிருந்து செல்போனை எடுத்துப் பார்த்தாள்.

பர்வீனிடமிருந்து!

அடிப்பாவி... தூக்கமே வராதா அவளுக்கு!

எரிச்சலுடன் படித்தாள்.

கட்டி அணைத்தது போதும்...

பிரிந்து விடுங்கள்.

விடிந்து விட்டது...

செல்ல இமைகள்!

ஆபீஸ் போய் வச்சுக்கறேன் அவளுக்கு! என் வீட்டில் கடிகாரமே இல்லேப்பாரு! இவ சொல்லலேனா விடியாதா எனக்கு?

செல்லை சுவிட்ச் ஆஃப் செய்துவிட்டு... இரண்டே நிமிடத்தில் ஆழ்ந்த உறக்கத்திற்கு சென்று விட்டான்.

பாத்ரூமிலிருந்து வெளியில் வந்த ரேகா முந்தானையால் முகத்தை துடைத்தபடி கிச்சனிற்குள் சென்றாள்.

சுவிட்சை போட்டதும்.... கரும்புகை படிந்த அறுபது வாட்ஸ் பல்பு சோகையில் பளிச்சிட்டது.

முன்தினமே துடைத்து வைத்த சமையல் மேடை சுத்தமாய் சிரித்தது.

செல்லதுரை நாடார் கடையிலிருந்து வந்திருந்த மளிகை சாமான்கள் அடங்கிய அட்டைப் பெட்டியை சமையல் மேடை அடியிலிருந்து இழுத்தாள்.

மெல்லிய சணல் கயிறால் கட்டப்பட்ட பொட்டலங்களை பிரித்து.... பருப்புக்களை தனித்தனி பாத்திரங்களில் ஊற வைத்தவள்... தேங்காய்களை உடைத்து, துருவும் தட்டுமாய்... ஹாலுக்கு வந்தாள்.

கொட்டாவி விட்டபடி பாத்ரூமிலிருந்து வந்தாள் சாருமதி. பதினைந்து வயது சிறுமி.

என்ன சாரு... அதுக்குள்ளே எந்திரிச்சிட்டே? அம்மா இன்னும் வரலே... கொஞ்ச நேரம் தூங்கு.... போ!

இல்லேக்கா... இன்னைக்கு டெஸ்ட் இருக்கு. நேத்தே படிச்சிட்டேன். சும்மா கொஞ்சம் ரிவைஸ் பண்ணிக்கலாம்னு... அம்மா வர்றதுக்குள்ளே படிச்சிடுவேன்!

தங்கையை பரிதாபமாய் பார்த்தாள்.

நீ நிதானமாகவே படி! நானே காய்கறிகளை கட் பண்ணிடறேன்.

இல்லக்கா... இன்னைக்கு நீயே கொஞ்சம் லேட்டாதான் எந்திரிச்சிருக்கே நான் தான் நேத்தே படிச்சிட்டேனே. ஒண்ணும்



பிரச்சினையில்லை.

சாருமதி.... முகத்தை டவலால் துடைத்துக் கொண்டு புத்தகத்தை பிரித்து உட்கார்ந்தவள்... அதில் ஆழ்ந்து போனாள்.

நேரம் முப்பது நிமிடங்களை விழுங்கியது.

வாசலில் உர்ரென்ற வண்டி சப்தம்.

அக்கா.... அம்மா வந்துட்டாங்க! படக்கென புத்தகத்தை மூடி வைத்து விட்டு வாசலுக்கு ஓடினாள் சாருமதி.

பார்த்து எறக்குங்கண்ணே.... தக்காளி கூடை நசுங்குதுபாரு...

அரை இருட்டுல தக்காளின்னு தெரியுமா? வெங்காயம்னு தெரியுமா? சட்டுனு பிடிப்பியா...?

சரிங்கண்ணே.... சரிங்கண்ணே!

கூடைகளை எண்ணி சரி பார்த்துக் கொண்டாள் பாக்கியம்.

சாருமதி கூடையை தம் பிடித்து தூக்கிக் கொண்டு உள்ளே செல்ல.... எந்திரிச்சிட்டியாடி ராஜாத்தி என்றபடி பாக்கியமும் தூக்கிக் கொண்டு பின் வந்தாள்.

எல்லாக் கூடைகளும் ஹாலை நிரப்பின.

வாயல் சேலையால் முகத்தையும் கழுத்தையும் துடைத்துக் கொண்ட பாக்கியத்தின், முகம், களைப்பையும், கவலையையும் நிரந்தரமாய் தத்தெடுத்திருந்தது.

நீ இன்னும் குளிக்கலையா ரேகா?

இல்லேம்மா.... தலைவலி அதிகமா இருக்கு. கொஞ்சம் லேட்டா எந்திரிச்சிட்டேன். பனி வேற கொட்டுது. அதான்.... சமையலுக்கு ரெடிபண்ணிட்டு குளிச்சுக்கலாம்னு!

இந்த சமையல் தொழில்தான் நமக்கு சோறு போடுது. அதை சுத்தபத்தமா செய்யறது தானே நாம காட்டற நன்றிக் கடன். சரி... இனிமே இப்படி நேராமப் பார்த்துக்க. ஒத்தாசைக்கு தீபிகாவை வச்சுக்கன்னு சொன்னா கேக்கிறதில்லே.... சாரு... போய் தீபியை எழுப்பு!

வேணாம் சாரு... எழுப்பாதே! என்னம்மா நீ? இந்த கஷ்டமெல்லாம் நம்மமேளாட போகட்டும். அவமட்டுமென்ன.... சும்மாவா இருக்கா?

நான் முழுக்க கால்சென்டர்ல வேலை செஞ்சிட்டு வரலியா? எல்லா வேலையும் கஷ்டமான வேலைதாம்மா. தூங்கட்டும் விடும்மா.... அவளோட வாழ்க்கையாவது ஒரு நல்ல மனுஷன் கையிலே சேரட்டும் என்றாள் பெருமூச்சுடன் ரேகா.

பாக்கியம் மகளை சுருக்கென்று தைத்த வேதனையுடன் பார்த்தாள்.

தேங்காயை வேகமாய் துருவிக் கொண்டிருந்த ரேகாவிற்கு முப்பதை தாண்டிய வயது. மாநிறமாய், களையாய் இருந்தவளுக்கு பூசினாற் போல் தேகம். சலனங்களை தொலைத்து விட்ட கண்கள். பொட்டு வைத்துக் கொள்ள அனுமதி மறுத்த நெற்றி.

அவள் கணவன் பூபாலன் நான்கு வருடங்களுக்கு முன்பு விபத்தொன்றில் இறந்து விட்டான். ஆட்டோ டிரைவரான பூபாலனுக்கு எவரையும் விசாரிக்காமலேயே மகளை திருமணம் செய்துவைத்தாள் பாக்கியம். ஆட்டோ ஓட்டி சம்பாதிக்கிற பணத்தை எல்லாம் டாஸ்மாக்கிலும், பிராட்வே குறுகிய சந்துகளில் இறுக்கமாய் ரவிக்கையணிந்த தேகம் விற்கும் பெண்களிடமும் கொட்டிவிட்டு, ரேகாவை பாடாய் படுத்தினான். ஒற்றை ஆளாய், ஆளாக்கிய தன் அம்மாவை கஷ்டப்படுத்த மனமின்றி, எல்லாவற்றையும் மனதில் பூட்டி தன்னந்தனியே அழுது கரைவாள். குழந்தை தினேஷ் பிறந்து ஒரு வருடம் கூட ஆகவில்லை. குடிபோதையில் ஆட்டோ ஓட்டி..... பாலத்தில் மோதி... எங்கோ வீசி எறியப்பட்ட பூபாலன் கத்தக் கூட அவகாசமின்றி அவசரமாய் உயிரை விட்டான்.

போன வேகத்தில் வேறு வழியேயின்றி அம்மாவைத் தேடி வந்து விட்டாள். பாக்கியம் நடத்திக் கொண்டிருந்த மெஸ்ஸில் தானும் ஜோதியாய் கலந்து விட்டாள். ரேகா வந்தபின் கஸ்டமருக்கு ஏற்ப வேலையும் அதிகமாக விட்டது.

இதுவரை ஒரு நாள் கூட ரேகா மாண்டு போன கணவனை நினைத்து பேசியதோ, அழுததோ இல்லை.

அவள் வாழ்க்கையில் இனிமையான தருணங்கள் என்று எதுவும் மிச்சமிருந்ததில்லை.

பரபரவென்று வைராக்கியமாய் உழைத்த மகளிடம் போய் இரண்டாவது திருமணம் பற்றி பேச பாக்கியத்திற்கு தைரியம் வந்ததில்லை. வேலை நேரம் போக தன் மகனுக்காவே நேரத்தை செலவிட்டாள்.





## கரும் புள்ளிகள் மறைய

- மருதாணி பொடியுடன் எண்ணெய் சேர்த்து முகத்தில் பூசி வரவும்.
- மஞ்சள் பொடியுடன், மருதாணி சேர்த்து பூசி வரலாம்.
- மஞ்சள் தூளுடன், ரோஜா இதழ் சேர்த்து அரைத்து பூசினால் கரும் புள்ளிகள் குறையும்.
- ரோஜா இதழ், வேப்பிலை, புதினா இலை மூன்றையும் காய வைத்து அரைத்து பொடித்து மஞ்சள் தூள், பன்னீர் சேர்த்து குழைத்து முகத்தில் பூசி வர முகம் கரும் புள்ளிகள் நீங்கி சிவப்பாகும்.

கஷ்டப்பட்டு கான்வென்ட்டில் மகனை சேர்த்து விட்டிருந்தாள். அவனை விளையாட விட்டு, பாடம் சொல்லிக் கொடுத்து, ஊட்டிவிட்டு என்று அவனுக்காகவே வாழ்ந்துக் கொண்டிருந்தவளின் தவத்தை கலைக்க எப்படி மனசு வரும்?

2

எதிர் வீட்டு மாமரத்தில் குடியிருந்த மைனாக்களின் சப்தம் காதை நிறைக்க... உட்கார்ந்த நிலையிலேயே குனிந்து பார்த்தாள் ஆர்வமாக...!

அடர்த்தியான இலைகளுக்கு அவை எங்கே பதுங்கியிருக்கின்றன என்ற ஆச்சர்யமும், ஏமாற்றமுமாய் தன் வேலையில் மீண்டும் கவனம் பதித்தாள் சாருமதி.

சாரு....

என்னம்மா?

பவளக் கொடி மாமி பிரியாணி செய்யறதுக்கு காய்கறிக் கேட்டாங்க... சொல்ல மறந்துட்டேன். அப்படியே இஞ்சி, பூண்டு பேஸ்ட்டும் தனித்தனியா அம்பது கிராம் பேக் பண்ணி குடுத்துடு....

சரிம்மா!

சாருவின் இளம் விரல்கள் வேகமாய் காய்கறிகளை வில்லைகளாக்கியது.

ரேகா.... ஊறப் போட்ட பருப்பை பெரிய குக்கரில் கழுவி ஸ்டவ்வில் வைத்து விட்டு குளிக்க ஓடினாள்.

அதற்குள் எல்லா காய்கறிகளையும் பேக் பண்ணி வைத்து விட்டு சாருமதியும் குளிப்பதற்கு தயாராக உடைகளை எடுத்து வைத்தாள்.

சாரு.... அக்கா குளிச்சதும் நான் குளிச்சிட்டு வந்திடறேன். சமைக்க நேரமாகுதும்மா....

சரிம்மா... அதுவரைக்கும் படிச்சிட்டிருக்கேன்.

நிமிடங்களை மணித்துளிகள் கபளீகரம் பண்ணிக் கொண்டிருக்க... வேலைகள் நடந்தன.

ரேகாவும், பாக்கியமும் சமைத்துக் கொண்டிருந்தனர்.

இதுதான் தொழில் என்று முடிவு செய்தபின் பாக்கியம் சமையலறையை விரிவுப்படுத்தி மூன்று ஸ்டவ்களை மேலும் வாங்கிப் போட்டாள். அதனால் பிரச்சினையின்றி வேகாய் சமைக்க முடிந்தது.

இட்லி, தோசை, ஆப்பம், பூரி, பொங்கல், சாம்பார், சட்னி, வடைகறி, உருளைக்கிழங்கு மசாலா என்று நூறு பேருக்குத் தேவையானதை சமைத்தார்கள்.

டிபன் தான் நூறு பேருக்கு. ஆனால் லன்ச் முந்நூறு பேருக்கு. மெஸ்ஸில் சாப்பிடுபவர்களுக்குப் போக.... ஆபீஸ்களுக்கும் சப்ளை செய்கிறார்கள். அதை எடுத்துச் செல்ல இரண்டு வேலையாட்களை அமர்த்தியிருந்தாள் பாக்கியம்.

ரேகா மசாலாவை மிக்ஸியில் அரைத்துவிட்டு, அரிசியை ஊறப் போட முனைந்தாள்.

சாரு...

என்னம்மா...

நீ கிளம்பு... நேரமாச்சு பார்!

சாருமதி ஸ்கூல் யூனி.... பார்மில்... வேகமாய் வெளியேறினாள்.



தினேசுக்கு நேத்திருந்தே நல்ல இருமல். ஸ்கூல் விட்டு வந்ததும் ஜெயச்சந்திரன் டாக்டர்கிட்டே கூட்டிட்டுப் போ... மகராசன்... கைராசி!

நைட்டே சிரப் குடுத்துதான் தூங்க வச்சேன்.... அந்த புதினாவை எடும்மா!

ஆய்ந்து கழுவி வைத்திருந்த புதினா தட்டை எடுத்து நீட்டினாள்.

சாம்பாருக்கு மசாலா அரைச்சு ஊத்திட்டியா? ஆச்சு.... இறக்கியே வச்சுட்டேன்.


நைட்டு டிபனுக்கு அரிசியை கிரைண்டர்ல அரைக்க வேணாம்.

ஏம்மா?

மாவு மிஷின்ல அரைச்சுக்கலாம்.

அதான் ஏன்னு கேக்கறேன்.

நைட்டெல்லாம் தூக்கம் வராம.... கைக்கு ஆயின்ட்மென்ட் போட்டு தேச்சிக்கிட்டிருந்தியே.... கைவலி அதிகமாயிருக்கா ரேகா?




இப்ப பரவாயில்ல...

இன்னொரு ஆளை வேலைக்குப் போட்டாதான் சரியா இருக்கும் போல....

அட எதுக்கும்மா! மாதவன் நாயரும், கோவிந்தன் அண்ணனும் போதும். சம்பளம் தரணும். வருமானத்துல துண்டு விழும்.

நீ நல்லாயிருந்த அதுப் போதும்டி எனக்கு!

டீ போட்டுத் தரவா! பேச்சை மாற்றினாள்.

வேணம், தீபிகா எந்திரிச்சிடட்டும். அவளுக்குதான் எந்திரிச்ச



# தாய்

நீ கர்மவீரன்.
நீ கருப்பு தங்கம்.
நீ அரசியல் வித்தகர்.
நீ படிக்காத மேதை.
நீ சுதந்திர தியாகி
நீ ஏழைகளின் காவலன்.
நீ தென்னாட்டின் காந்தி.
நீ பாரத ரத்னா.
இந்த பல பட்டங்களும்
உன்னைசாரும்.
இப்படி நீ மாமனிதனே
ஆனாலும், ''தாய்மை''
என்ற நிலையில்
நின்று மழலையர்க்கு
மதிய உணவும்,
மக்கள் பணிக்கு தன்
திருமணத்தையும்
அர்ப்பணித்த . நீதான்
எல்லோருக்கும் இன்றும்
''தாய்'' மனிதன்
என்பதே உண்மை
உண்மை.

**திருமதி.பாவைராஜா**



உடனே டீ வேணுமே. அப்புறமா போடு. கசகசன்னு ஆயிடுச்சு. சின்னதா ஒரு குளியல் போட்டுட்டு புடவையை மாத்திட்டு வந்திடறேன்.

ஒரு நாளைக்கு எத்தனை முறைதான் குளிப்பே? உடம்புக்கு முடியாம போய்டப் போறதும்மா!

மனசுல தைரியம் இருந்தா... உடம்பு நம்ம கையிலே. நாம சொல்றதைதான் கேட்டாகணும். சுத்தமா பளிச்சின்னு இருக்கறதாலதான்.... ஆபீசுக்குப் போற பெரிய மனஷங்களெல்லாம்... நம்ம மெஸ்ஸைத் தேடி வர்றாங்க கொஞ்சம் வேர்த்துக் கொட்டுனாலே என் மூஞ் சிதான்....

சரி.... சும்மா அதையே பேசிக்கிட்டு, வாழையிலைய நறுக்கி கழுவியாச்சாம்மா?

நல்ல வேளை.... ஞாபகப்படுத் தினியே!



மணி ஏழைத் தொட்ட போது... தீபிகா கண் விழித்தாள். வீடு சுறுசுறுப்பாய் இருக்க... இன்னும் கொஞ்சம் புரண்டு படேன் என்றது சோம்பேறித்தனம்.

அந்த வீட்டிலேயே அழகி மட்டுமல்ல... சோம்பேறியும் அவள்தான்.

தினேஷ் வாயில் பிரஷ்ஷை வைத்துக் கொண்டு பல் தேய்க்கிற சாக்கில் பேஸ்ட்டை சுவைத்துக் கொண்டிருந்தான்.



அதற்கும் மேல் படுக்கையில் புரண்டால் மரியாதையாய் இருக்காது என்றுணர்ந்தவள் பாத்ரூமிற்குள் நுழைந்தாள்.

அவளைப் பார்த்துவிட்ட ரேகா... ஏற்கனவே போட்டு வைத்திருந்த டீயை சூடு பண்ணினாள்.

பிரஷ் பண்ணிவிட்டு கிச்சனிற்குள் நுழைந்தவள், அக்கா... என்று அடுத்த வார்த்தைக் கூறுமுன், இந்தா என்று டம்ளரை நீட்டினாள்.

தாங்க்ஸ்க்கா! எப்படி கரெக்டா டீ தர்றே? நான் எந்திரிச்சதைப் பார்த்தியா?

அதோ இருக்கு ரூம். அங்கிருந்து இதோ இந்த பாத்ரூம்குள்ளே நுழையறது கூட தெரியாத அளவுக்கு பேலஸா நம்ம வீடு?

அக்கா.. என்ன இது கையிலே... இவ்ளோப் பெரிய கொப்புளம்? டீயை மேடை மீது வைத்து விட்டு சட்டென அக்காவின் கையைப் பற்றி பதறினாள்.

ஸ்ஸ்.... சத்தம் போடாதே... அம்மா காதிலே விழுந்துடப் போகுது. வடைய சுட்டுட்டு எண்ணெய் சட்டியை இறக்கும் போது கொஞ்சம் கையிலே பட்டுடுச்சு...

ஐயோ.... காயம் பெரிசா இருக்கேக்கா... வா... ஹாஸ்பிடல் போகலாம்...

இந்த மாதிரி பலமுறை காயம்பட்டாச்சு... அதுக்கெல்லாம் கை வைத்தியம் இருக்கு... பயப்படாதே... போ... குளிச்சிட்டு கிளம்பு!

என்னை நினைச்சா... எனக்கே அசிங்கமாயிருக்கு. என்னை விட சின்னவ சாரு. அவளே சிக்கிரமா எந்திரிச்சி உங்களுக்கு ஹெல்ப் பண்றா! நான் பாட்டுக்கு மகாராணி மாதிரி தூங்கி லேட்டா எந்திரிச்சு வர்றேன். நானும் உங்களுக்கு ஹெல்ப் பண்றேன்... என்ன பண்ணட்டும்?

நீ ஒண்ணும் பண்ண வேணாம். நீ மட்டுமென்ன சும்மாவாயிருக்கே? ஆறேழு மணி வரைக்கு ஆபீஸ்ல உழைச்சுக் கொட்டிட்டு, பஸ்ஸிலேயோ, ஷேர் ஆட்டோவிலேயோ நசுங்கி, துவண்டுப் போய் தானே வர்றே?

இருக்கட்டும்க்கா. அதைவிட இதுதான் ஹார்ட்வொர்க். எனக்கும் இதையெல்லாம் கத்துக்குடு...

போதும் தீபி! அடுப்பிலே வேகறது எங்களோட போகட்டும். நீயும்,

சாருமதியும் நல்ல வேலையிலே நிறைய சம்பாதிச்சு வாழ்க்கையிலே செட்டில் ஆகணும். குளிச்சுக்க. மதியம் லன்சுக்கு உனக்கு பிடிச்ச தேங்காய் சாதம் வச்சிருக்கேன்.

தாங்க்ஸ்க்கா. இந்த அன்புக்காகவே நாளைலேர்ந்து என்னால முடிஞ்ச ஹெல்ப்பை நான் செஞ்சே ஆகணும்!

கண்கள் மினுக்க சொல்லிச் சென்ற தங்கையை பெருமையாய் பார்த்தாள்.

தீபிகா. பெயரில் இருக்கும் அழகு அவளிடமும் கொட்டிக் கிடந்தது. நல்ல நிறம், உயரம், உருவி விட்டறாற்போல் தேகம். அடர்வான இமைச்சிறகுகளின் கீழ் நாவல் பழமாய் கண்கள். நேர்த்தியான நாசி, வடிவான இதழ்கள், சுழித்து விடப்பட்ட மேவாய். மாசுமருவற்ற முகம். அடர்த்தியான, இடுப்புவரை தொட்ட கூந்தல்.

அவளைப் பார்க்கும் யாருமே, பெரிய இடத்துப் பெண் என்றுதான் நினைப்பார்கள். சென்ற வருடம் தான் கல்லூரிப் படிப்பை முடித்தாள்.

தி.நகரில் ஒரு கால்சென்டரில் டெலிகாலராக வேலை. எல்லோரிடமும் போனில் கிரெடிட் கார்டு வேண்டுமா என கேட்டு, பேச்சு சாமர்த்தியத்தில் அவர்களை சம்மதிக்க வைக்க வேண்டும். அதற்கேற்றபடி சம்பளம். பிராஜக்ட்வொர்க்கிற்கு ஏற்றபடி ஒவ்வொரு மாதமும் சம்பளம் மாறும். இதுவும் எளிதான வேலை இல்லை.

குளித்து முடித்து பச்சை கலர் சுடிதாரில் அக்கா முன் வந்து நின்றாள்.

ரேகா கொடுத்த டிபனை சாப்பிட்டு முடித்தாள்.

வர்றேன்க்கா... கையை கழுவிக் கொண்டு புறப்பட்டாள்.

வராந்தாவில்... இருபது பேர்... சாப்பிடக் கூடிய அளவில் ஐந்து டேபிள் சேர் போடப்பட்டிருந்தது.

மாதவனும், கோவிந்தனும் பரிமாறிக் கொண்டிருக்க... அனைத்து சேர்களும் நிரம்பியிருக்க... அடுத்த பேட்ச் சாப்பிட வெளியில் ஆட்கள் காத்திருந்தனர்.

பாக்கியம் கல்லாவில் அமர்ந்திருந்தாள்.



வர்றேம்மா.... அம்மாவைப் பார்த்து சொல்லி விட்டு, ஹேண்ட் பேகை மாட்டிக் கொண்டு வெளியேறினாள் தீபிகா.

## 4

தீபி.... கொஞ்சம் நில்லு!

என்னம்மா?

உள்ளே வா! பாக்கியத்தின் குரலில் கடுமை இருந்தது.

எப்பவுமே துப்பட்டாவை ரெண்டு தோள் பக்கமும் பின் பண்ணிக்கிட்டுப் போவே, இப்ப என்ன புதுசு... கழுத்துல சுருக்குப் போட்டுக்கிட்டு.... உடம்பை காட்டிக்கிட்டுப் போறே?

உண்மையிலேயே தீபிகா துப்பாட்டாவை கழுத்தைச் சுற்றி... ஒரு பக்கமாய் தொங்க விட்டிருந்த விதம்... ரொம்பவே அழகாய்... எடுப்பாய்.... கவர்ச்சியாய் தெரிந்தாள்.

நேற்று பர்வீன்தான்.... இப்படி மாற்றிப் போட்டு, கிழவி மாதிரி முழுக்க மூடிக்கிட்டு வராதே! இந்த டிரஸ்ஸே முழுசா மூடிதானே இருக்கு? ஷாலை இனி இப்படிப் போடு.... என்று போட்டு விட்டாள் நேற்று மாலை வீடு திரும்பும் போது கவனிக்கவில்லை போலும்.

தீபிகாவிற்கு என்ன சொல்வதென்று தெரியாமல் துப்பாட்டாவை எடுத்து பழைய மாதிரி பின் பண்ணிக் கொண்டாள்.

ஆம்பளை துணை இல்லாத வீடு இது! வலிய ஆபத்தை வீடு தேடி வரவெச்சிடாதே! மெஸ்ஸுக்கு சாப்பிட வர்றவங்க கண்ணும் கருத்தும் சாப்பாடு ருசியில மட்டும்தான் இருக்கணும். வர்றவங்களை கண்டிக்கற அளவுக்கு நீ இடம் குடுத்துடாதே!

அந்த அறிவுரைகள் தீபிகாவின் இதயத்தை சுருக்கென தைத்தன.

நான் என்னப் பண்ணிட்டேன்னு இவ்ளோ மோசமா அட்வைஸ் பண்றே? என் வயசுப் பொண்ணுங்க விதவிதமா, ஸ்டைலா டிரஸ் பண்ணிக்கிட்டு வர்றாங்க. நான் சுடிதார் தவிர வேறெதையும் போட்டதில்லை. சும்மா ஒரே ஒரு நாள்... ஷாலை பின் பண்ணாம போட்டதுக்கு என்னவெல்லாம் பேசறே? கண்கள் பொங்கி வழிந்தது.

மத்தவங்க வீடும், நம்ம வீடும் ஒண்ணா?

"உங்க அப்பன், பாவி. சவு இரக்கம் இல்லாம, நீங்க நண்டு, சிண்டா இருக்கும் போது விட்டு விட்டு ஓடினவன்தான். அந்த பூக்கார சிறுக்கியோடு எங்கேயோ இருக்கிறான்.

நானும் ரேகாவும் நெருப்புல காயறோம்! ஏன்? உங்களையெல்லாம் ஒரு பழி சொல்வராம கரையேத்ததான். என் பயம் எனக்கு. நான் ஒண்ணும் தப்பா பேசலையே. நீ கிளம்பு! வெளியே துருத்திய பல்லை சிரமப்பட்டு மூடினாள்.

தீபிகா கண்களை அழுந்த துடைத்துக் கொண்டு கிளம்பினாள்.

ரேகா அம்மாவின் அருகில் வந்தாள்.

என்னாச்சும்மா... ஏன் சின்ன விஷயத்துக்கு கோபப்படறே? சின்னப் பொண்ணு, படிச்சவ... அவ ஆசைப்படி விடேன்!

இல்லே ரேகா. படிதாண்டி வேலைக்குப் போற பொண்ணுங்ககிட்டே அதிகம் கவனம் வைக்கணும். வெளியே இடறி விழறதுக்கு ஏகப்பட்ட விஷயங்கள் இருக்கு...

ஆனா, தீபிகா அப்படிப்பட்டவயில்லே...

அக்கா. கல்லாவுல யாருமில்லையா? வெளியிலிருந்து குரல்வர....

பாக்கியம் வெளியே சென்றாள்.

★★★

எத்தனை விதமான மனிதர்கள்? ரயிலில் தன்னைச் சுற்றிலும் சூழ்ந்திருந்த மக்களை நோட்டமிட்டாள் தீபிகா.

சுடிதார், ஜீன்ஸ், சேலை, சல்வார் என விதவிதமாய் உடுத்தியிருந்தாலும், அத்தனை இளம் பெண்களும் தங்கள் அழகை எடுப்பாக்கி காட்டுவதில் தான் எவ்வளவு பிரயத்தனம்? ஷோகேஸ் பொம்மை மாதிரி!

இதோ... எதிரில் அமர்ந்திருக்கும் ஐம்பதைக் கடந்தப் பெண்மணி, நரை தெரியாதிருக்க அடித்த டை... குல்லா போட்டதுப் போன்ற தோற்றத்தை தர.... அணிந்திருந்த ஜாக்கெட் இடுப்பு, முன்புற கழுத்து, முதுகு என தாராளமாய் காட்டிக் கொண்டிருக்கிறது.

இப்போதெல்லாம் அணிந்திருக்கும் டான்டெக்ஸூக்கு கீழே பேண்ட் அணிவதுதான் பேஷன் போலும். லோக்கல் இளங்குருத்துக்கள்



அப்படித்திரிவது கண்றாவியாக இருந்தாலும்.... அவர்களை பெற்றவர்கள் அவர்களுக்கு சில விஷயங்களிலாவது சுதந்திரம் கொடுத்திருக்கிறார்கள் என்றுதானே அர்த்தம்? அம்மா மட்டும் ஏன் மூச்சுத் திணற சங்கிலியால் இறுக்குகிறாள்?

அந்த கோபமெல்லாம் ஒரு கனம் தான்!

அதோ.... ஓடுகிற ரயிலில் வாசலோரமாய் எல்லாமே விற்று விடணும் சாமி என்ற கவலையோடு ஒல்லியாய், எழுபது வயதுடைய மூதாட்டி சாத்துக்குடி கூடையோடு தன் ஸ்டேஷன் வர காத்திருந்த அந்த முகத்தில் தான் எத்தனை வரிகள்? ஒவ்வொரு வரியும், வாழ்க்கையில் பட்ட கஷ்டங்களின் தழும்புகளோ? இந்த வயதிலும் உழைத்தாக வேண்டிய கட்டாயம்? யாரின் நிர்ப்பந்தம்? கணவனா, மகனா?

அம்மாவும் அப்படித்தானே? இன்னமும் அசராது உழைக்கும் பேய்த்தனமான உழைப்பு! யாருக்காக?

எங்களுக்காக தானே?

இந்த வயதிலும் தூக்கமின்றி... ஓடிக் கொண்டேயிருக்கிறாயே அம்மா!

அவள் வாழ்க்கையில் நிகழ்ந்த கசப்புகள்... கட்டுப் பெட்டித்தனமாய் அவள் கரங்கள் என்னைச் சுற்றி வளையமாய் கட்டிப் போடுகிறது.

என்ன தப்பு?

அவள் பயம். நியாயம்தானே?

நான் ஏன் அதை அணைத்துக் கொள்ளக்கூடாது. உன் மனதை இனி கஷ்டப்படுத்தவே மாட்டேன்ம்மா!

தீபிகாவின் விரல்கள் தன்னிச்சையாய் துப்பாட்டவை சரிப்படுத்திக் கொண்டன.

மாம்பலம் ஸ்டேஷனில் இறங்கி.... தன் அலுவலகம் இருக்கும் சாலை நோக்கி வேகமாய் நடை போட்ட போது... இயல்பாய் எப்போதும் போலவே எதிர்சாலையில் இருந்த ராயல் செல்சிட்டி கடை வாயில் கண்கள் நகர்ந்து மீண்டன.

அவன்!

பைக்கில் அமர்ந்தபடி.... இவளையே பரவசமாய் பார்த்துக் கொண்டு நின்றான்!

வாரவன்?

கிட்டத்தட்ட ஒரு மாதமாய்... இதே கூத்து தான்!

இவன் வருகிறவரை காத்திருந்து... இவன் அலுவலகத்தில் நுழைந்ததும் படபடவென்று புறப்பட்டுப் போய் விடுவான்.

சரியான ஞானி என்று நினைத்துக் கொண்டான்.

* * *

எங்கேயோ, யார் வீட்டு சமையல் கட்டிலோ... தாளிக்கிற வாசம். என்ன சமையல் என்று புரியாவிட்டாலும் பசியைத் தூண்டும் சுவை அதில் ஒளிந்திருந்தது.

அந்த வாசனையில் கண் விழித்தான் நந்தன்.

குட்மார்னிங் நந்து! ஷேவிங் கிரீம் தடவிக் கொண்டிருந்த ஜூலோ அவனைப் பார்த்து சொன்னான்.

குட்மார்னிங்டா!

ஃப்ளாஸ்க்ல டீ இருக்கு... எடுத்துக்க...!

வேணாம் நீயே குடி!

டீ இல்லாம உனக்கு வேலையே ஓடாதே...

என்னாச்சு? ஓ...! என்று நினைவிற்கு வந்தவனாய் நக்கலாய் சிரித்தான்.

என்ன சிரிக்கிறே?

டாய்லெட்டுக்கு வாய் இருந்தா... அழுதிடும். நேத்தெல்லாம் அதை என்ன பாடுபடுத்திட்டே! ஒழுங்கா டெட்டாலோ, பினாயிலோ வாங்கி வந்து ஊத்து... தாங்க முடியலடா சாமி!

சும்மாயிருடா நீ வேற... என்றான் அயர்ச்சியாய்.

ரொம்ப டல்லாத் தெரியறே... லூஸ்மோஷன் கூட ரெண்டு மூணு முறை வாமிட் எடுத்தே! வாயேன்... பக்கத்திலேதான்... ஜெயச்சந்திரன் க்ளினிக் இருக்கு... போயிட்டு வரலாம்...

வேணாம் ஜூலோ! நோ ஐம் ஃபீல் ஆல்ரைட்! ஒரு லிம்கா மட்டும் போதும்!



குளிச்சிட்டு வாங்கி வாறேன். அப்படி என்னதான் சாப்பிட்டே?

வழக்கமான ஹோட்டல்லே. வழக்கமா சாப்பிடற சாப்பாடுதான்.

ஹோட்டலை மாத்திப்பாரு. இங்கே வந்த ஒரு மாசத்துல... நாலஞ்சு முறை... இப்படித்தான் ஆச்சில்லே?

ஆமான்டா... பச்... என்ன பண்றது? எத்தனை ஹோட்டல் மாத்தினாலும்... இதுதான் நடக்கும். சின்ன வயசிலேர்ந்தே ஹோட்டல்ல சாப்பிடறது... எனக்கு மட்டுமில்லே... எங்க வீட்லேயே யாருக்கும் பிடிக்காது. அதனால்தான் அந்த சாப்பாட்டுக்கும் என் வயித்தைப் பிடிக்காம போயிடுச்சு.

பேசாம அம்மாவை ஊர்லேர்ந்து வரவழைச்சிடு

நான் வேலைக்காக சென்னை வந்ததே பிடிக்கலே அவங்களுக்கு எப்படி வருவாங்க இங்கே?

அப்ப ஒரே வழி...

கல்யாணம் பண்ணிக்க!

## 5

கல்யாணம் பண்ணிக்கறதுங்கறது அவ்ளோ ஈஸியான விஷயமா?

இதிலே உனக்கென்ன கஷ்டம்? அம்மாகிட்டே சொன்னா... ஒரே மாசத்துல பார்த்து பண்ணி வச்சிட மாட்டாங்களா!

அதைத்தான் சொல்றேன். கடைசி வரைக்கும் நம்மோட வரப்போற பொண்ணை என்னை பெத்துட்ட ஒரே காரணத்துக்காக செலக்ட் பண்ற பொறுப்பை அவங்ககிட்டே எப்படி விட முடியும்?

பின்னே?

ஷேவ் பண்ற பிளேடைக் கூட

### அம்மா

அ..ம்..மா...
பள்ளி செல்லா
கன்றுக் குட்டியும்
பாசமாய் விளித்தது...

-ஆர். ஸ்ரீநிவாஸ்பிரபு, பெசன்ட் நகர்

பார்த்து செலக்ட் பண்றோம். நம்ம கலருக்கும், தோற்றத்துக்கும் இந்த ஷர்ட் தான் ஓக்கேன்னு செலக்ட் பண்றோம். அதே போல அவங்கவங்க பெட்டர் ஹாஃபை அவங்கவங்களே தேடிக் கண்டுபிடிக்கிறதுதான்.... பெஸ்ட்னு சொல்லுவேன்!

ஸோ... ஒரு பெண்ணை டாவடிக்கனும்ங்கறே?

இல்லே.... டீஸன்ட்டா நேசிக்கனும்ங்கறேன்.

என்ன உன் சாய்ஸ்? மாடர்னா? அல்ட்ரா மாடர்னா? கல்யாணத்துக்கு முன்னாடியே மஜா பண்ற பார்ட்டியா?

இது எதுவுமே இல்லே!

வேற...?

ஒரு பெண்ணை சட்டுன்னுப் பார்த்து முடிவு பண்றது முட்டாள் தனம். பிடிச்சுப் பழகி கல்யாணம் பண்ணனும். இந்த காலத்துப் பெண்ணுங்களோட லைஃப் ஸ்டைலே பிடிக்கலேடா.... கொஞ்சம் பழமைத்தனமா, பயந்து பயந்து காதலிச்சு, என் கூட வெளியே வரக்கூட அலறணும். சண்டை போடணும். ஆம்பளைக்கு பைக்ல காலைத் தூக்கிப் போட்டு, இடுப்பை சேர்த்து அணைச்சுகிட்டு பசங்களோட போற பொண்ணுங்களைப் பார்க்கறப்ப... அவளுங்க முடியை கொத்தா பிடிச்சு கீழே தள்ளி உதைக்கனும்னு தோணும்.

சத்தமா பேசாதடா மச்சான். எவன் காதுலயாவது விழுந்துடப் போகுது. அவனவன்... இப்படி லவ்வர் பின்னாடி அணைச்சுக்கிட்டு வரலேன்னா... இது வேலைக்கு ஆகாதுன்னு அத்து விட்டுர்றானுங்க. நீ என்னடான்னா... அப்பன் ரேஞ்சுக்கு யோசிக்கறே! அட்லீஸ்ட் கல்யாணத்துக்கு முன்னாடி சினிமா.... பீச்?

நோ... நோ.... பார்க் கூட கிடையாது. அவளோட அருகாமைக்காக நான் ஏங்கனும். என் மூச்சு காத்துக்காக அவ காத்திருக்கனும். ஃபர்ஸ்ட் நைட்ல தான்.... அவ கையையே தொடுவேன்.

இல்லியேடா...உங்க கல்யாணத்துல மணவறையிலேயே கையை கோத்து விட்ருவாங்களே!

பச்... டிஸ்டர்ப் பண்ணாம நான் பேசறதைக் கேளு!

டேய் மச்சான்... உனக்கு அங்கே மட்டுமில்லே இங்கேயும் நட்டு கழண்டுடுச்சு.... தலையை தட்டி காட்டினான்.

பச்... சலிப்பு காட்டினான்.



சரி... சரி.. சொல்லு... என் தலையெழுத்து கேட்டு தானே ஆகனும்.

பொண்ணு ரொம்ப செவசெவன்னு சோகை பிடிச்ச மாதிரி இருக்கக்கூடாது. முகத்துல குழந்தைத்தனமும், வெகுளித்தனமும் கலந்த அழகு இருக்கனும்.

எல்லாம் சரி... இந்த காலத்துப் பெண்ணுங்க ஊர் சுத்ததானே ஆசைப்படுவாளுங்க...

அப்படி ஆசைப்படறவ கண்டிப்பா என் சாய்ஸ் இல்லை. எல்லாத்திலேயும் கொஞ்சம் பழமைத்தனம் இருக்கனும்...

இந்த காலத்திலேயா? நடக்கிற விஷயமா இது? பச்சையா ஒண்ணு சொல்லவா? இப்பல்லாம் காதல்னே ஒண்ணு இல்லே மச்சான். சும்மா ஃப்ரண்ட்லியா பழகறேன்னு ஊர் சுத்தற பசங்களோடயே உடம்பையும் ஷேர் பண்ணிக்கறாங்க. அதுக்கப்புறம் அவன் ஒருத்தியையும், இவள் ஒருத்தனையும் கல்யாணப் பண்ணிக்கிட்டு ஜஸ்ட் லைக் தட் னு துடைச்சுப் போட்டுட்டு குடும்பம் நடத்தறாங்க. இப்பல்லாம் எந்த பசங்களும், பொண்ணுங்களும் சின்ஸியராவே இல்லே.

நீ சொல்றதெல்லாம் வசதியான இடத்திலே நடக்கிறது.

மனசு கட்டுப்பாட்டை இழக்கறதுக்கு சந்தர்ப்பமும், சூழ்நிலையும் போதுமே! இதிலே பணக்காரங்க, ஏழைங்கற பேதமே இல்லை.

பத்து பேர் தப்பு செஞ்சா.... ஒட்டு மொத்த சொஸைட்டியை தப்பான கண்ணோட்டத்துல பார்க்கக் கூடாது.

சரி... விடு... காலையிலே எதுக்கு ஆர்க்யூமென்ட்? குளிச்சிட்டு கிளம்பறேன். என்ன டிபன் சாப்பிடப் போறே? ஆபீஸ்க்கு போறியா, லீவா?

லீவெல்லாம் போட முடியாது. வேலையிருக்கு. லிம்கா மட்டும் போதும்.

மதியத்துக்கு தயிர் சாதம் மட்டும் சாப்பிடு. நம்ம ஏரியாவுல.... மூணு தெரு தள்ளி ஒரு மெஸ் இருக்கு. அருமையான சாப்பாடு. எங்க ஆபீசுக்கும் அங்கேர்ந்து தான் லஞ்ச் வருது. ஒரு நாளைக்கு என் கூட வந்து சாப்பிட்டுப் பாருன்னா... அலட்டிக்கறே... ஐயோ... வீட்ல நடத்தற மெஸ்ஸா? ன்னு முகம் சுழிக்கிறே? உங்களுக்கெல்லாம் பணத்தை ஹோட்டல்ல கொட்டி வயித்தை வீணாக்கிக்கிட்டாதானே பிடிக்கும்?

இப்ப அதுவா பிரச்சனை? அதை அப்புறம் பார்த்துக்கலாம். நீ குளிச்சிட்டு வெளியே வா.... எனக்கும் டைமாச்சு! என்று சலித்துக் கொண்ட நந்தன் பற்றி சொல்ல வேண்டுமென்றால்... ஒரே வார்த்தையில் ஹேண்ட்ஸம் பாய்!

எந்தப் பெண்ணுக்குமே பிடிக்கக்கூடிய அளவில் வசீகரமாய் இருந்தான். கூடவே கண்ணியமும்.

இருபத்தி ஏழு வயது. சிவகங்கையில் அம்மாப்பட்டி சொந்த கிராமம். அப்பா வேலாயுதம் ஓய்வுப் பெற்ற தலைமை ஆசிரியர். அம்மா மங்கை குடும்பத்தலைவி. அண்ணன் பரதன் அதே ஊரில் ஒரு பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிகிறான். திருமணமாகி ஒரு குழந்தையும் உள்ளது. தங்கை கல்பனாவுக்கு சென்ற வருடம் தான் சீர்காழியில் வரன் பார்த்து திருமணம் ஆனது.

நந்தன் பி.காம் முடித்துவிட்டு டிப்ளமோ இன் கார்கோ மேனேஜ்மென்ட் படித்து சிவகங்கையிலேயே ஒரு தனியார் வங்கியில் வேலை பார்த்தான். நான்கு மாதங்களுக்கு முன்புதான் சென்னை பிராஞ்சில் மாற்றலாகி வந்தான். ரூஸோ தனியார் கம்பெனியில் வேலை பார்ப்பவன். ஒரே ஊர்க்காரன். தனியே அறை எடுத்து வசித்து வருபவன். ஒரே ஊர் என்ற அபிமானத்தில் அவனுடன் அறையை பங்குப் போட்டுக் கொண்ட நந்தன் குடும்பம் வசதியானது. வேலாயுதம் ஓய்வுப் பெற்ற பிறகு கரடு முரடாய் இருந்த தனது நூறு ஏக்கர் நிலத்தை சீர்படுத்தி பொன் விளையும் பூமியாக மாற்றி விட்டார்.

தானிய வகைகள், பழ மரங்கள், காய்கறிகள், நெல் என... அவர் தோட்டத்தில் இல்லாத பொருட்களே இல்லை. தோட்டத்துக்கு நடுவே அவர்கள் வீடு.

இயற்கையும், அழகும் சூழ்ந்த இருப்பிடத்தில் இருந்து வந்தவனுக்கு, சென்னையின் வாகன புகையும், இயந்திர வாழ்க்கையும், நாகரீகப் பெண்களும் அலுப்பைத் தந்தாலும்... அவனை காந்தமாய் வசீகரித்து. வாழ்விடத்தை சொர்க்கமாக நினைக்க வைத்தது அவள் தான்!

அவன் யார்?

அவனுக்கு இன்னும் விடை கிடைக்கவில்லை.

* * *

மறுநாள்!

என்னடா சாப்பாடு விஷயம் முடிவு பண்ணிட்டியா... ரூஸோ



கேட்க...

வேற வழி... நீ சாப்பிடற மெஸ்ஸிலேயே சாப்பிட்டுக்கறேன்!

* * *

ஸ்டேஷன் விட்டு இறங்கி அலுவலகம் நோக்கி வேகமாய் நடந்த தீபிகாவின் தலை இயல்பாய் திரும்பி.... எதிர்சாலையை பார்த்தது.

அவன் இல்லை!

ஏன்?

## 6

அந்த கால்சென்டர் அலுவலகத்தில் கிட்டத்தட்ட முந்நூறு பேர் வரை பணிபுரிகிறார்கள். ஒவ்வொரு பத்து பேருக்கும் ஒரு டீம் லீடர் உண்டு.

தீபிகா அனாவசியமாக கஸ்டமர் தவிர யாருடனும் பேசமாட்டாள். மதிய உணவு இடைவேளை நேரத்தில் மட்டுமே மற்றவர்களின் உரையாடலில் கலந்து கொள்வாள். அங்கு அவளுடைய நெருக்கமானத் தோழி என்றால் பர்வீன் மட்டுமே!

சமவயது உடையவள், கலகலப்பானவள். அவளுடைய பக்கத்து கேபின்தான். கண்ணாடித் தடுப்பெல்லாம் இலலாத கேபின் என்பதால்... டீம் லீடர் தலை மறையும் போதெல்லாம் அடுத்தவர்களுடன் பேசாமல் அவளால் இருக்க முடியாது. முக்கியமாய் ஜமாலுடன்.

அவன் பணி... போன் நம்பர்களை கலெக்ட் பண்ணித் தருவதும், டீம் லீடர் தரும் முகவரியில் ஒரிஜினல்களை சரிபார்த்து கிரெடிட் கார்டுக்கு ஒப்புதல் வாங்கித் தருவதும்.

இருபத்தாறு வயது ஜமாலுக்கு பர்வீனை சண்டைக்கு இழுக்காமல் ஒரு நாளும் முற்றுப் பெறாது.

அன்றும் அப்படித்தான்.

ஹேய் பர்.... குட்மார்னிங்!

மரியாதைக் கெட்டுடும். உனக்கு எத்தனை முறை சொல்றது.... ஒழுங்கா பர்வீன்னு முழுப்பேரை சொல்லுன்னு? கோபத்தில் முகம் சிவக்கும் போது ரொம்பவே அழகாக இருந்தாள்.

ஷார்ட்டா அழகா கூப்பிடறது பிடிக்கலையா? வீணா எதுக்கு வீன்னு

சேர்த்துக் கூப்பிட்டுக்கிட்டு... வாய் வலிக்குதுடி....

ராஸ்கல்... டி போட்டா கூப்பிடறே?

பதிலுக்கு செல்லமா நீயும் டா போட்டுக் கூப்பிடு. உன்னை மாதிரி கோபப்பட மாட்டேன்ப்பா!

தினசரி சிண்டல்கள் என்பதால் .... அவர்கள் சண்டையை ரசித்தபடி மற்றவர்கள் தங்கள் வேலைகளில் ஈடுபட்டிருந்தனர்.

சீ... போ!

ஆமாம்.... அதென்ன... ஊர் பேர் தெரியாதவன்கிட்டே எல்லாம் கொஞ்சி கொஞ்சிப் பேசறே? உன்னைத் தேடி நாலஞ்சு பேர் ஜொள்ளு விட்டுக்கிட்டு ஆபீஸ் வரைக்கும் வந்துட்டானுங்க...

உள்ளே விட வேண்டியதுதானே?

அனுப்பியிருப்பேன்... என்னை மாதிரி எவனும் ஸ்மார்ட்டாயில்லே! கஞ்சா கருப்பு மாதிரி. பொன்னம்பலம் மாதிரி வந்ததால மனசு கேக்கல.

அத்தனையும் காதில் விழ... தீபிகா சத்தம் வராமல் சிரித்துக் கொண்டிருந்தாள்.

அவர்கள் அப்படித்தான்.

அலுவலகத்தில் கீரியும் பாம்புமாய் இருப்பவர்களை பல பேர் இருவரையும் ரெஸ்டா ரெண்ட்டுகளில், காபி ஷாப்களில் பார்த்திருக்கிறார்கள்.

என்ன தீபி சிரிக்கிறே?

நத்திங்!

எனக்குப் புரியுது. அவனை விடு.... அது எப்பவும் இப்படித்தான்... உன்னி பிடிச்சிமாதிரி சொறிஞ்சுக்கிட்டிருக்கும். ஆனா, நாம எல்லாரும் பெரிய பாவம் பண்ணிட்டிருக்கோம் தீபி. நான் தொழும் போது... பாவ மன்னிப்பும் கேட்டுக்கறேன் தெரியுமா?

ஏன்? என்பதுப் போல் அவளைப் பார்த்தாள்.

ஆமாம் தீபி... ஏதேதோ பேசி... பொய் சொல்லி கஸ்டமர்களை கிரெடிட் கார்டு வாங்க வச்சிடறோம். ஆனா, வட்டிக்கு வட்டி, அதுக்கு ஒரு குட்டின்னு போட்டு அவங்களை சீரழிச்சிடறாங்க. எத்தனையோ பேர்



தோல்வி என்பது
தொடர்கதை அல்ல...
தொய்வில்லா மனமிருந்தால்
தொலைதூரம் கூட....
தொட்டுவிடும் தூரம்தான்.

-கவிச்சுடர் இளங்கதிரவன்,
கோவை-38.



இவங்க குடுக்கிற டார்ச்சர் தாங்க முடியாம தற்கொலை பண்ணிக்கிறாங்க தெரியுமா? ஜமால் அடிக்கடி சொல்ற மாதிரி, இந்த வேலைய பார்க்கறதுக்கு பேசாம தூக்குல தொங்கலாம் என்றாள் பர்வீன்... உண்மையிலேயே வருத்தப்பட்டவளாக, அவளின் கூற்றிலிருந்த நிஜம் தீபிகாவை திகைப்புற வைத்தது.

★★★

சாய்நாத் அன்றைய கலெக்ஷன் நிலவரங்களை கம்ப்யூட்டரில் ஆராய்ந்து கொண்டிருக்க... வரலாமா? கொஞ் சமாய் கதவைத் திறந்த முகம் கேட்க.... வந்துட்டியா? என்று சிரித்தான் சாய்நாத்.

அந்த பேங்க்கின் எக்ஸிகியூடிவ்!

என்னடா... வான்னு சொல்லுவேன்னு பார்த்தேன். வந்துட்டியான்னு கேட்டா... என்னமோ மாதிரி இருக்குடா என்றான் இளமாறன்.

முப்பது வயது. விளம்பர மாடல் போன்ற தோற்றம். சாய்நாத்தின் கல்லூரித் தோழன்.

வராதேன்னு சொன்னா வராம இருந்துடுவியா? நமக்குள்ளே என்ன ஃபார்மாலிட்டீஸ்?

"உன்னைப் பார்க்கறதுக்காக ஓடோடி வர்றேன்... என்னைப் பார்த்து அப்படி கேட்டுட்டியே..."

"என்னைப் பார்க்க? நந்தனத்திலேர்ந்து? அதுவும் தினமும்? போடா டேய்... சின்ன வயசிலேயே தாமிரபரணி ஆத்தங்கரையிலே உட்கார வச்சி எனக்கு காது குத்தினாங்களாம். என்ன காரணத்தினாலோ...

7

## ஐ.நா.மகளிர் அமைப்பு



## குளுகுளு அறிவிப்பு

அடுத்த இதழில்... புதிதாக திருமணமான இளம் தம்பதியர்களுக்கு ஒரு குளுகுளு அறிவிப்பு காத்திருக்கிறது.

- ஆசிரியர்.

"சரி... குடுத்துட்டுவா நான் பார்த்துக்கறேன்."

ரேகா பரபரவென செயல்பட்டாள். இலைபோட்டு... கேட்டவர்க்கு விருப்பமான உணவைப் பரிமாறி... பில் போட்டுக் கொண்டு பம்பரமாய் சுழல... கோவிந்தன் ஒரு பக்கம் பரிமாறிக் கொண்டிருந்தார்.

குமார்... நந்தனுடன் உள்ளே நுழைந்தான்.

"அக்கா... அம்மா இல்லே?"

"கடைக்கு போயிருக்காங்க... இப்ப வந்துடுவாங்க."

"இவன் என் ஃப்ரண்ட் நந்தன். நேத்து இங்கே சாப்பிட்டான். இனி, காலையிலேயும், நைட்டும் இவனுக்கும் டிபன் சேர்த்துக்குங்க."

"சரிங்க... உக்காருங்க!"

"என்னடா சாப்பிடறே?"

"பொங்கல்! எங்கம்மா செய்யற மாதிரி... அதே வாசனை! தாங்க்ஸ்டா... இத்தனை நாளா இந்த சாப்பாட்டை மிஸ் பண்ணிட்டேன்னு ஃபீல் பண்றேன்."

"ஒரு நாள் வஞ்சகம் சாப்பிட்டுப்பார்! விடமாட்டே."

***

அம்மா வத்தக்குழம்பை ஊற்ற... தீபிகா... ரசித்து சாப்பிடுகிறாள்.

"ப்பா... எப்படிம்மா... நீ இவ்ளோ சூப்பரா சமைக்கக் கத்துக்கிட்டே!"

பாக்கியம் சிரித்துக் கொண்டாள்.

"இதை ரேகாதான் சமைச்சா."



"இருக்கட்டுமே! எல்லாத்தையும் அக்காவுக்கு நீதானே கத்துக்குடுத்தே?"

"ஒவ்வொருத்தர் கிட்டேயும் கடவுள் ஒவ்வொரு திறமையை ஒளிச்சு வச்சிருக்கான். அவசியம் வர்ற வரைக்கும் யாரும் அதை அறிஞ்சுக்கக்கூட நினைக்கறதில்லை. எனக்கு கஷ்டம் வரும்போது தேடிப்பார்த்தப்ப... அதை கடவுள் என் கைக்குள்ளே ஒளிச்சு வச்சிருக்கான்னு கண்டுபிடிச்சேன். அவ்வளவுதான்."

"உனக்கு யார் கத்துக்குடுத்தது? உங்கம்மாவா?"

"புள்ளி வச்சு கோலம் போடறப்ப... அதே புள்ளியில... வேற எந்தெந்த மாதிரி கோலம் போடலாம்னு கணக்கா ஆராயும். அதே மாதிரிதான் இதுவும். ஒவ்வொரு முறையும் வேற, வேற மாதிரி மசாலா சேர்த்து சமைச்சு... எது நல்லாயிருக்கோ... அதை நிரந்தரமாக்கிக்கணும். இப்ப ரேகா என்னைவிட ரொம்ப நல்லா சமைக்கிறா தெரியுமா?"

ஊறப் போட்டிருந்த அரிசியைக் கழுவி கிரைண்டரில் போட்ட ரேகா இவர்களைப் பார்த்து சிரித்தாள்.

"ஏம்மா... அரிசியை கழுவறதுக்கும், அரைக்கறதுக்குமே மிஷின் வந்திருக்கே... அதை வாங்கி யூஸ் பண்ணலாமே! அஞ்சே நிமிஷத்துலே கழுவிக்குடுத்துடும். பத்தே நிமிஷத்துல அரைச்சு குடுத்துடும். நிறைய ஆர்டர் எடுத்து... நிறைய சப்ளை பண்ணலாம். அதுக்கு மட்டும் ரெண்டு மூணு ஆளுங்களை கூட போட்டுக்கலாம்."

"மிஷின் வாங்கற அளவுக்கு பாக்கியம் மெஸ்... ஹோட்டல் அல்ல. அந்தளவுக்கு வசதிப்படாது. நீ சாப்பிட்டு... வேற வேலை இருந்தாப்பாரு!"

"மெஸ்ஸை ஹோட்டலாக்கறதுக்குத்தாம்மா சொல்றேன். பெரிய ஹோட்டல்லகூட இந்த டேஸ்ட் வரலேம்மா. பேசாம வேலையை விட்டுட்டு நானும் உங்க ஜோதியில கலந்துடலாம்னு பார்க்கறேன்."

"வாய மூடுறியா? போதும்... நானும் ரேகாவும் கஷ்டப்பட்டது. இன்னும் படிக்கணும்னு ஆசைப்பட்டா படி... வாழ்க்கையில முன்னேறு. நீயும் சாருவும்... நாங்கத் தொடாத இடத்தைத் தொடணும். அமோகமா வாழணும். என் காலத்துக்குப் பிறகு, ரேகாவையும், தினேஷையும் நீங்கதான் பார்த்துக்கணும். என்னா நீங்கதானே இருக்கீங்க?" சட்டென குரல் கமறியது. தீபிகா சங்கடப்பட்டாள். அம்மாவின் கையை

இடுக்கையால் அழுத்தினான்.

"இப்படிப் பேசலாமாம்மா? அக்கா எனக்கு இன்னொரு அம்மா மாதிரி. நீ சொல்லித்தான் பாசம் காட்டணும்ங்கற அளவுக்கா என்னையும் சாருவையும் வளர்த்து வச்சிருக்கே. எங்களுக்கு அப்பான்னு சொல்லிக்கிற ஒரு ஆம்பளை எங்கோ ஒரு மூலையிலே உயிரோட இருக்கார்ன்னு தெரிஞ்சும்... ஒரு நாள் கூட அவரைப் பார்க்கணும், பேசணும்னு தோணினதே இல்லேம்மா! ஏன்னா நீ எந்தக் குறையும் வைக்காம, ஏங்கிப்போகாத அளவுக்கு வளர்த்திருக்கே... அதுவும் மிதமிஞ்சிய தன்னம்பிக்கையை ஊட்டி! கடல்ல தள்ளிவிட்டாலும், துணிச்சலா கரை ஏறிடுவோம்... நீ கவலையேப் படாதே! தினேஷோட குழந்தையையும் நீ கொஞ்சிட்டுத்தான் போவே... ஸோ... இனிமே இந்த மாதிரி எல்லாம் பேசாதம்மா!"

ரேகா தனக்கும் சேர்த்து தங்கை பதில் சொல்லி விட்டதில்... தன் வேலையில் கண்ணும் கருத்துமாய் இருந்தாள். ஆனால், அவளுக்குள் வித்தியாசமாய் ஏதோ ஒன்று நடந்துக் கொண்டிருப்பதை உணர்ந்தாள். களைப்பாய் இருந்தது. பாயை விரித்து படுத்துக் கொள்ளவேண்டும் போல் இருந்தது.

***

மெஸ்ஸை நோக்கி பைக்கில் சென்றுக் கொண்டிருந்தான் நந்தன். அவன் பின்னே ரூஸோ.

'நிலமையப் பாரேன்.. மெஸ்ஸு சாப்பாடுன்னா... உவ்வேன்னு சவுண்டு விட்டவன், இப்ப காலையிலே... முத ஆளா ரெடியாகி நிக்கறே... சாப்பிடறதுக்கு..." என்றான் கிண்டலாய் ரூஸோ.

"சரி... சரி... சும்மா சொல்லிக்காட்டாதே... எதையுமே அனுபவத்திலேதானே தெரிஞ்சுக்க முடியும்..." அவன் பேசிக் கொண்டிருக்கும்போதே செல்போன் அழைக்க... வண்டியை ஓரமாய் நிறுத்தி பாக்கெட்டிலிருந்து செல்லை எடுத்து, "ஹே... ஊர்லேர்ந்து... ஹலோ..." என்றான் ஆவலாய்.

"நந்தா... எப்படிப்பா இருக்கே?" அம்மாவின் குரலில் பாசமும் ஏக்கமும் போட்டி போட்டது.

"நல்லார்க்கேம்மா... அப்பா அண்ணால்லாம் நல்லார்க்காங்களா. கால்வலிக்குதுன்னு சொன்னியேம்மா... இப்ப எப்படியிருக்கு?"

"என்னை விடுப்பா... சின்னத் தலைவலின்னாக்கூட பார்த்துக்க



சுத்தி உறவுங்க இருக்கு. உனக்கு என்னப்பா தலையெழுத்து... அந்த ஊர்ல தனியா கஷ்டப்படணும்னு? நம்மக்கிட்டே ஏக்கர் ஏக்கரா நிலமிருக்கு. மத்தவங்களை வேலை வாங்கினாலே போதும். அதை விட்டுப்புட்டு... அங்கே போய்... எதுக்கப்பா? வந்துடேன் ராசா!"

"அம்மா... நீ போன் பண்ணும்போதெல்லாம் இதையே தான் சொல்றே! மனசுக்கு பிடிச்ச வேலைன்னு ஒண்ணு இருக்கும்மா. எனக்கு இதுதான் பிடிச்சிருக்கு. சென்னைய நீ பார்த்து பல வருஷமாச்சில்லே? இப்ப வந்துப்பார். ஃபாரின் மாதிரி அழகாயிருக்கு. ஏகப்பட்ட பில்டிங்...."

"அந்த ஊர் எப்படியிருந்தா... எனக்கு என்ன நந்தா? வேளாவேளைக்கு நல்ல நிறைய மாற்றம்மா சாப்பாடு சாப்பிட முடியாம ஓட்டல்ல சாப்பிட்டு உடம்பை கெடுத்துக்கிற உன்னைப் பத்தின கவலையே எனக்குப் பெரிசா இருக்கு."

"அதைப்பத்தியும் இனி கவலைப்படாதேம்மா. ரூம் பக்கத்திலேயே அருமையான மெஸ் ஒண்ணு. வீட்டு சாப்பாடு கிடைக்குதும்மா... பிரச்னையே இல்லே."

"என்னவோ சொல்றே... நானும் கேட்டுக்கறன். அப்புறம்... மறந்துடப் போறேன். சொல்ல வந்ததை சொல்லிடறேன். உனக்கு ஏழெட்டு ஜாதகம் வந்திருக்கு. எல்லாமே உனக்குப் பொருந்தியிருக்கு. லீவு போட்டுட்டு ஊருக்கு வந்தியானா... உனக்குப் பிடிச்ச பொண்ணாய் பார்த்துடுவே."

அம்மா திடீரென கல்யாணப்பேச்சை ஆரம்பிப்பாள் என்று எதிர்பார்க்கவில்லை.

"அம்மா... இப்ப என்ன அவசரம்?"

"எல்லாரும் இதே

## அகராதிகள்

விதி என கூறுவதும்
சதி என புலம்புவதும்
மதியில்லார் கூற்று
அனுபவங்கள் வாழ்வின்
அகராதிகள்
தோளில் சுமந்தால்
சுவையாகும் நம்வாழ்க்கை
நம்பிக்கை ஏணியில்
ஏறினால்
நாளை நமதே!....

-விஜயலட்சுமி,
ஆதம்பாக்கம், சென்னை-88

வசனத்தையே பேச ஆரம்பிச்சிடாதிங்க. பெத்தவங்களுக்குத் தெரியும்... பிள்ளைங்களுக்கு எதைதை எப்பப்ப செய்யணும்னு... இதோபார்... பொண்ணுங்க போட்டோவுல அவ்வளவு அழகாயிருக்குங்க. உனக்கு பிடிச்ச மாதிரி நீயே தேர்ந்தெடு."

நந்தனுக்கு சட்டென கண்முன் அவள் முகம் வந்து போனது.

அதே நேரம்... அவனைக் கடந்து சென்ற ஷேர் ஆட்டோவில்... அவள்!

அவள்தானா?

அவளேதான்!

"அம்மா... நான் அப்புறமாப் பேசறேன்!" போனை அணைத்து பாக்கெட்டில் போட்டு... நிமிர்ந்தபோது... ஆட்டோ எந்தப்பக்கம் போனதென்றே தெரியவில்லை.

## 8

ஒருகணம் என்ன செய்வதென்றே புரியவில்லை. பைக்கின் பின்னால் ரூபோ அமர்ந்திருந்ததால்... அவன் பதட்டத்தை வெளிப்படுத்திக் கொள்ள இயலவில்லை.

'இங்கே எப்படி? வீடு இங்கிருக்குமோ? அப்படி என்றால் இத்தனை மாதங்களில் ஒரு முறை கூட பார்த்ததில்லையே! அஃபிஷியலாகவோ அல்லது தோழியைப் பார்க்கவோ கூட வந்திருக்கலாம். அதற்காக, எட்டு, எட்டரை மணிக்கு திருவொற்றியூருக்கு எப்படி வந்திருக்க முடியும்?

'ஒருவேளை... உறவினர் வீடு இங்கிருக்கலாம். அப்படித்தான் இருக்கும்?

"என்ன மச்சான்... பேயடிச்சமாதிரி ஒரே இடத்தைப் பார்த்திட்டிருக்கே? கிளம்பு..."

***

'இருட்டை ரிசர்வ் செய்திருந்த இரவு, மாலைப்பொழுது நாற்காலியை விட்டு எழும் நேரத்திற்காக காத்திருந்தது.

கதிரவன் மேற்கில் முங்கி குளித்துக் கொண்டிருக்கும் போதே... அநியாயத்திற்கு சாலை விளக்குகள் எரிய ஆரம்பித்தன.



பனகல் பார்க் சிக்னலில் பச்சை விளக்கு எரிவதற்காக காத்திருந்தான் நந்தன்.

அவன் பக்கத்திலேயே இளமாறனின் காரும் வந்து நிற்க... அவசரமாக கண்ணாடியை இறக்கி, நந்தன் முகத்திலும் ஆச்சர்யம்.

"மாறா... நீ எங்கே இங்கே!"

"உதைப்பேன்... ஏழுவருஷமா சென்னையிலே பிஸினஸ் பண்றவன் நான். புதுசா நீ வந்துட்டு... என்னை கேள்வி கேக்கிறியா! என் பின்னாடியே வா...!"

ஐந்து நிமிட ஓட்டத்தில் கண்ணில் பட்ட ரெஸ்டாரெண்டில் அமர்ந்தனர்.

"நான் இங்கே வந்து நாலஞ்சு மாசமாச்சு. ஆக்ஸிஸ் பேங்கலதான் வொர்க் பண்றேன்."

"எங்கே தங்கியிருக்கே?"

"திருவொற்றியூர்ல... என் ஃப்ரெண்ட் ரூபோவோடா!"

"படவா... சொந்த பெரியப்பா மகன் நான்! கடல் மாதிரி வீடு அடையார்ல கட்டியிருக்கேன். என் கூடல்லே தங்கியிருக்கணும்! உங்கப்பா நம்பரைப் போடு... என் சித்தப்பா.. உன் புள்ளை பண்றது நியாயமான்னு கேக்கறேன்."

"ஐயோ நம்பு மாறா... நீ இங்கே இருக்கறது தெரியும். பட், காண்டாக்ட் நம்பர் இல்லே... அதான்."

"ஏன் உங்கண்ணன் பரதன்கிட்டே இருக்குமே... ஆறுமாசம் முன்னாடிக்கூட ஃப்ரெண்டோட தம்பிக்கு உன் ஆபிஸ்ல வேலைபோட்டுக் குடுன்னு போன் பண்ணினானே!"

"சரி... அதெல்லாம் விடு மாறா! பிஸினஸ் எப்படிப் போகுது? கல்யாணம் எப்ப?"

"அரைமணிநேரம் தங்கள், குடும்பம், பிஸினஸ் என்று பேசி முடித்தனர்.

"சரி... திங்க்செல்லாம் எடுத்துக்கிட்டு நம்ம வீட்டுக்கு வந்துடு!"

"கொஞ்சநாள் போகட்டும் மாறன். கண்டிப்பா வர்றேன்."

"பார்த்தியா... நான் உன் சொந்த அண்ணன்டா... என்

தயங்கறே!"

"நான் உன்னை அண்ணனாக்கூட நினைக்கலை. என் ஃப்ரெண்ட்! தயக்கமெல்லாம் ஒண்ணுமில்லே... ஏரியா இப்பதான் செட் ஆயிருக்கு... கொஞ்சநாள் போகட்டுமே... வந்திடறேன்."

"ஏரியாவா... இல்லை... பொண்ணு. கிண்ணுன்னு..." குறும்பாகப் பார்த்தான்.

"இருந்தா சொல்லமாட்டேனா? இந்த சண்டே உன் வீட்டுலதான் எனக்கு லன்ச்! ஓக்கேவா?"

"டன்! உன் ஃப்ரெண்டையும் கூட்டிட்டு வந்துடு!"

"சமையல் நீதானா?" கண்களில் சிறுபயத்தோடு கேட்டான்.

"எனக்கென்னடா தலையெழுத்து? நாலு கோடிக் கொட்டி பங்களா கட்டினவன் நாலஞ்சு வேலைக்காரங்களை வச்சுக்க மாட்டேனா? எக்ஸ் மினிஸ்டர் வீட்ல சமையல்காரனா இருந்தவன் தான் என் வீட்டு குக்! பயப்படாம வா!"

இருவரும் விடைபெற்றனர்.

வேலாயுதத்தின் சொந்த அண்ணன் குணசீலனின் மகன்தான் இளமாறன். அந்த காலத்திலேயே சவுதிக்குப் போய் ஏகத்துக்கும் சம்பாதித்து வந்து பரமக்குடியில் செட்டிலாகி விட்டார். அதனால் உறவுகளுக்குள் மெல்லிய இடைவெளி இருந்தது.

***

"என்னடா... இப்பல்லாம் ரொம்ப சந்தோஷமாத் தெரியறே! என்ன விஷயம்? உன்னை பெத்தவங்க மனசை காயப்படுத்தறதுக்கான ஆளை கண்டுபிடிச்சிட்டியா?" ஷேவிங் பண்ணிக் கொண்டிருந்த சூலோ... கண்ணாடியில் தெரிந்த நந்தனைப் பார்த்துக் கேட்டான்.

"கொஞ்சமாவது புரியறமாதிரி பேசக் கத்துக்கோயேன்!"

"கிண்டல்...ம்?! சரி... உனக்கு பிடிச்சமாதிரி பொண்ணுப் பார்த்து லவ் பண்ண ஆரம்பிச்சிட்டியான்னு கேட்டேன்!"

"ம்ஹூம்... எதையும் சொல்லமாட்டேன். நான் காதலிச்சா அது வித்தியாசமாதான் இருக்கும். மத்தவங்களை மாதிரி ஃப்ரெண்ட்ஸ்ங்களை அழைச்சிட்டுப் போய் அறிமுகப்படுத்தறது. பேசறத, சிரிக்கிறதுன்னு எதையும் பண்ணமாட்டேன்... எல்லாமே சீக்ரட்!"



"பார்க்கத்தானே போறேன்! ஃப்ரெண்ட்ஸ் தலையிடாத எந்த காதலும் உருப்பட்டதா சரித்திரமே இல்லே!"

"வேணாம்... உன் அழுகின வாய கொஞ்சம் மூடிக்கறியா!"

"ஆ...!"

"பார்த்தியா? எனக்கு சாபம் விட்டே! பதிலுக்கு உன் பிளேடு கன்னத்துல சிவப்பு கோடு போட்டுடுச்சு. நந்தனை வம்பிழுக்காதே... அவன் கற்புக்கரசன்டா!" ஜாலியாக லுங்கியை மடித்து கட்டிக் கொண்டு, டவலோடு பாத்ரூமிற்குள் நுழைந்தான்.

***

மூக்கை உறிஞ்சியபடியே... சமைத்தவைகளை ஹாலில் வைத்து மூடினாள் ரேகா.

"அண்ணா... இதை எடுத்துட்டுப் போய் அங்கே வச்சிடுங்க..."

"சரிம்மா! உடம்புக்கு முடியலியாம்மா? முகமெல்லாம் உப்புசமா இருக்கு... குரலும் சரியில்லே..." மாதவன் நாயர் கரிசனமாய் கேட்டார்.

"ஆமாண்ணா... சளி பிடிச்சிருக்கு!"

சளிபிடிச்சிருக்கு என்றாலும் அதையும் மீறி அவளை உடம்பு என்னவோ செய்துக் கொண்டிருந்தது. நெஞ்சுக்குள் கனமாய் இருந்தது.

வேதனையா? முடிவே இல்லாத கஷ்டங்களை கடவுள் சுமத்தியதால் உண்டான களைப்பா?

"அம்மா... மிஸ் உன்னை வரச்சொன்னாங்க!" பள்ளிக்குச் செல்ல தயாராய் இருந்த தினேஷ் அம்மாவை வந்து கட்டிக்கொண்டான்.

பள்ளியில் ஆண்டு விழாவில் மாறுவேடப் போட்டியில் தினேஷை சேர்த்திருந்தார்கள். அது விஷயமாய் பேசுவதற்கு அழைத்திருந்தார்கள்.

"மதியம் வந்து பார்க்கிறேன்னு சொல்லு. டிபன் சாப்பிட்டியா தினேஷ்?" மகனின் கன்னத்தை பாசமாய் வருடிக் கொடுத்தாள்.

"ஒரு இட்லிதாங்க்கா சாப்பிட்டான். சாப்பிட மாட்டேன்னு அடம்பிடிக்கிறான்." சாருமதி இட்லி தட்டுடன் வந்தாள்.

"அம்மா... நீ ஊட்டி விடும்மா..."

"வேலை பளுவில் சாப்பிட, குளிக்க, டிரஸ் பண்ண என்று சாருவும், தீபிகாவும் தான் கவனிக்கிறார்கள். ரேகாவால் நேரம் ஒதுக்க முடியவில்லை.

"சரி... இப்படிக் குடு... நான் ஊட்டிவிடறேன். உனக்கும் ஸ்கூலுக்கு டைமாய்டுச்சில்லே... நீ கிளம்பு!"

"சரிக்கா!"

ரேகா ஊட்ட... பிள்ளை இன்பமாய் சாப்பிட்டான். அந்த நிமிடத்திய சந்தோஷம்... எதாலும் நிரப்ப முடியாது போல் உணர்ந்தாள்.

அவனை பள்ளிக்கு அனுப்பிவிட்டு, ஏதோ தோன்றியவளாய் பீரோவைத் திறந்து பேங்க் பாஸ் புத்தகங்களை எடுத்துப் பார்த்தாள்.

சாருமதி, தீபிகா, தினேஷ், மூவருக்காகவும் சேமித்து வந்த தொகையைப் பார்த்தாள்.

ஆழ்ந்த பெருமூச்சு வெளிப்பட்டது.

'இன்னும் எவ்வளவோ உழைத்தாக வேண்டுமே!'

## 9

பேக்கை மாட்டிக்கொண்டு வெளியில் வந்தாள். மாலை நேர மாம்பலத்துக்கு சொல்லவா வேண்டும்? அத்தனை பேர் கால்களிலும் சக்கரம். இயல்பாய் தொற்றிக் கொண்ட பரபரப்புடன் தீபிகா நடக்க...

"எக்ஸ்க்யூஸ்மீ... மிஸ்... தீபிகா!"

"புத்தம் புதிய ஆண்குரலாய்... அவசரமாய் திரும்பினாள்.

இளமாறன்! காரின் மீது வாகாய் சாய்ந்திருந்தவன், இவளை நோக்கி வந்தான்.

தீபிகா வியப்புடன் அவனைப் பார்த்தாள்.

"என்ன தீபிகா... உங்க பேரை எப்படித் தெரியும்னு ஆச்சர்யமாயிருக்கா?"

"இதிலென்ன ஆச்சர்யம்? எங்க ஆபீஸ் பாஸோட ஃப்ரண்ட்! என் பேரை மட்டுமில்லே... எல்லாப் பொண்ணுங்க பேரையும் தான் தெரிஞ்சுவச்சிருப்பான்."



பதில் கூறாமல் பார்த்தாள்.

"நான் உங்ககிட்டே கொஞ்சம் பேசணும் தீபிகா. வாங்களேன்... பக்கத்திலே இருக்கிற காபி ஷாப்ல... சாப்பிட்டுக்கிட்டே பேசுவோம்."

அவன் நோக்கம் புரிந்தது. கண்கள் காதலைச் சொன்னது.

"ஸாரி... ஜென்ட்ஸோட பேசவோ, காபி சாப்பிடவோ எனக்கு பிடிக்காது. டைமாய்டுச்சு... நான் போகிறேன்."

அந்த பதில் அவனை சங்கடப்படுத்தினாலும், அதில் தெரிந்த அவள் குணமும், வளர்ப்பும் அவனுக்கு ரொம்பவே பிடித்தது.

"குட் தீபிகா! பட், என்னை சாதாரணமா நினைச்சிட்டீங்க. நான் பெரிய இன்டஸ்ட்ரியலிஸ்ட். இது என் கார்டு. கால் பண்ணுங்க... காத்திருப்பேன்!"

அவன் நீட்டிய விசிட்டிங் கார்டை சலனமின்றி வாங்கிக் கொண்டு," வர்றேங்க" என்று வேகமாய் நடந்தாள்.

அழகான, அடர்த்தியான பின்னலிடப்பட்ட கூந்தல் பாம்புரோல் நீண்டிருக்க... அதனுடன் பின்னழகும் போட்டிப்போட... நடந்து மறைந்தாள்.

சின்னச்சிரிப்புடன் காரில் அமர்ந்து உசுப்பினான் இளமாறன்.

தீபிகாவோ... தன்னை எண்ணி ஆச்சர்யப்பட்டாள்.

இளமாறனைப் பற்றி ஆபீஸில் பிற பெண்கள் பேசிக் கொள்வதுண்டு.

'அழகானவன், பணக்காரன், பெரிய கம்பெனி வைத்திருப்பவன், நம்மில் யாரையோ ஜூட் விடுகிறான். அது நானாக இருக்கக் கூடாதா?' என்ற ஏக்கமும் அவர்களிடம் உண்டு.

'அப்பேர்ப்பட்டவன் வலிய என்னிடம் பேச வந்தும் ஏன்... ஒரு சின்ன அலை கூட எழும்பவில்லை? மாறாக எரிச்சல்தான் உண்டானது?' கையிலிருந்த விசிட்டிங் கார்டை தண்டவாளத்தில் தூக்கி எறிந்தாள்.

***

"வாங்க தம்பி" படியேறி வந்துக் கொண்டிருந்த நந்தனை வரவேற்றாள் பாக்கியம்.

இரண்டு மூன்று பேர் சாப்பிட்டுக் கொண்டிருக்க... ஒரு ஓரமாய் அமர்ந்துக் கொண்டான்.

பாக்கியம் இலை கொண்டு வந்துப்போட்டாள்.

"உங்க கூட ஒரு தம்பி வருமே... வரலியா?"

"இன்னைக்கு அவங்க ஆபீஸ்லே முக்கியமான வேலையிருக்கு... வரலேட்டாகும்னு சொன்னான். இன்னும் வரலே... நான் கிளம்பி வந்துட்டேன்..."

"பாக்கியம் புன்னகை மாறாமல் சாப்பாடு பரிமாறினாள்.

"அம்மா..."

"சொல்லுங்க தம்பி!"

"நான் வேலைப் பார்க்கிற ஆபீஸ்ல எனக்கும் சேர்த்து பத்து பேருக்கு லஞ்ச் டெலிவரி பண்ண முடியுமா?"

"அப்படியா? உங்க ஆபீஸ் எங்கே இருக்கு?"

நந்தன் விளக்கமாய் சொன்னான்.

"என் பொண்ணை கேட்டுட்டு நாளைக்கு சொல்றேனே தம்பி!"

"பரவாயில்லேம்மா... டைம் எடுத்துக்குங்க... ஆனா, வயிறு நிறையற மாதிரி பதில் சொல்லுங்க..."

ஏனோ... நந்தனின் தோற்றமும், பேச்சும் பாக்கியத்துக்கு ரொம்பவே பிடிக்கும்.

கடைசியில் மோர் சாதம். மோர் காலியாகி விட்டிருந்தது. சாதத்துடன் காத்திருந்தான் நந்தன்.

"ஒரு நிமிஷம் தம்பி... ரேகா... ரேகா... மோர்க் காலியாப்டுச்சு. பார்... கொண்டு வா!" உள்ளேப் பார்த்து குரல் கொடுத்தாள்.

சாருமதி சாப்பிட்டுக் கொண்டிருக்க... ரேகா தினேஷை மடியில் போட்டு தூங்கவைத்துக் கொண்டிருந்தாள்.

ரேகா எழ முற்பட.... பழைய வார இதழை புரட்டிக் கொண்டிருந்த



தீபிகா, "இருக்கா... நான் எடுத்துட்டுப் போறேன்" என்றாள்.

"நீயா... அங்கெல்லாம் வேண்டாம்... நானே..."


"ப்ச்... என்னக்கா... கஷ்டப்பட்டு பொழைக்கிற பொழைப்பு இது. எதுவும் அசிங்கமில்லே..." தீபிகா கிச்சனிலிருந்த மோர் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு வெளியில் வந்தாள்.

"ரேகாயில்லே?"

"அக்கா வேலையா இருக்காம்மா!"

"சரி... இப்படி வச்சிட்டுப் போ!"

"டேபிள் மீது வைத்துவிட்டு நகரப்போனவள் யதார்த்தமாய் அவனைப் பார்க்க... அதிர்ந்துப் போனாள்.




"இவளா... இங்கேயா?"

நந்தனும் பார்த்துவிட்டான்.

மிகைப்பட்ட அதிர்வுடன் எழுந்துவிட்டான்.

'இவளா?'

"என்ன தம்பி எந்திரிச்சிட்டே? இதோ வந்துட்டேன்!"

பாக்கியம் அவசரமாய் கல்லாவிலிருந்து எழ, அவன் கைப்பட்டு கிண்ணத்திலிருந்த சில்லறைகள் சிதற... சங்கடமாய் சிரித்தாள்.

"தீபிகா... அந்த தம்பிக்கு கொஞ்சம் மோர் விடு!"

'தீ..பி..கா...' உச்சரித்துப் பார்த்தான்.

பல்ஸ் அதிகமாய் எகிற... மோர் பாத்திரத்துடன் அவள் அருகில் சென்றாள்.

இலையில் மோர் விட்டாள்.

"தாங்க்ஸ்..." என்றான்

தீபிகா அம்மாவிற்கு உதவியாய் சில்லறைகளைப் பொறுக்க... நந்தன், "ரூஸோ வீட்டுக்கு வராம நேரா... இங்கே வந்தாலும் வருவான். அவன்கிட்டே நந்தன் சாப்பிட்டுட்டான்னு சொல்லிடுங்கம்மா!'' என்றான் தீபிகாவை பார்த்துக் கொண்டே.

"உன் பேரு நந்தனாப்பா. இதுநாள் வரைக்கும் தெரிஞ்சுக்கலே பாரு. அந்த தம்பி வந்தா சொல்லிடறேன்ப்பா!" என்றாள் பாக்கியம்.

தீபிகா தன் வேலை முடிந்தபின் உள்ளே சென்றாள். செல்லு முன் அவனைத் திரும்பி ஒரு பார்வை பார்த்தாள்.

அந்த கண்கள் சிரித்ததுப் போலவும் தோன்றியது. சலனமின்றியும் தெரிந்தது.

எதுவாய் இருப்பினும்... அவளை அங்கு பார்த்தது... அவள் அவனை மறுபடி பார்த்தது... சட்டைக்குள் பட்டாம் பூச்சியை பிடித்துப் போட்டதுபோல்... குறுகுறுப்பாய் இருந்தது.

அவன் வாழ்நாளில் இப்படியொரு சந்தோஷமான நாளை சந்தித்ததாய் நினைவே இல்லை.

தீபிகா... பாக்கியத்தின் மகள் என்பது இன்று தான் தெரியும். அவர்களின் வாழ்க்கைத் தரம் என்ன என்பதும் புரிந்து விட்டது.

அடடா... நான் காதலித்தப் பெண் மிக சாதாரண... மெஸ் நடத்தி வாழ்க்கையை ஓட்டும் ஏழைப் பெண்மணியின் மகளா? என்ற சிறு கேள்வியோ, சஞ்சலமோ ஏன் ஏற்படவில்லை?

நான் நேசிப்பது... பவித்ரமான குணத்தையல்லவா?

ஒரு கணம் தன்னையும், தன் காதலையும் பெருமையாக நினைத்தான்.

'என்னை அவளும் கவனித்திருக்கிறாள் என்றுதானே?' அந்த நினைப்பே... நந்தனின் இரு தோள்களிலும் சிறகை வளர வைத்தன.

அன்றிரவு... அவன் பசை போட்டு ஒட்டியும் இமைகள் ஒன்று சேர மறுத்தன.

***



தினேஷிற்கு இரண்டு நாட்களாய் சளி... இருமல்!

தூக்கத்திலும் பிள்ளை சிரமப்பட்டு இரும... பக்கத்தில் படுத்திருந்த தீபிகா... அவன் முதுகை மெல்லத் தட்டிக் கொடுத்தாள்.

இருமல் மட்டுப்பட்டது.

அவளுக்கு இன்னமும் ஆச்சர்யம் அடங்கவில்லை. அவனுக்கு தன் கையால் பரிமாறியதையும் நம்ப முடியவில்லை.

அம்மாவும், அக்காவும் அவன் ஆபீஸிற்கு லன்ச் டெலிவரி பண்ண முடியுமா என்று கேட்டதை விவாதித்த போது... சில விஷயங்கள் தெரிந்துக் கொள்ள முடிந்தது.

தன் நண்பனுடன் வீடெடுத்து இதே ஏரியாவில்தான் தங்கியிருக்கிறான். இத்தனை நாள் எப்படி கண்ணில் படாமல் போனான்?

அது கூட பரவாயில்லை. ஒரு மாதமாய் இரண்டு வேளையும் இங்கேதான் வந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான். அதைக்கூட எப்படி கவனிக்காமல் விட்டேன்?

எல்லாம் சரி! இத்தனை நாளாக நான் யார் என்று தெரியாமல்... என்னை ஒரு நிமிடம் பார்ப்பதற்காக பல நிமிடங்கள் காத்திருந்தான். ஆனால், இன்று என் அந்தஸ்து என்ன என்பது தெரிந்திருக்கும். இப்போது அவனுக்குள் என் நிலைப்பாடு என்னவாக இருக்கும்?

இல்லையே... என்னை இங்கு பார்த்த ஆச்சர்யம்தானே அவன் முகத்தில் மேலோங்கி இருந்தது.

அதிர்ச்சி அல்லவே?

அதன் பிறகுதானே... அவனின் பெயரை நாசுக்காக எனக்குத் தெரியப்படுத்தினான்?

கேட்ட வினாவிற்கு பதில் கிடைத்ததும் அவளின் வடிவான ஈர உதடுகள் சந்தோஷத்தில் விரிந்தன.

'ந...ந்..த...ன்!' தனக்குள் உச்சரித்துப் பார்த்தபோது... நந்தனின் சட்டைக்குள் சில்மிஷம் பண்ணிய பட்டாம்பூச்சி... பறந்து வந்து அவள் நைட்டியின் மேல் அமர்ந்தது.

## 10

இப்போதெல்லாம் அடிக்கடி ஹாலுக்கு வந்து நந்தனின் இலை தென்படுகிறதா என்று பார்த்தாள்.

அவனைப் பார்த்துவிட்டால்... இதயம் பலவீனமாகி விட்டதோ எண்ணுமளவிற்கு துடிதுடிக்க... உள்ளே வந்துவிடுவாள்.

அந்த ஒரு கணத்திற்காகவே... அவள் வழிப்பார்வையை தாங்கிக் கொள்ள... உள்ளம் விரித்து ஏக்கமாய் காத்திருப்பான் நந்தன். இப்போதெல்லாம் ரூஸோ," சீக்கிரம் சாப்பிடுடா... நேரமாகுது..." என்று நச்சரிப்பது வழக்கமாயிற்று... விஷயம் தெரியாமல்.

அங்கு தரிசித்தது போதாமல்... வழக்கம்போல் அவள் அலுவலகம் செல்லும் பாதையிலும் காத்திருப்பான்.

ஓரவிழியால் அவனை ஒத்தடம் கொடுப்பதுபோல் பார்த்துவிட்டு, சிறு புன்னகையை இழதோரம் நழுவவிடலாமா, வேண்டாமா என்ற போராட்டத்துடன் நகர்ந்து விடுவாள்.

அந்த தவிப்பும், மனத்துடிப்பும், பேசிவிடலாமா என்ற கோழைத்தனமான தைரியமும்... அந்த வயசுக்குரிய இன்பங்கள். மறுபடி வாழ்க்கையில்... கிடைக்காத மணித்துளிகள்.

காதலிப்பதை விட, காதலை சொல்லி விடுவதை விட... அதற்கு முன் உள்ள காலக்கட்டம்... ஒவ்வொரு மனிதனுக்கும், மனுஷிக்கும் மறக்க முடியாத ரகசியப் பெட்டகம்!

நந்தன் மிக எளிதாய் தீபிகாவின் செல்போன் நம்பரை அறிந்துக் கொள்கிறான்.

இன்டர்நெட்டில், சாட்டிலைட் மூலமாக... ஒவ்வொரு ஏரியாவின் தெருவையும். அதன் வீடுகளையும் கண்டறிய முடிகிறபோது... தீபிகாவின் போன் நம்பர் கிடைக்கப் பெறுவது ஒரு காதல் கொண்ட ஆணுக்கு பெரிய விஷயமா என்ன?

பலநாள் யோசித்து ஒருநாள் தைரியத்தை வரவழைத்து அவள் நம்பருக்கு தன் காதலை வெளிப்படுத்தி மெஸேஜ் அனுப்பினான். பிடித்திருந்தால் காதலை சொல்லவும். பிடிக்காவிட்டால்... தான் ஒதுங்கிக் கொள்வதாகவும் மிகவும் நாகரீகமாக அனுப்பியிருந்தான்.

என் நம்பர் அவனுக்கு எப்படி தெரிந்தது? என்ற பழமைத்தனமான



ஆராய்ச்சியில் தீபிகா இறங்கவில்லை. அது இந்த யுகத்தில் பெரிய விஷயமில்லை என்பதும் தெரியும். அதெல்லாம் விட,.. மெஸேஜில் தெரிந்த நாசூக்கும், நாகரீகமும் அவளை ரொம்பவே ஈர்த்தது.

ஒரு கணம் அம்மாவின் முகம் நினைவிற்கு வந்தது.

'காதல் என்றாலே அம்மா வெட்டி கூறுபோட்டு விடுவார்களே!

'ஆனால், அம்மாவிற்கு நந்தனை நன்கு தெரியும். நல்ல பையன் என்று அடிக்கடி கூறக்கேட்டிருக்கிறேனே! சமாளித்துக் கொள்ளலாம்!' காதல்... தைரியத்தைக் கொடுத்தது.

அன்றெல்லாம் வேலையில் கவனம் பதியவில்லை. நூறு முறையாவது அவன் அனுப்பிய மெஸேஜை படித்திருப்பாள். ஆனால், பதில் அனுப்ப தைரியமில்லை.

மாலை... அதே நினைவுகளுடன் மிதந்தபடி ரயில்வே ஸ்டேஷனை நோக்கி சென்ற சமயம்... அவளுக்காக ஸ்டேஷன் வாசலில் காத்திருந்தான் இளமாறன்.

அவனைப் பார்த்ததும் எரிச்சல் மண்டிக்கொண்டு வந்தது. பார்க்காதது போல் வேறுப்பக்கம் பார்வையை ஓடவிட்டபடி அவனைக் கடந்து செல்ல முற்பட... "தீபிகா..." என்றழைத்தான்.

"அ...நீங்களா? என்ன? அப்போதுதான் பார்ப்பது போல் பார்த்து கேட்டாள்.

"பேசணும்!" அவள் முகத்தை அழமாய் வருடியபடி உறுதியான குரலில் சொன்னான்.

"சொல்லுங்க!"

"இங்கேயேவா?"

"பரவாயில்லை!"

"என்கிட்டே எத்தனைபேர் வேலை செய்யறாங்கத்தெரியுமா? மாசத்துல பத்து நாள் பிஸினஸ் விஷயமா ஃபாரின்ல இருப்பேன். என்னைப் பார்க்கணும்னா ஒருவாரம் முன்னாடியே அப்பாய்ண்ட்மெண்ட் வாங்கணும். என்னோட ஒவ்வொரு நிமிஷமும் பணத்தாலானது அப்படிப்பட்டவன் தினமும் உன்னை பார்க்க இந்த ஆபீஸிற்கு ஓடி வர்றேன்னா... என்ன அர்த்தம் தீபிகா?"

"........?!"

"உன்னை எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு. அந்தளவுக்கு நேசிக்கிறேன்னு அர்த்தம்..."

"சார்... ப்ளீஸ்..."

"........?!"

"அவசரப்பட்டு எதுவும் சொல்லிடாதீங்க. உங்க தகுதி. அந்தஸ்த்து எல்லாமே பார்த்தாலேப் புரியது. ஆனா, உங்கமேலே எனக்கு அப்படியொரு எண்ணம் வந்ததேயில்லே. அதுமட்டுமில்லே... நான் ஒருத்தரை நேசிக்கிறேன்."

"தீ...பி...கா!" அந்த பதில் அவனை நிலை தடுமாற வைத்தது.

"யோசிச்சுப் பாருங்க... என்னை விட யாரும் பெட்டரா இருந்துவிட முடியாது."

என்ன பேசுகிறோம் என்றுணராமல் இளமாறன் பேச... வெறுப்புடன் நோக்கினாள்.

"இருக்கலாம். ஆனா நேசத்துக்கு எடைபோடத் தெரியாது சார். இப்படிப் பேச உங்களுக்கே அபத்தமாகத் தெரியலே... ப்ளீஸ்... இனி டிஸ்டர்ப் பண்ணாதீங்க சார்!" கோபத்துடன் வேகமாய் நடந்து படியேறினாள்.

இளமாறன் திகைத்துப் போயிருந்தான்.

★★★

'இன்னும் பதில் வரவில்லையே!' என்று மெஸேஜ் அனுப்பியிருந்தான் நந்தான்.

மெல்ல வாசலுக்கு வந்து எட்டிப்பார்த்தாள்.

நந்தன் அப்போது தான் சாப்பிட அமர்ந்தான். உடன் வரும் ரூஸோ, அன்று வரவில்லை. வேறு சிலர் சாப்பிட்டு முடிக்கும் தருவாயில் இருந்தனர்.

உள்ளே வந்தாள்.

சாருமதி உறங்கி விட்டிருக்க... தினேஷை உறங்க வைத்துக் கொண்டிருந்தாள் ரேகா.

மாதவன் நாயர் மூன்று நாள் லீவில் போயிருந்தார். கோவிந்தனை



அம்மா வேறு வேலையாய் வெளியில் அனுப்பியிருந்தாள்.

என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்த வேளையில் ஐந்து நிமிடம் கழித்து அம்மா உள்ளே வந்தாள்.

"ரேகா..."

"சொல்லும்மா!"

"மளிகைக்கடையில கணக்கை செட்டில் பண்ணிட்டு வந்திடறேன். வெளியே கொஞ்சம் பார்த்துக்க...!"

"மாவு வழிக்கணும்ம்மா... சரி... போ..." என்றாள் தயக்கமாய்.

பாக்கியம் வெளியேற... தினேஷை படுக்கையில் கிடத்தி விட்டுவரவும்... தீபிகா எதிரே வந்து நின்றாள்.

"இப்பெல்லாம் ரொம்ப டல்லாயிருக்கே... என்னக்கா உடம்பு சரியில்லையா?"

"அதெல்லாமில்லே... விடு..."

"நில்லுக்கா... நீ மாவரைக்கிற வேலையைப் பார்... நான் கஸ்டமர்களை பார்த்துக்கிறேன்."

"உனக்கேன் அந்த வேலை... நீ போய் படு..."

"இருக்கட்டும்க்கா... நீ மட்டும் செய்யலாம்... நான் செய்யக்கூடாதா? அம்மா மாதிரியே பேச ஆரம்பிச்சிடாதே... நான் பார்த்துக்கிறேன்... நீ உன் வேலையைப் பாரு!"

ரேகாவிற்கு அயர்ச்சியாய் இருக்க... சரியென கிரைண்டர் பக்கம் போய்விட்டாள்.

குஷியுடன் வெளியில் வந்தாள்.

அங்கு நந்தனைத் தவிர யாருமில்லை. அதுவும் இலையை மூடப்போகும் ஸ்டேஜில் இருந்தான்.

அவளைப்பார்த்ததும்... கையிலிருந்த சாப்பாடு இலையில் விழுந்தது.

அவள் கோபமாய் ஏதாவது சொல்லிவிடுவாளோ என்று பயந்தான்.



## தேவை வெந்தயம்

கண் எரிவது, வயிறு சூடா இருக்கு, தலை சுடுது என்று உடல் சூடாக இருக்கும் பலர் சொல்வார்கள். அந்த உடல் சூட்டை தணிக்கக் கூடிய வழிகளில் சிறந்த எளிய முறை வெந்தயம் தான். அதற்கு செய்ய வேண்டியது ஒரு டேக்கரண்டி வெந்தயத்தை இரவே நீரில் ஊற வைக்க வேண்டும். காலை அந்த ஊறிய வெந்தயத்தை மிக்சியில் அரைத்து தலையில் தேய்த்து 10 நிமிடம் வைத்திருக்க வேண்டும். பிறகு குளித்தால் உடல் சூடு தணியும். ஷாம்பு மாதிரி நுரை வரும். அழுக்கும் அகலும். காலையில் வெறும் வயிற்றில் ஒரு டேக்கரண்டி வெந்தயத்தை நீருடன் அருந்தினால் உடல் சூடு தணியும். நாள் முழுவதும் ஒரே இடத்தில் அமர்ந்து வேலை செய்பவர்கள் கண்டிப்பாக சாப்பிட வேண்டும்.

அருகில் வந்தாள்.

"சாப்பாடு..."

"போதும்..."

"சரி... அப்ப எந்திரிங்க!" வெட்கத்துடன் தரையைப் பார்த்துப் பேச...

நந்தன் பொம்மையைப் போல் கைகழுவச் சென்றவன் மெல்ல அவளை திரும்பிப் பார்த்தான்.

அவன் பார்த்த காட்சியை அவனாலேயே நம்ப முடியவில்லை.

தீபிகா... அவன் இலையில் மீதிருந்த சாப்பாட்டை எடுத்து சாப்பிட்டுக் கொண்டிருந்தாள். அவனைப் பார்த்த பார்வையில், 'உங்கள் கேள்விக்கு பதில் கிடைத்து விட்டதா?' என்று தெரிந்தது.

நந்தனுக்குத் தாங்க முடியவில்லை.

அவன் எதிர்பார்த்ததுப் போலவே சங்க காலப் பெண்களைப் போல் தன் காதலை அவள் வெளிப்படுத்தியிருந்த விதம்... எம்பி எம்பி குதிக்க வேண்டும் போல் தோன்றியது.

அவன் அவளை நெருங்கி வந்தபோது... பதற்றமாகி உள்ளே



ஓடினாள்.

***

நந்தன் எதிர்பார்த்த அத்தனை குணங்களும் தீபிகாவிடம் இருந்தன.

அவளின் வெட்கம், பயம், தயக்கம், காற்று உரசினால் கூட பதட்டமாகி முறைக்கிற எச்சரிக்கை, போனில் கூட பத்து நிமிடத்திற்கு மேல் பேச அனுமதிக்காத கட்டுப்பாடு, வெளியில் சந்திக்க அழைத்தால், வர மறுக்கும் உறுதி, அவன் சாப்பிட வருகையில் சட்டென முகம் காட்டி மறைந்து கொள்ளும் குறும்புத்தனம்... எல்லாமே நந்தனுக்கு அவள் மேல் காதலை அதிகரிக்கச் செய்தன.

அவளுடன் மணிக்கணக்கில் அமர்ந்து பேச வேண்டும் என்ற ஆசையை அதிகரிக்கச் செய்தது. அவளுடன் உரசியபடி பைக்கில் பறக்க வேண்டும் போல் ஆவல் ஏற்பட்டது.

தீபிகா அவனிடம் எண்ணி எண்ணிதான் வார்த்தைகளை செலவிடுவாள்.

அவன் குடும்பம் பற்றியும், தன்னை ஏற்றுக் கொள்வார்களா என்பது பற்றியும் போனில் பேசியபோது, "யார் தடுத்தாலும் நீதான் என் மனைவி! உழைப்பால்... பாடுபட்டு வளர்க்கும் உன் அம்மாவை என் பெற்றோர் வியந்து பார்ப்பார்கள். உன் குணம் என் பெற்றோர் வியந்து பார்ப்பார்கள். உன் குணம் யாரையுமே வசியப்படுத்தும். பணத்தை பெரிதாய் எண்ணுபவர்கள் அல்ல என் பெற்றோர். கண்டிப்பாய் ஊரறிய... பெற்றோர் சம்மதத்துடன் தான் நம் திருமணம் நடக்கும்!" என்றான்.

உறுதியாய்.

அந்த வார்த்தையிலிருந்த சத்தியத்தை தீபிகா உணர்ந்து கொண்டாள்.




**போ**னில் பேசும் பத்து நிமிடங்கள் என்ன பேசுவது? என்ற மௌனத்திலேயே கரைய... அவர்களுக்குள் மௌனமே காதலாய் வளர்த்து கொண்டிருந்தது. கணநேர பார்வை பரிமாற்றங்கள்... காதலுக்கு தேனூற்றி வளர்த்தது.

இந்த விஷயம் எதுவும் ருணோவுக்கு தெரியாது. அது தீபிகாவிற்கு வீணான சங்கடங்களை உருவாக்கும் என்பதில் கவனமாய் இருந்ததோடு, சமயம் வாய்க்கும் போது பெற்றோருடன் தீபாகாவை பெண் கேட்டு... மரியாதையோடு மணக்கவேண்டுமென்பதில் உறுதியாய் இருந்தான் நந்தன்.

***

ஞாயிறு!

தன்னறையில்... குறுமேசையில் ஸ்காட்ச் சமாச்சாரங்களோடு... போதையில் அமர்ந்திருந்த இளமாறனின் கண்கள் சிவந்திருந்தன. அதற்கு கோபமும் ஒரு காரணம்.

என்னவோ தெரியவில்லை... தீபிகாவை அவனால் எளிதில் மறக்க முடியவில்லை. குழந்தைத்தனம் மாறாத டீன்ஏஜ் முகம் தீபாகாவிற்கு. சிரிக்கும்போது, செல்லம் கொஞ்சத் தூண்டும் அழகு. அவனின் இளமையும், வசீகரமும் தனக்கு ஏற்றப் பெண், அவள்தான் என்று பார்த்ததுமே முடிவு செய்தான். அவன் கேட்டால்... இதற்காகத்தானே காத்திருந்தேன் என்ற ரீதியில் தொப்பென காலில் விழுவாள் என்று எதிர்பார்த்தான். ஆனால், யாரையோ காதலிக்கிறேன் என்று மறுத்துவிட்டாள். அப்படியும் நேற்று மறுபடியும் அவளிடம் பேசினான்.

"நான் உனக்கு பெட்டர் சாய்ஸ் தீபிகா? என்னை விடவா வேறொருவன் பெட்டராய் இருக்க முடியும்? அந்தக் காதலை தூக்கி எறி... உன்னை நான் உச்சத்தில் வைத்திருப்பேன்" என்றதற்கு, "செருப்பு பிஞ்சிடும் ராஸ்கல்! உன் பணத்தை காட்டி என்னை மனசு மாறவச்சிடலாம்னு கணக்குப்போடாதே! உனக்கு இனி அவ்வளவுதான் மரியாதை... இனி நான் பேசமாட்டேன்..." என்று எழுபதுகளில் வந்த சினிமா நாயகி மாதிரி வசனம் பேச... அரண்டு போனான் மாறன்.

மனசு கசந்துப் போயிற்று.

'நான் இவளை மனசில் எந்த இடத்தில் வைத்திருந்தேன்? இவளானால்'

"நந்தன்... உள்ளே வரலாமா?"

"ஏய்... வா... வா... வாட் எ சர்ப்ரைஸ்? போன் கூட பண்ணாம? நீ மட்டுமா வந்தே? உன்னோட ரூம் மேட்.... பேரென்னவோ சொன்னியே..." கதவைத் திறந்து கைப்பற்றி உள்ளே இழுத்து வந்து



சோபாவில் அமர வைத்தான்.

"ரு...ணோ!" என்றான் மேஜையில் இருந்த சமாச்சாரங்களை ஒரு மாதிரி பார்த்து.

"யா... வரலே?"

"ஊருக்குப்போயிருக்கான்!"

"என்ன அப்படிப் பார்க்கறே? உனக்கு பழக்கமில்லே?"

"ம்ஹூம்... ஐஸ் வாட்டர் கூட குடிக்க மாட்டேன்!" பெரிதாய் சிரித்தான்.

"நல்லா வளர்த்திருக்காங்க சித்தி... அம்மாஞ்சி மாதிரி. இதிலே என்ன தப்பிருக்கு? வாழ்க்கையை அனுபவிக்கணும்... சரி விடு... உன் ஆபீஸ்வொர்க் எப்படி போயிட்டிருக்கு? எப்ப கல்யாணம்! வீட்ல பொண்ணு பார்த்துக்கிட்டிருக்கறதா கேள்விப்பட்டேன்!"

"என்னை விடு... வயசுல நீ சீனியர்... உனக்கெப்ப கல்யாணம்?"

"கொஞ்சநாள் போகட்டும்..." என்றான் விட்டேற்றியாக.

"ஏன் ஒரு மாதிரி பேசறே?"

எனக்கென்ன நந்தன் குறைச்சல்? ஒருத்திய லவ் பண்ணினேன். மனசுல இருக்கறதை சொன்னேன். இன்சல்ட் பண்ணிட்டாடா..." போதையில் உண்மை வெளிவந்தது.

"யாரது? எங்கேயிருக்கா?"

"பச்... அவளை நான் பார்த்துக்கறேன். ஆனா, நான் எவ்வளோ பெரிய கோடீஸ்வரன்? என் பர்சனாலிட்டி என்ன? சத்தியமா சொல்றேன்டா... இதுவரைக்கும் எத்தனையோ பார்ட்டி, டிஸ்கொதே எல்லாம் போயிருக்கேன். ஒருத்தியக் கூட தொட்டதில்லே. அந்த மாதிரி எல்லாம் என் புத்தி போனதே இல்லே. குடிப்பேன்... தட்ஸால், மத்தபடி ஐயம் பர்பெக்ட்! எந்தப் பணக்காரன் என்னை மாதிரி இருப்பான் இந்த காலத்திலே? அவள் என்ன அழகாயிருக்கா... கண்டிப்பா பணக்காரி இல்லே... அப்படி மிடில் க்ளாஸா இருப்பா... ஆனா, எத்தனை திமிரு? வேற எவனையோ லவ் பண்றாளாம். நீயே சொல்லு... அவன் என்னைவிடவா பெட்டரா இருப்பான்?"

தவறு எங்கே என்று புரிய... இளமாறனின் கையைப் பற்றிக் கொண்டான்.

"அவனுக்கு குடுத்து வைக்கலே... சரின்னு விட்டுத்தள்ளு... என் அண்ணி அவளை விட சூப்பரா இருப்பாங்க..."

"இல்லேடா... அவ ரொம்ப நல்லாயிருப்பாடா..."

"இருந்துட்டுப் போகட்டும்... ஊர்ல வேற பொண்ணா இல்லே? உன் கூட லன்ச் சாப்பிடணும்னு ஆசையா வந்தேன். நீ என்னடான்னா [illegible]ட் அவுட்டாயிட்டு... சரி நான் கிளம்பறேன்..."

"டேய்... டேய் உக்காருடா... சரி அவளைப் பத்திப் பேசலே... என்ன சமைக்க சொல்லட்டும்! உனக்கு என்னல்லாம் சாப்பிடணும்னு தோணுதோ... அதையெல்லாம் சொல்லு... சமையல்காரனைக் கூப்பிடறேன். பஸ்ஸரை அழுத்தினான்.

அடுத்த நிமிடம் சமையல்காரன் வந்து நின்றான்.

★★★

சாருமதியை துணைக்கு அழைத்துக் கொண்டு இருபத்திநாலு மணிநேர மருத்துவமனைக்கு வந்திருந்தாள் ரேகா.

இரண்டு நாட்களாய் காய்ச்சல் விடவில்லை. சளித்தொந்தரவும் அதிகமாய் இருந்தது. அதிரும்படி இருமல் எதிரொலிக்கும்.

லேடி டாக்டர் பரிசோதித்து காய்ச்சலுக்கு ஊசியும், இருமலுக்கு சிரப்பும் மாத்திரைகளும் எழுதித் தந்து பத்து நாட்களுக்கு தொடர்ந்து பயன்படுத்தும்படி கூறினார்.

ரேகாவிற்கு தனக்கு காய்ச்சல் வந்ததுக் கூட பெரிதாய் நினைக்கவில்லை. மெஸ்ஸிற்கு சாப்பிட வருபவர்கள் முன் இருமிக் கொண்டும், மூக்கை உறிஞ்சிக் கொண்டும் இருந்தால் முகம் சுளிப்பார்களே!

அவள் தன் கவலையை வெளிப்படுத்தியபோது, "இதுக்கு ஏன் கவலைப்படறே? நீ உடம்பைப் பார்த்துக்க... மாத்திரை எல்லாம் சரியாப்போடு... நான் மெஸ்ஸை பார்த்துக்கிறேன்க்கா!" என்ற சாருமதியை சூடான கரத்தால் சேர்த்தணைத்துக் கொண்டாள்.

"அதெல்லாம் வேண்டாம் சாரு... நீ படிப்பில் கவனமாயிரு... வேலைக்கு ஆளா கிடைக்கமாட்டாங்க?"

அன்று வலுக்கட்டாயமாய் அவளை ஓய்வெடுக்க வைத்துவிட்டு தீபிகா மாவரைத்தபோதுதான்... அதன் கஷ்டம் புரிந்தது.

இதையும் செய்துக் கொண்டு, சமையலும் செய்து...



வாடிக்கையாளர்களையும் கவனித்து... அம்மாவும், அக்காவும் இந்த அளவுக்கா கஷ்டப்படுகிறார்கள்?'

அப்போதே முடிவு செய்தாள்.

'இனி வேலை முடிந்து வந்ததும் அட்லீஸ்ட் இந்த மாவரைக்கிற வேலையாவது நாம் செய்ய வேண்டும்' என்று. அதை அன்றிலிருந்தே செயல்படுத்தவும் தொடங்கினாள்.

நாட்கள் நகர்கின்றன.

ரூஸோவுக்கு திடீரென்று திருச்சிக்கு மாற்றலாக... மனமேயின்றி, நந்தனை விட்டு திருச்சிக்குச் செல்கிறான். நந்தனுக்கு அவன் பிரிவு வருத்தத்தைத் தந்தாலும் தீபிகாவின் காதல்... எல்லாவற்றையும் சமாளிக்க வைத்தது. முன்பு போல் மெஸ்ஸில் அவளை பார்க்க முடிவதில்லை. என்ன வேலையோ, பிரச்னையோ அவன் வரும் நேரங்களில் அவள் கண்ணில் படுவதில்லை. சில சமயங்களில் ஆபீஸ் போகும் வழியில் கூட பார்க்க முடிவதில்லை. சீக்கரமாகவோ, தாமதமாகவோ சென்று விடுவதால், சாலையோரம் காத்திருந்து ஏமாந்து போவான்.

மற்ற காதலர்களைப்போல நினைத்த நேரங்களில் எல்லாம் போன் பண்ணிவிட மாட்டான். அவளும் போன் பண்ணமாட்டாள். அவள் டிரெய்னில் பயணிக்கும் நேரங்களில்தான் போனில் பேசுவதெல்லாம். அவர்கள் காதலிக்க ஆரம்பித்து பேசிய பேச்சுக்களை எல்லாம் இரண்டு பக்கம் பேப்பரில் எழுதிவிடலாம். அவ்வளவுதான்!

இன்றும் அவளைப் பார்க்க முடியவில்லை. மூன்று நாட்களாகி விட்டது அவளைக் கண்களில் நிரப்பி!

இன்று எப்படியாவது பார்த்தே விடுவது என்ற முடிவுடன் அலுவலகத்தில் பர்மிஷன் போட்டு சீக்கிரமே கிளம்பிவிட்டான். அவள் ரயில்வே ஸ்டேஷன் நோக்கி செல்லும் பாதையில்... அலுவலகம் பக்கத்தில் பைக்கில் அமர்ந்தபடி காத்திருந்தான்.

அப்போது முதுகில் வலிக்காமல் ஒரு அடி விழுந்தது. திகைப்புடன் திரும்பினான்!

இளமாறன்!

"என்ன நந்தன் இங்கே?" கண்களில் குறும்பும் சந்தேகமுமாய் கேட்டான்.

"நீ எங்கே இப்படி?"

"நான் பிஸினஸ்மேன் தம்பி... கார்ல பறந்துக்கிட்டேயிருப்பேன். பார்த்தா... நீ யாருக்காகவோ காத்திருக்கிற மாதிரி தெரியுது!"

"இ...இல்லே... சும்மாதான்!"

"என்ன... டாவா?"

அதற்கு மேல் நடிக்க சாமர்த்தியமின்றி சங்கடமாய் சிரித்தான்.

"ம்...!"

"அடப்பாவி! இந்த ஊருக்கு வந்து எட்டு ஒம்பது மாசம்தான் ஆகுது! அதுக்குள்ளே மாயவலையில விழுந்துட்டியா?

"..........?!"

"சரி... யாரு.... என்ன பண்றா?"

"இப்ப வருவா... காட்டறேன்!' ஆனா, நான் உனக்குக் காட்டப்போறது அவளுக்குத் தெரிய வேணாம்... நீ அப்படி ஓரமா நில்லு!"

"ரொம்ப நல்லாயிருக்கு!" கிண்டலாய் சொன்னவன் காரை ஒரு தெருவில் நிறுத்தி விட்டு டீக்கடை வாசலில் நின்றான்.

சற்று நேரத்தில் தீபிகா அந்தப் பக்கமாய் வர... அங்கு நின்றிருந்த நந்தனை பார்வையால் தழுவியபடி சின்னப் புன்னகையை உதிரவிட்டு கடந்துவிட... நந்தன் மாறனிடம் சைகை மூலம் அவளைக் காட்ட...

தூக்கி எறியப்பட்டான் இளமாறன்!

12

இரவுகளில் பெரும்பாலும் மதுவைத் தொடுவதில்லை இளமாறன். ஆனால், இன்று இரண்டு முழுபாட்டில்கள் உள்ளே இறங்கியும் போதை ஏறவேயில்லை.

அவன் உள்ளம் கனன்றுக்கொண்டே இருந்தது. நந்தன் தயங்கித் தயங்கி தீபிகாவைப் பற்றிச் சொன்ன விபரங்கள் கோபத்தையும், ஏளனத்தையும் ஏற்படுத்தின.

இவர்களின் காதலின் வயது மூன்று மாதம்தான். ஆனால், நான் கிட்டதட்ட ஒரு வருடமாய் அவள் காதலுக்காகக் காத்திருந்தேன்.

'எத்தனைத் திமிர்? யாரிடம் கேட்டுப் பார்த்தாலும்



சொல்லிவிடுவார்கள்... எல்லா விஷயத்திலும் நந்தன் எனக்கடுத்துதான் ஆஃப்ட்ரால் சாப்பாடு கடை நடத்தி வர்ற பொம்பளைக்கு பொறந்த ரொம்ப... ரொம்ப அடிமட்டத்தைச் சேர்ந்தவ... என்னை அவமானப்படுத்துவதா? என் காதலை வேண்டாமென மறுத்து தூக்கி எறிந்தாளே! ஏய்... தீபிகா. உன் குடும்பம் பத்தி தெரிஞ்சிருந்தா... நானே உன்னைத் தூக்கி எறிஞ்சிருப்பேன்டி. ஏழை குசும்புங்கறது இதுதானா? உன் லெவலுக்கு செருப்பு பிஞ்சிடும்னு டயலாக் பேசினது எவ்வளவு ஓவர்? விடமாட்டேன்டி. உன் வாழ்க்கையை பீஸ் பீஸா பிய்ச்சி எறியலே... நான் எங்கப்பனுக்கு பொறக்கலேடி! உன்னை என்ன பண்றேன் பார்!' கண்களில் சிரிப்பும் நெஞ்சில் நெருப்புமாக... கசப்பாய் வெறித்தான்.

★★★

"ரொம்ப பிஸியா?"

"ஏன் கேட்கறீங்க?" ரயில் சப்தத்தில், எதிர்காற்றும் தொந்தரவு செய்ய... காதோடு அழுத்திப்பிடித்த போனில் அவன் குரலை பத்திரமாய் உள்வாங்கிக் கொண்டாள் தீபிகா.

"இப்பல்லாம் சரியாவே பார்க்க முடியறதில்லே..."

"அக்காவுக்கு உடம்புக்கு முடியலே... அதனால வீட்ல கொஞ்சம் வேலை."

"ஓ... அப்படியா! ஒரு விஷயம் சொல்லணும்"

"சொல்லுங்க!"

"நாளன்னிக்கு என்னோட பர்த்டே!"

"ஓ!" குப்பென ஒரு நீரூற்றுப் பொங்கியது.

"அட்வான்ஸ் வாழ்த்துக்கள்!"

"பர்த்டே அன்னைக்கு நேர்ல வாழ்த்தினா சந்தோஷப்படுவேன்!"

"நேர்லயா?"

"கேட்டது தப்பாயிருந்தா மன்னிச்சிடு தீபி! எனக்கும் அதிலே உடன்பாடு இல்லே. ஆனா, இத்தனை வருஷமா நான் தனியாளா இருந்தேன். இப்ப நெஞ்சுக்குள்ளே நீ நிறைஞ்சிருக்கே. உன்னை தனியா வச்சு எதையும் நினைக்க முடியலே. அப்பாவும், அம்மாவும் நாளைக்கு ஊருக்கு வரச்சொல்லி கட்டாயப்படுத்தறாங்க. அவங்க

# சின்னத்திரை

# தொடர்கள் போதுமா



சின்னத்திரைகளில் குடும்பத் தொடர்கள், ஆன்மீகத் தொடர்கள் என ஒவ்வொரு தொலைக்காட்சிகளிலும் ஒளிபரப்பாகி விடுகின்றன. அவரவர்களுக்கு பிடித்த தொடர்களை பெண்கள் விரும்பிப்பார்க்கிறார்கள். சிலர் அனைத்து தொடர்களையும் பார்க்க முடியவில்லை என்று ஆதங்கப்படுகின்றார்கள். தொடர்களால் நன்மையா? தீமையா? என்ற விவாதம் ஒரு புறம் இருந்தாலும் வீட்டில் இருக்கும் பெண்களுக்கு உற்ற துணையாக விளங்குகிறது. சின்னத்திரை தொடர்கள் பார்ப்பவர்கள் தான், நல்லதை எடுத்துக்கொண்டு, அல்லதை விட்டுவிட வேண்டும். சரி இப்போது எத்தனை தொடர்கள் ஒளிபரப்பாகி வருகின்றன என்று தெரியுமா?

கலைஞர் தொலைக்காட்சி: 12.00 வாடகை வீடு, 12.30 மஞ்சள் மகிமை, 6.30 சதிலீலாவதி, 7.30 மகாலட்சுமி, 8.00 உறவுக்கு கை கொடுப்போம், 8.30 தெக்கத்திப்பொண்ணு, 9.00 விளக்கு வெச்சநேரத்துல, 9.30 அபிராமி, 10.00 விசாரணை.



சன் டிவி: 10.30 மகள், 11.00 மெட்டிஒலி, 11.30 கஸ்தூரி, 12.00 உறவுகள், 12.30 அனுபல்லவி, 1.00 வசந்தம், 1.30 இளவரசி, 2.00 அத்திப்பூக்கள், 6.00 முந்தானை முடிச்சு, 6.30 மாதவி, 7.30 நாதஸ்வரம், 8.00 திருமதி செல்வம், 8.30 தங்கம், 9.00 தென்றல், 9.30 செல்லமே, 10.00 இதயம்.



ராஜ் டிவி: 7.00 சிந்து பைரவி, 9.30 வீட்டுக்கு வீடு

விஜய் டிவி: 11.30 சாய்பாபா, 6.00 ஸ்ரீ கிருஷ்ண லீலை, 7.00 மகாராணி, 7.30 யாமிருக்க பயம் ஏன்.

ஜெயா டிவி: 12.30 அலைபாயுதே, 7.00 மாயாபஜார், 8.00 எங்கே பிராமணன், 8.30 சாவித்ரி.

ஜீ தமிழ்: 7.00 ஜான்சி ராணி

மெகா டிவி: 6.30 ஜெய் ஹனுமான், 7.00 அன்புள்ள அப்பா 8.00 இரு கோடுகள், 8.30 ஸ்ரீதேவி.

கேப்டன் டிவி: 7.00 பாண்டவர்கள்

ஆசீர்வாதம் இல்லாம ஒரு பிறந்தநாள் கூட போனதில்லே. ஆனா, இந்த பிறந்தநாளன்னிக்கு ஒரு அந்த நிமிஷம் நீ வர்றதா இருந்தா தான் ஊருக்குப் போகாம இருப்பேன். இல்லேன்னா..."

"வர்றேன்!" என்றான் அவசரமாக.

"தாங்க்ஸ் தீபி!"

அந்த நிமிடத்திலிருந்தே படபடப்பு ஆரம்பமானது தீபிகாவிற்கு.



அவனிடம் நேருக்குநேர் சில நிமிடங்கள் பேசப்போகிறோம். பர்த்டேக்கு தான் என்ன பரிசுத் தருவது? பேங்கில் சம்பளப் பணம் ஒரு குறிப்பிட்ட தொகை இருக்கிறது. அதிகமாய் எடுத்து செலவு பண்ண முடியாவிட்டாலும் ஆயிரம் ரூபாய் எடுக்கலாம். அதில் என்னவென்று வாங்குவது? திருமணத்திற்கு முன்பே எந்தப் பொருளும் கொடுப்பதும் வாங்குவதும் தவறல்லவா?

கடைசியில் குழம்பி, தவித்து தெளிந்து 'பொக்கே' போதும் என்று

முடிவிற்கு வந்தான்.

* * *

"அய்யோ... என்ன மாறன் நீ? அவளை எப்படி உன் வீட்டிற்கு அழைத்து வருவது?" போனில் பதறி விட்டான் நந்தன்

"டேய்... படிச்சவன் தானே நீ? எதுக்கு இந்த சாதாரண விஷயத்துக்குப் போய் அலர்றே? உன் பர்த்டேக்கு... என் வீட்ல அருமையா விருந்து தரப்போறேன். அதுல உன் கூட உன் வருங்கால மனைவியும் கலந்துக்கறதுதானே நியாயம்? இதோ பார்! உன் காதல் விஷயத்தை சித்தி, சித்தப்பாக்கிட்டே பக்குவமா எடுத்துச் சொல்லி கல்யாணத்தை முன்னே நின்னு நடத்தப் போறதே நான்தானே? தவிர அந்தப் பெண்ணை எனக்கு முன்னாடியேத் தெரியும்."

"நிஜமாவா?"

"அவளோட பாஸ் என்னோட க்ளாஸ்மெட்! அவனைப் பார்க்க அடிக்கடி ஆபீஸ் பக்கம் போவேன். அப்ப பார்த்திருக்கேன். என்னைப் பார்த்தா அவளுக்கே சர்ப்ரைஸாதான் இருக்கும். ஆனா, என்னைப் பத்தி டீடெய்லா எதையும் சொல்லாதே! சும்மா அண்ணன்னு மட்டும் சொல்லி கூட்டிட்டு வா!"

"நாங்க இதுவரைக்கும் வெளியே எங்கேயும் சந்திச்சதில்லே. அவ வருவாளா? கூப்பிட்டா தப்பா நினைச்சுக்க மாட்டாளா?"

"நீயெல்லாம் ஆம்பளைன்னு எதுக்கு வெளியிலே சொல்லிக்கறே?"

"மா..றா!"

"கத்தறது இருக்கட்டும். முதல்ல நீ மாறு! அவளைக் கூட்டிக்கிட்டு வர்றே? ஓக்கே?"

"ட்ரை பண்றேன்!"

"பிச்சிடுவேன்.. வைடா போனை!"

* * *

இளரோஸ் நிற காட்டன் சுடிதாரில்... தளர்வாய் பின்னிய கூந்தலில் ஒரு முழம் மல்லிகையும், நெற்றியில் விபூதி, குங்குமத் தீற்றலுமாய் (எனக்காக கோவிலுக்குப் போயிருக்கிறாள்) கையில் பொக்கேயுடன்.



முகத்தில் பதட்டமும், நடையில் பின்னலுமாய் வழக்கமாய் அவன் நிற்கும் பாதைநோக்கி வந்தவளை நேசமுடன் பார்த்தான்.

"பிறந்தநாள் வாழ்த்துக்கள்!" என்றபடி பொக்கேயை நீட்டினாள். அவனை வெகு அருகில் பார்த்து விட்டதில் கன்னத்தில் குழைத்து கலந்த செம்மை படர்ந்தது.

"தாங்க்ஸ் தீபி... ஆனா, இதை ரோட்டில் வைத்தாக் கொடுப்பது?"

"வே..வேற எங்கே?" விழிகள் விரிந்தன.

"அஞ்சு நிமிஷம் என்கூட பேசறதா..."

"ஆமாம்... வேறெங்கே பேசறது?"

"பக்கத்துத் தெருவில் பார்க் இருக்கு!"

"ம்... சரி..."

அவன் பைக்கில் ஏறி அமர... அவள் நடக்க ஆரம்பித்திருந்தாள்.

அவளின் அந்த பயமும், கட்டுப்பாடும் ரொம்ப கவர, சிரித்தபடி அவளுக்கு முன்னே விரைந்து காத்திருந்தான்.

பூங்காவில் வயதானவர்களின் நடமாட்டம் மட்டுமே இருந்தது.

"இது... இந்தாங்க பிரசாதம்!"

"எனக்காக கோவிலுக்குப் போயிருந்தியா தீபி?"

"ம்..."

"என்னை அந்தளவுக்கு நேசிக்கிறியா?"

"ம்..." என்றாள் அவன் கண்களை பார்க்காமல்.

"தீபி..."

"ம்..."

"இன்னொரு ரிக்வெஸ்ட்"

"சொல்லுங்க!"

"எங்கண்ணன் மதியம் அவங்க வீட்டுக்கு விருந்துக்கு

கூப்பிட்டிருக்கார்!"

"சரி..."

"உன்னையும் வரச்சொன்னார்!"

"என்னையா? என்னை அவருக்கு எப்படி...?," அதிர்ந்தாள்.

"அவருக்கு மட்டும் நம்ம விஷயம் தெரியும். அவர்தான் நம்ம சார்பா எங்க வீட்ல கல்யாணம் பத்தி பேசப்போறார். உங்கிட்டேயும் அது விஷயமா ஒரு ஐடியா கேக்கணும்னு நினைக்கிறார். நான் கட்டாயப்படுத்தலே. விருப்பமிருந்தா வா!"

"கல்யாண விஷயம்ங்கறீங்க... வர்றேன்... எப்ப?"

"இங்கேர்ந்து பனிரெண்டு மணிக்கு புறப்பட்டா போதும்."

"அதுவரைக்கும்...?"

"மணி பத்தாகப் போகுது. ஆபீஸ்க்குப் போய்டு, சரியா பனிரெண்டு மணிக்கு இதே இடத்துக்கு வந்துடு."

அவன் நேர்மையை நினைத்து சிரித்தபடி ஆபீஸ் பறப்பட்டாள்.

வேலையில் கவனம் சிதறியது.

இதுநாள் வரை கிடைக்காத அனுபவம். அவனுடன் கிட்டதட்ட பதினைந்து நிமிடங்கள் பேசியது. மதியம் அவனுடன் சாப்பிடப் போகிறோம் என்பதே... உடல் தலையை விட்டு மேலே எழும்புவதுப் போலிருந்தது.

டீம் லீடரிடம் பர்மிஷன் பற்றிப் பேச எழுந்து சென்ற போது ஒரு ஓரமாய் பர்வீனும், ஜமாலும் சண்டைப்போட்டுக் கொண்டிருந்தனர்.

அவன் என்ன சொன்னானோ, பதிலுக்கு, "செருப்பு பிஞ்சிடும்டா" என்றாள் பர்வீன்.

அவர்கள் பேசிக் கொண்டது எல்லாம் காதில் விழ... சிரித்துக் கொண்டே கடந்தாள் தீபிகா.

ஒருவழியாக பர்மிஷனில் வெளியில் வந்து, தீபிகாவை ஒரு ஆட்டோவில் ஏற்றி, பைக்கில் பின்தொடர்ந்தான் நந்தன்.



# 13

வாட்ச்மேன் நந்தனைப் பார்த்ததும் சல்யூட் வைத்து சிரித்து, "வாங்கசார்!" என்றான்.

தீபிகா மிரட்சியுடன் அவன்பின் சென்றாள்.

ஏற்கனவே அறிமுகமாகி இருந்த வேலைக்காரர்கள் சிரித்தபடி வரவேற்றனர்.

"உட்காருங்க... உட்காருங்கம்மா... ஐயா ஏதோ முக்கியமான வேலைன்னு அவசரமா கிளம்பிட்டாரு... வந்துடுவாரு!" என்றான் சமையல்காரன் பொன்னையா.

"அப்ப... சார் வீட்ல இல்லையா?" போனை எடுத்து நம்பரை ஒற்றினான்.

ஒரு ரிங்லேயே அட்டென்ட் பண்ணினான் மாறன்.

"ஸாரி... ஸாரி நந்தன்... நானே போன் பண்ணனும்னு நினைச்சேன்..."

"என்னாச்சு...?"

"நான் சரக்கு வச்சிருக்கிற குடோன்ல கரன்ட் லீக் ஆகி... ஃபயர் ஆக்ஸிடன்ட்... போன் வந்தது..."

"மைகாட்!"

"பதறாதே! பிஸினஸ்ல எல்லாத்தையும் ஃபேஸ் பண்ணித்தானே ஆகணும்? இன்ஷ்யூர் பண்ணியிருக்கு... நோ ப்ராப்ளம்..."

"நானும் வரட்டுமா?"

"லூஸாடா நீ? எல்லாம் நான் பார்த்துக்கிறேன். நீ இப்ப என்னப் பண்றே... ஹால்ல உட்காராதே... அங்கேதானே உக்காந்திருக்கே... தெரியுமே... நேரா பெட்ரூம போ... டேய் அது என் பெட்ரூம் இல்லேடா... கெஸ்ட் வந்தா தங்கறது... ஃப்ரிட்ஜ்ல கூல்ட்ரிங்க்ஸ் இருக்கு. மொதல்ல ரெண்டு பேரும் குடியுங்க... டிவி மேல அவதார் சிடி வச்சிருக்கேன். பார்த்துட்டேயிருங்க... நான் அதுக்குள்ளே வந்திடறேன்... சேர்ந்து லன்ச் சாப்பிடலாம்... ஓகே?"

"ஓகே...!" அரைமனதாய் சொன்னான்.

"என்னாச்சு?" என்றாள் தீபிகா.

சுருக்கமாய் சொன்னான்.

"அடடா... சரி... நாம கிளம்பிடலாமே..."

"அவர் தப்பா எடுத்துப்பார் தீபி... நாம அந்த ரூம்ல உக்காரலாம்..."

"ம்ஹூம்... அங்கெல்லாம் நான் வரலே..."

நந்தனின் செல்போன் அழைத்தது. லைனில் மாறன்.

"சொல்லுண்ணா..."

"உன் பியான்ஸி ஓல்டு கல்ச்சர் கேரக்டராச்சே... உன்னே போகச் சொன்னா பயப்படுவா... போனை அவகிட்டே கொடு... பேசறேன்."

"இந்தா... அண்ணன் லைன்ல... பேசு..."

"நானா?"

"பேசு..."

"ஹலோ... என்றவள் அதன்பின் ம்...ம்...ம்... சரி' என்ற வார்த்தையோடு சங்கடமாய் அவனைப் பார்த்தாள்.

"என்ன சொன்னார்?"

"வந்திடறாராம்... ரூம்ல படம் பார்த்துக்கிட்டிருக்கச் சொன்னார்."

"சொல்றவங்க சொன்னாதான் கேட்பீங்க... அவதார் பார்த்துட்டியா? பார்க்கலாமா? சிடி இருக்கு."

"அவதாரா? பார்க்கலாம் என்றாள் சிறுகுழந்தையின் ஆவலோடு.

அவர்கள்... சங்கடம் விலகி கேஷூவலாக பேச ஆரம்பித்திருந்தனர்.

அறை ராயலாக... த்ரீ ஸ்டார் ஹோட்டல் சூட் மாதிரி இருந்தது. ஏஸி... ஃபோம் பெட், டிரஸ்ஸிங் டேபிள், சிறு ஸோபா செட், ஃப்ரிட்ஜ், டிவி, டிவிடிப்ளேயர் என அமர்க்களமாக இருந்தது.

"கதவை மூடிடு தீபி".

"ஏன்?"



"ஏஸி வெளியே போய்டும்."

அதன்பின் ஒவ்வொரு விஷயமும் யதார்த்தமாய் நடந்தது. நந்தன் காஸட்டை செருகி... படம்போட்டான்.

ஒவ்வொரு சீனின் பிரம்மிப்பிலும் கட்டுண்டுப் போனாள் தீபிகா.

ஃப்ரிட்ஜில் சின்னதாய் இரண்டு பாட்டில்கள் மஞ்சள் திரவத்தோடு இருந்தன. ஃபாரின் மேங்கோ ஜூஸ்! இருவரும் குடித்தனர். ரூபோ முதல், தங்கை சாருமதி வரை பேசினர்.

நிமிடங்கள் கரைந்தன.

உடம்பிற்குள் யாரோ கிச்சு கிச்சு பண்ணுவதுப் போல், அவஸ்தையாய் இருந்தது. கிறக்கமும், மயக்கமுமாய் உடம்பு முறுக்கேற... தன்னிலை இழக்கத்தொடங்கினர். தீபிகா அவனைப் பார்க்க... அவன் இவள் பக்கத்தில் வந்தமர... அறுந்த கொடியாய்... அவன் கைப்பட்டதும் சரிந்து விழுந்தாள்.

நிமிடங்கள் கரைய... ஒருவரையொருவர் கலந்தனர்.

எப்போது உறங்கி... எப்போது விழித்தார்களோ தெரியாது. ஆனால், உடைகலைந்து. உருவமும் கலைந்திருப்பதுக் கண்டு... தீப்பற்றிக் கொண்டது போல் பதறி... அலறினர்.

மணி நான்கை தாண்டி விட்டிருக்க... மாறன் இன்னும் வந்திருக்கவில்லை. அவன் எதிரில் திருடனுக்கு தேள் கொட்டியவன் மாதிரி நிற்க தைரியமின்றி... புறப்பட்டனர்.

வந்த மாதிரியே போகும்போதும் அவளை ஆட்டோவில் ஏற்றி அனுப்பினான்.

குற்ற உணர்வில் அன்றிரவு நந்தன் அங்கே சாப்பிடவும் செல்லவில்லை. தீபிகாவும் வெளியில் வரவில்லை.

வந்ததும் துவண்டுப்போய் படுத்துக் கொண்டவளை ரேகா நெற்றியை தொட்டுப்பார்த்தாள்.

"என்னாச்சு தீபி?"

"தலைவலி... அவ்வளவுதான்! மாத்திரைப் போட்டுட்டேன் சரியாகிடும்..." மேற்கொண்ட அவளைப் பேச விடவில்லை.

"சரி... சாரு வர்றியா... ஸ்கேன் ரிப்போர்ட் வாங்கிட்டு

வந்துடலாம்.

"டிரஸ் மாத்திட்டு வந்திடறேன்க்கா!"

"நான் வரட்டுமாக்கா?"

"வேணாம்... தலைவலிங்கறே..."

"டாக்டரை அப்படியே பார்த்துட்டு வருவியா? லேட்டாகுமா? மாவரைக்கவா?"

"வேணான்டி.... டாக்டரை நாளைக்குதான் பார்ப்பேன். வந்து எல்லாவேலையையும் நான் பார்த்துக்கிறேன். நீ ரெஸ்ட் எடு."

"ம்..."

தலைவலி என்று ஏதும் இல்லை. ஆனால், மண்டைக்குள் குடைச்சல் அதிகமாய் இருந்தது.

'நந்தனா அப்படி? நான் எப்படி இடம் கொடுத்தேன்?

எப்படி... எப்போது ஆரம்பித்தது? எவ்வளவு பெரிய தப்பை செய்துவிட்டேன்? நந்தனை மட்டுமே குறை சொல்ல முடியாதே! யாரோ ஒருவர் வீட்டிற்கு சென்று... அவர்கள் படுக்கையறையில்... சே! நினைக்கவே கூசுகிறதே. அப்படியொரு வசதியான இடத்தை முன்பின் பார்த்திராததால் மதிமயங்கிவிட்டேனா? நந்தன் என்னைப் பற்றி என்ன நினைப்பார்?' உன் கட்டுப்பெட்டித்தனம்தான் எனக்கு ரொம்ப பிடித்திருக்கிறது' என்பாரே. திருமணத்திற்கு முன்பே அவசரப்பட்டு என்னை இழந்ததை எந்த லிஸ்ட்டில் சேர்ப்பார்?"

இதே குடைச்சல்தான் நந்தனுக்கும்?

'சே... மனுஷனாநான்? வரமாட்டேன் என்றவளை வற்புறுத்தி அழைத்துச் சென்று செய்யக்கூடாத பாதகத்தை செய்துவிட்டேனே! அனுபவித்த இன்பத்தை விட, அவளுக்கு இழைத்த துன்பம்தானே மனதை நொறுங்கச் செய்விட்டது. தீபி என்னைப் பற்றி என்ன நினைப்பாள்? திட்டம்போட்டு ஏற்பாடு செய்தது போலல்லவா எண்ணியிருப்பாள்? பாவம்... சாதாரண குடும்பத்துப் பெண். ஒரு சின்ன அவப்பெயர் என்றாலும் தாங்கிக் கொள்ளக்கூடிய அளவுக்கு தூண்களற்ற கூடு அது. தீபியை சந்தித்து நம்பிக்கை தரவேண்டும். ஊருக்குச் சென்று அவளைப் பற்றி அம்மா, அப்பாவிடம் சொல்ல வேண்டும்.' தீர்மானித்துக் கொண்டான்.



மறுநாள்!

அவன் முகம்பார்க்க சங்கடப்பட்டு சீக்கிரமே அலுவலகம் சென்று விட்டாள் தீபிகா. அவனும் அந்த மனநிலையில் இருந்தது அவளுக்குத் தெரியாது. மூன்று தினங்கள் ஓடிப்போக... அன்று காலையிலேயே மயங்கி விழுந்து விட்டாள் ரேகா.

தீபிகா ஆபீஸிற்கு லீவு சொல்லிவிட்டு ஸ்கேன் ரிப்போர்ட்டுடன் ஹாஸ்பிடல் அழைத்துச் சென்றாள்.

பரிசோதித்து, ரிப்போர்ட்டையும் படித்த டாக்ர் குமரேசன் முகம் மாறினார்.

டாக்டர் தயங்க...

"எதுவாயிருந்தாலும் சொல்லுங்க டாக்டர். நாங்க வாழ்க்கையிலே சந்திக்காத சோதனைகளே இல்லை... தயங்காம சொல்லுங்க!" என்றாள் ரேகா.

"எப்படிம்மா உடம்பை கவனிக்காம விட்டீங்க? சளித்தொல்லை சாதாரண பிரச்னைதான். மார்புல சளி இருக்கான்னு ஸ்கேன் பண்ணச் சொல்லியிருக்காங்க... பட், அன்பிலீவபிள்... இதயத்தை தொட்டுக்கிட்டு பெரிய கட்டி ஒண்ணு வளர்ந்திருக்கு. மயக்கம் வர்றதும் வெயிட் லாஸ் ஆகுறதும் அதனால்தான்!"

டாக்டர் சொல்லச் சொல்ல... ரேகா துடித்துப் போனாள்.

அவள் கண்முன், "அம்மா என்மேல கையப்போட்டுக்கம்மா என்று படுக்கும்போது ஒட்டிக் கொள்ளும் தினேஷின் முகம் கண்முன் வந்துப்போக... "டா...க்...ட...ர்... என்றாள் அதிர்ச்சியுடன்

தீபிகாவிற்கு உடம்பு தூக்கி வாரிப்போட்டது.

## 14

சின்னக்காற்றிற்கே கலைந்துப்போகும் குருவிக்கூடு! அந்த வீடும் அதிர்ச்சியில் சின்னாப்பின்னமாகிவிட்டது.

தனக்கடுத்து அந்த வீட்டின் முதுகெலும்பு என்று ரேகாவை நம்பிக்கொண்டிருந்த பாக்கியம், எலும்புகள் நொறுங்கி பாயில் துவண்டு படுத்திருந்த மகளைப் பார்க்கையில் 'ஐயோ' என்று வயிற்றில் அடித்துக் கொண்டாள்.

'கடவுளுக்கு, மேலும் மேலும் ஒரே குடும்பத்தின் மீது அக்கினி

குழம்பை வாரியிறைக்க எப்படி மனசு வரும்? அவ்வளவு இரக்கமற்ற பாவியா அவன்?

மனுஷனுக்கு பிரச்னை இல்லைன்னா கடவுளுக்கு அர்ச்சனை இல்லை.

ஆனால், பாக்கியம் குடும்பத்தின் மீது மட்டும் கடவுள் இடைவிடாமல் சாட்டையால் விளாசிக்கொண்டிருந்தால் அர்ச்சிக்கிற நம்பிக்கையும் அர்த்தமற்றுப் போய்விடாதா?

“அம்மா... நீ அழுது என்ன நம்பிக்கை இழக்க செய்துடாதே! கட்டிதானே? கவர்மென்ட் ஹாஸ்பிடல்ல ஆப்ரேஷன் பண்ணிடுவாங்க. நான் நல்லாயிடுவேன்ம்மா!” என்றாள் மிகவும் கஷ்டப்பட்டு சிரிப்பை முகத்தில் தேக்கிக் கொண்டு.

“டாக்டர் நல்லாயிடும்னு சொன்னாரா?” பாக்கியம் பரிதவிப்புடன் தீபிகாவிடம் கேட்டாள்.

“ஆயிடும்மா... கவலைப்படாதே! ஆபரேஷனுக்கு உடம்பை தயார் பண்ணனும் ஒரு டம்ளரைக் கூட இப்படி எடுத்து அப்படி வைக்கக்கூடாது. சத்துள்ள ஆகாரமா சாப்பிடணும். ஒரு மாசத்துல ஆபரேஷன் பண்ணிடலாம்!”, தீபிகா நம்பிக்கையோடு சொன்னாள்.

ஆனால், ஒரு அஞ்சு நிமிஷமாவது தனிமை தேவைப்பட்டது. கதறியழ வேண்டுமே!

ரேகாவை வெளியே அனுப்பிவிட்டு அவளிடம் டாக்டர் சொன்னதை எப்படி சொல்ல முடியும்?

“வலியை உணராம இருந்தாங்களா, இல்லே வெளியே காட்டிக்க கூடாதுன்னு மறைச்சாங்களா... புரியலே... பட், ரொம்ப ரொம்ப க்ரிட்டிகல் ஸ்டேஜ்ம்மா! ஆபரேஷன் பண்ணினாலும் பொழைக்கறது கஷ்டம். அவ்ளோ பெரிய கட்டியை இதயம் எப்படித்தாங்கும்? நரம்பெல்லாம் சிதைஞ்சுப் போயிருக்கும்மா. அதிகபட்சம் அவங்க... இருபது நாள் இருக்கலாம்... அதுக்கு மேலே... சான்ஸே இல்லை!”, என்றார் திட்டவட்டமாக.

“உண்மையிலேயே டாக்டர் குணமாய்டும்னு சொன்னாரா தீபி?” அம்மா இல்லாதபோது நம்பிக்கையற்றுக் கேட்டாள் ரேகா.

“பின்னே? உனக்கென்ன பெரிய தீர்க்கவே முடியாத நோய்னு நினைச்சு அலட்டிக்கிறியா? இதோ பாருக்கா... ஆபரேஷன் முடிஞ்சு ஒரு மாசம் ரெஸ்ட். அதுக்கப்புறம்தான் நீதான் மறுபடியும் எல்லா வேலையும்



செய்யணும்!”

தங்கையின் கண்களில் உண்மையைத் தேடி தளர்ந்துப்போனாள்.

“தினேஷை பார்த்துப்பியா தீபி?”

“என்னக்கா... ஏன் இப்படியெல்லாம் பேசறே?” என்றாள். நடுங்கும் குரலில்.

“ஓரளவு பேங்க்ல பணம் சேர்த்திருக்கேன். என்ன... நான் இல்லேன்னா பிள்ளை தவிச்சுப் போய்டுவான். அம்மாவும் எத்தனை நாளைக்கு? வயசாய்டுச்சு. பார்த்துப்பியா தீபி?”

“இப்படியெல்லாம் பேசாதேக்கா. நாம எல்லோரும். எப்பவும் சேர்ந்தே தான் இருப்போம். தினேஷ் எனக்குப் பையன்தான். உடம்பை பார்த்துக்கப்பா... ரெஸ்ட் எடு!”

தீபிகா யோசித்து தீர்க்கமான ஒரு முடிவெடுத்தாள்.

அதைக்கேட்டு பாக்கியம் நெற்றி சுருங்க ஏறிட்டாள்.

“ஏன் தீபி வேலைய விடறேங்கறே?”

“கொஞ்ச நாளைக்கு அக்கா எந்த வேலையும் செய்யக்கூடாது. எனக்கு சமைக்க கத்துக் கொடு. அக்கா செய்யற வேலைய நான் செய்றேன்.”

“வேணாம்டி. படிச்சுட்டு வேலைக்குப் போறவ அடுப்படியில நிக்கபோறியா? சமையலுக்கு ஆள் கிடைப்பாங்க. நீ வேணாம்.”

“அம்மா... இந்த காலத்துல முக்கியமான விஷயங்களுக்கு அடுத்தவங்களை நம்பி இருக்கக் கூடாது. எந்த ஹோட்டல்லேயும் மாஸ்டர்ங்க நிலைச்சி இருக்க மாட்டாங்க. கெடுபிடி பண்ணுவாங்க. மாறிக்கிட்டே இருப்பாங்க. சமையல் டேஸ்ட்டும் மாறும். கஸ்டமர்களும் அடுத்த ஹோட்டலுக்கு மாறுவாங்க. சமையல் பெரிய கலைம்மா. உன்

அன்புள்ள இதயமும்
அமைதியான மூளையும்தான்
தேவை - அர்னால்டு

பணத்திற்காக
ஒழுக்கத்தை விற்காதே!
-டேல் கண்ணகி

அன்பு நெருப்பில்
இளகிடும்... இதயம் - ஹியூம்

-ஜெயா சுப்ரமணியன், சேலம்.

கைப்பக்குவத்தை சொல்லிக்கொடு. நான் பார்த்துக்கிறேன்.

மகள் பேச்சை மறுக்க முடியாதளவு தொழில் சூட்சுமம் புரிய... அரை மனதாய் தலையாட்டினாள்.

கற்றுக் கொடுத்தாள். தீபிகாவின் ஆர்வமும் கற்பூரபுத்தியும், முக்கியமாய் அக்குடும்பத்தின் நிர்ப்பந்தமும்... எளிதாய் கிரகித்துக் கொண்டாள். குறிப்புகளை எழுதிக் கொண்டாள்.

சில நாட்களாய் தீபிகா அலுவலகம் செல்லும் வழியில் கண்ணில் படாதது... குழப்பத்தைத் தர... இன்று எப்படியாவது போன் செய்து பேசிவிடவேண்டும். தவறுகளுக்கு மன்னிப்புக் கேட்டு, நம்பிக்கையூட்டவேண்டும். பாவம்... பயந்து விட்டிருப்பாள்.

அதேநேரம் அவன் போன் அழைக்க... ஸ்க்ரீனில் இளமாறனின் பெயர்.

"ஹலோ..."

"என்ன நந்தா போனே காணோம்?"

"ஸாரி... பண்ணனும்னு நினைச்சேன். பிஸி... அதனால..."

"அதை விட்றா... ஸாரிடா... அன்னைக்கு நான் உடனே வரமுடியல.. ஆனா, நீங்க ரெண்டு பேரும் சாப்பிடாமலேயே போயிட்டிங்களாமே... ஏண்டா?"

"அது... அது... நீயில்லாம சாப்பிட கஷ்டமாயிருந்துச்சு."

"சரி... அதையும் விடு. உன் பர்த்டேக்கு நான் எதுவும் தர முடியாமப் போயிடுச்சு. நான் இப்பத்தர்ற பரிசை நீ மறுக்காம ஏத்துக்கணும்."

"எதுக்கு நமக்குள்ளே ஃபார்மாலிட்டி?"

"பச்... நான் சொல்றதை மட்டும் கேள். பாஸ்போர்ட் இருக்கா உன்கிட்டே?"

"ம்... இருக்கே! ஆனா ஃபிளைட்டுல பறக்கத்தான் சான்ஸ் கிடைக்கலே."

"இப்ப கிடைச்சாச்சு!"

"வாட்?"

"யெஸ்... என் கூட நீ ஆஸ்திரேலியா வர்றே!"



"நானா?"

"நீயேதான்! பிஸினஸ் விஷயமா வருஷத்துக்கு மூணு நாலு முறை அங்கே போய் வருவேன். இந்த முறை நீயும் என் கூட வா. இது நான் உனக்கு தர்ற பர்த்டே கிஃப்ட்!"

அவன் மனநிலை ஃபாரின் செல்ல ஏற்கவில்லை. ஆனாலும், சிறு இட மாற்றம் மனதுக்கு, தெம்பைத் தரும் என்று கருதி மாறன் அழைப்பை ஏற்றுக் கொண்டான்.

"குட்! அநேகமா அடுத்த வாரம். ரெடியாயிரு!"

அன்றிரவே தீபிகாவிற்கு போன் பண்ணினான்.

"ஏன் ஆபீஸ் வரலே தீபி?"

"வேலையை ரிஸைன் பண்ணிட்டேன்!"

"ஏன்?" அதிர்ச்சியாய் இருந்தது.

"அக்காவுக்கு முடியல. மெஸ்ஸுல நான் ஹெல்ப் பண்ண வேண்டிய சூழ்நிலை."

"ஓ!"

"....?!"

"அன்னைக்கு அந்த மாதிரி நடந்ததுக்கு ஸாரி தீபி. இப்ப வரைக்கும் அது எப்படி நடந்துதுன்னே புரியவே இல்லே. நீ கவலைப்படாதே தீபி... உன்னை நான் ஏமாத்திட மாட்டேன். சீக்கிரமே ஊருக்குப் போய் நம்ம விஷயம் பத்தி பேசப்போறேன்.

"இப்ப மெஸ்ஸை நானும் சேர்ந்து நடத்திக்கிட்டிருக்கேன். என்னை உங்க வீட்ல எப்படி....?!"

"நீ என்னை புரிஞ்சுக்கிட்டது அவ்வளவுதானா? நமக்கு கல்யாணமாய்ட்டா உன் குடும்பம் என் குடும்பம் தானே? உன் தங்கையை நல்லா படிக்கவச்சு நான் கல்யாணம் பண்ணி வைக்கிறேன். உங்கம்மாவும், அக்காவும் நம்மக்கூட இருக்கட்டும். அவங்க உழைச்சது போதும்.

"இதையெல்லாம் உங்க வீட்ல..."

"நான் இந்த ஊர்லதானே செட்டிலாகப்போறேன்? அதுமட்டுமில்லே...

எங்களுக்கு பூர்வீக சொத்து இருக்கு. அப்பா முற்போக்குவாதி. அம்மாவும் அவருக்கு ஏத்த நல்ல மனுஷி. நான் செய்யற நல்ல காரியங்களை தட்டிக் கொடுக்கிறவங்க. எதுக்கும் பயப்படாதே! அப்புறம்... அடுத்த வாரம் நான் ஆஸ்திரேலியா போறேன். வர... இருபது நாள் ஆகும்."

"ஆஸ்திரேலியாவா! எதுக்கு?"

இளமாறன் சொன்னதை சொன்னான்.

"பத்திரமா போயிட்டு வாங்க. ஆனா, இனி அடிக்கடி போன் பண்ண வேண்டாம். மனசு அலைபாயும். புரிஞ்சு நீ... எல்லாத்துக்கும் ஒரு கால் போட்டுடலாம்."

* * *

நந்தன் இளமாறனுடன் ஆஸ்திரேலியா செல்கிறான். அவன் சென்ற ஒரு வாரத்தில்... ரேகா... உறக்கத்திலேயே உயிரை விட்டிருந்தாள். இடிந்து போய் விட்டாள் பாக்கியம்.

"என் பொண்ணு நல்லாயிடுவான்னு சொன்னியே... ஒரேடியா போய் சேர்ந்துட்டாளே! பச்சை மண்ணை விட்டுட்டுப் போயிட்டாளே... நான் என்னப் பண்ணுவேன். என் குடும்பத்துக்கு தானா அடுக்கடுக்கா சோதனைக வரணும்!" துடிதுடித்து கதறினாள்.

தீபிகா நிவேதாவை அணைத்தபடி கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள்.

அந்த குடும்பத்துக்கு அடுத்த அடி காத்திருந்தது.

## 15

அந்த வீட்டில் மனிதர்கள் இருந்தனர். விளக்குகள் எரிந்தன. வேலை நடந்தது. ஆனால் வெளிச்சம் மட்டும் இல்லை.

சந்திரங்களினூடே... தீபிகாவிற்கு நந்தனின் நினைவு எட்டிப்பார்க்கும்.

வெளிநாடு சென்று ஒன்னரை மாதமாகி விட்டது. இன்னுமா வரவில்லை! சென்றதிலிருந்த ஒரு போன் கூட வரவில்லை. ரேகா இறந்ததைக்கூட தெரியப்படுத்தமுடியவில்லையே! அவன் போனும் ஸ்விட்ச் ஆப் செய்யப்பட்டுள்ளது என்றே வருகிறதே!



என்னாயிற்று சந்தேகப்படுவதா, கவலைப்படுவதா என்றே புரியாமல் கலங்கிப்போனாள்.

தான் வேலை பார்த்த கம்பெனியில் சம்பளபாக்கி வரவேண்டியிருந்தது.

அன்று விரைவாக சமையலை முடித்துவிட்டு அம்மாவிடம் சொல்லிவிட்டு கிளம்பினாள். போகிற போது நந்தன் தங்கியிருந்த வீட்டு வழியே சென்றாள்.

கதவு திறந்திருந்தது.

தயக்கத்துடன் காலிங் பெல்லை அழுத்தியபோது புதிய இளைஞன் எட்டிப்பார்த்தான்.

"யார் வேணும்?"

"நந்தன்!"

"அப்படியாரும் இங்கில்லையே!"

"இந்த வீட்டிலேதான் இருந்தாரு. எனக்குத் தெரியும்."

"ஓ... இதுக்கு முன்னாடி இருந்தவரா இருக்கும். அவர் காலிபண்ணிட்டாருங்க. நான் இங்கே வந்து ஒரு மாசம் ஆயாச்சு"

"ஒரு மாசமா!"

திகைத்துப் போனவளாய் திரும்பினாள். மனதிற்குள் அலையலையாய் சந்தேகம் எழ... நேரே அவன் பணிபுரியும் அலுவலகம் தேடிப்போனாள்.

காலை நேர வங்கி சுறுசுறுப்பாய் இயங்கிக் கொண்டிருக்க... அங்கிருந்த அட்டெண்டரிடம் சென்றாள்.

"சார்... இங்கே நந்தன்னு ஒருத்தர்..."

"ஆமா... இருக்கார். சிவகங்கை ஆளைத்தானே கேக்கறீங்க?"

"ஆமாம்..." என்றாள். இதயம் எகிற.

"ரிசப்ஷன்ல உக்காருங்க... உங்க பேரு..."

சொன்னாள். காத்திருந்தாள்.

பத்து நிமிடம் முள்மேல் தவமிருந்தபின்... நந்தன் வந்தான்.

கண்களில் கேள்வி... அந்நியம்!

"ந...ந்...த...ன்!"

அவன் முகம் மாறியது.

"யாரு வேணும் உங்களுக்கு?"

"என்ன... என்ன கேட்டீங்க?" உடம்பு மொத்தமும் தூக்கிப் போட்டது. உங்களுக்கு யார் வேணும்னு கேட்டேன்!"

'என்னைப் பார்த்தா அப்படிக் கேக்கறீங்க? நான் தீபிகா..."

"சத்தியமா எனக்குப் புரியலே. இதுக்கு முன்னாடி நான் உங்களைப் பார்த்ததே இல்லை. என்னை எதுக்குத் தேடி வந்திருக்கீங்க?"

நந்தனின் முகத்தில் ஆச்சர்யமும், பயமும் பளிச்சிட்டன.

"என்னாச்சு உங்களுக்கு? என்னைப் போய் யாருன்னு கேக்கறீங்க? விளையாடதீங்க. உங்க போனுக்காக நான்..."

"ப்ளீஸ்... நிறுத்துங்க. நீங்க பாட்டுக்க பேசிக்கிட்டே போறீங்க. யாரையோ நான்னு நினைச்சு பேசறீங்க போல. எனக்கு லேடீஸோட பேசி பழக்கமில்லே. தயவு செஞ்சு கிளம்புங்க. பார்க்கறவங்க தப்பா நினைச்சுக்கப்போறாங்க..." கொஞ்சம் கடுமையாகவே சொல்லிவிட்டு அவன் சென்றுவிட...

தீபிகாவிற்கு அந்த கட்டிடமே இடிந்து தலைமேல் விழுவதுபோல் கண்கள் இருண்டன. விழுந்துவிடாமலிருக்க சுவற்றைப் பற்றிக் கொண்டாள்.

போகிற வருகிறவர்களின் பார்வை அவளை அளவெடுத்து விசாரிக்க... கூச்சம் பிடுங்கித்தின்ன உலக மகாகுழப்பங்களும் குடிகொள்ள வெளியேறினாள்.

***

'ஏன்... ஏன்... ஏன்? என்னை தெரியாததுப் போல் நடிக்க என்ன காரணம்?'

'இது கூடவா புரிந்துக் கொள்ள முடியவில்லை? அவனுக்கு என்னத் தேவையோ அது கிடைத்துவிட்டது பிறகெதற்கு நீ?'

'நந்தனா? அப்படிப்பட்டவரா அவர்?'



'சந்தர்ப்பம் கிடைக்கும் வரை ராமர் வேஷம் போட்டுத்தானே ஆகணும்? வலிய மடியில் விழுந்த கனியை தூக்கி எறிய அவன் என்ன முட்டாளா?'

'இப்போது என்ன செய்யப் போகிறேன்?'

'எதையாவது செய்து உன் அம்மாவின் நிம்மதியை குலைக்கப் போகிறாயா?'

'ஐயோ...!'

எந்த பிடியும் கிடைக்காமல் வீடு வந்து சேர்ந்தபோது மாதவன் நாயர் மதிய உணவை முடித்துவிட்டு இடத்தை கழுவி சுத்தம் செய்து கொண்டிருந்தார்.

"வந்துட்டியா? சாப்பிட்டியா?" என்றாள் பாக்கியம்.

"ம்..."

"சம்பளம் வாங்கிட்டியா?"

"அப்போது தான் உறைத்தது. அவள் தன் அலுவலகமே செல்லவில்லை.

"இ.... இல்லேம்மா... டீம் லீடர் இன்னைக்கு வரலே!"

"போன்ல கேட்டுட்டு போயிருக்கலாம்."

"அம்மா..."

பாக்கியம் திரும்பிப் பார்த்து வியந்தாள்.

ரூஸோ நின்றிருந்தான்.

"அடடே... வாங்க தம்பி. மாற்றலாகி ஊருக்குப் போன பிறகு இப்பதான் பார்க்கறேன். நல்லாயிருக்கீங்களா?'

உள்ளே சென்ற தீபிகா சட்டென நின்று விட்டாள்.

'இவன் நந்தனின் நண்பன்தானே? சொல்லலமா...

அவன் தன்னிடம் பழகியது பற்றி... எல்லாமே!'

"நல்லாயிருக்கேன்ம்மா! இங்கே ஒரு வேலையா வந்தேன். விஷயம்

கேள்விப்பட்டேன். அக்கா இறந்துட்டதா... அதான் வந்தேன்!"

"ஆமாம்ப்பா...!" என்றபடி கண்களில் துளிர்க்க மகளின் நினைவுகளை பகிர்ந்துக் கொண்டாள்.

அம்மாவின் உடல்நிலைக் கருதி, உணர்த்தும் விதமாக அவள் தோளை அமைதியாய் இருக்கும்படி அழுத்தினாள்.

தன்னிலை மீண்டவள், "நீ எப்படிப்பா இருக்கே? உன்கூட ஒரு தம்பி வருமே... பேரென்ன...?"

"நந்தனாம்மா"

"அ... நந்தன்... இப்பல்லாம் வர்றதே இல்லை. வெளிநாடு போய்ட்டு இருபது நாள்ல வந்துடுவேன்னு சொல்லிட்டு போச்சு. வரவேயில்லே!"

"ஆமாம்மா... அவன் இங்கே இல்லே!"

"....?!"

தீபிகா உள்ளம் கொதிக்க உன்னிப்பாய் கவனித்தாள்.

"ஃபாரின் போயிருந்தப்ப... அங்கே கார்ல ஆக்ஸிடன்ட் ஆகி... எப்படியோ பொழைச்சிருக்கான் அதிலே அவனுக்கு சிலபேரை மறந்துப் போச்சு. என்னையே நினைவுல இல்லேன்னா பாருங்களேன்!"

தீபிகாவிற்கு அந்த விஷயம் துடிக்க வைத்தது.

"கடவுளே! இப்படிக்கூட ஆகுமா? பெத்தவங்களையே மறக்கற அளவுக்கு விபத்து நேருமா?" பாக்கியம் வேதனைப்பட்டாள்.

"இல்லேம்மா... இதிலே ஆச்சர்யம் என்னன்னா... அவனுக்கு சில விஷயங்கள் மட்டுந்தான் மறந்துப்போயிருக்கு. அப்பா, அம்மா, சொந்தக்காரங்க... வேலை செய்யற ஆபீஸ் இதெல்லாம் மறக்கலே."

"அதெப்படிப்பா?"

"அதாம்மா எனக்கும் புரியலே. இப்ப அவன் ஆபீஸ் பக்கத்திலேயே வீடெடுத்து தங்கியிருக்கான் நம்ம ஏரியாவையே மறந்துட்டான். சரிம்மா... நான் கிளம்பறேன். உடம்பை பார்த்துக்குங்க. நீங்க நல்லா இருந்தாதான் உங்க குடும்பத்தை பார்த்துக்க முடியும். "ரூஸோ நிஜமான



அக்கறையோடு அம்மாவிடம் பேசிக் கொண்டிருக்க....

தீபிகா உள்ளே சென்றாள்.

அதெப்படி? மறந்தாள் எல்லாம்தானே மறந்துப் போகும்? இந்த ஏரியா, ரூஸோ, நான், சம்பந்தப்பட்ட விஷயங்கள் மட்டும் மறந்துப் போகுமா? எப்படி சாத்தியம்? இல்லை... இது எனக்காக என்னை ஏமாற்ற செய்யும் நாடகம். என்ன பண்ணலாம்?

என்னதான் பண்ண முடியும்?

16

தீபிகாவிற்கு மறுநாளே ஆபீஸிலிருந்து போன் வந்தது. சம்பள பாக்கியை வாங்கிச் செல்லும்படி!

அன்று காலை எழும்போதே... உடம்பு உதைத்துப் போட்டாற்போல் வலி... அசதி! வயிற்றுக்குள் இனம் புரியாத இம்சை!

கிளம்பினாள்.

"போய்ட்டு சீக்கிரம் வந்துடு தீபா வேலையிருக்கு"

"சரிம்மா!"

அலுவலகத்தில் தயாராய் வைத்திருந்த செக்கை டீம் லீடர் தந்தார்.

வாங்கிக் கொண்டு வெளியே வந்தாள்.

நடந்து வருகையில்... நந்தன் அவளுக்காக காத்திருந்த இடம்... வெறுமையாய் இருந்தது. மனசுக்குள் தாங்கவொன்னா உளைச்சல்...

சரக்கென அவளை உரசியபடி ஒரு கார் வந்து நின்றது.

அதிலிருந்து இறங்கினான் இளமாறன்.

"ஹலோ... தீபிகா மேடம்...

இதயநிலா

ஆசிரியர்:
கருப்பையா நாகராஜன்
உதவி ஆசிரியர்:
அன்புமீனா
நிர்வாகம்:
N.மகேஸ்வரன்
வடிவமைப்பு
சரோஜா கிராபிக்ஸ்,
கவிதா ஆப்செட்
நிர்வாக அலுவலகம்:
இதயம் மீடியா
எண் 12, அண்ணாநகர் பிளாசா,
C-47, 2வது அவென்யூ,
அண்ணாநகர்,சென்னை-40.
9551296661, 9551286664
mail: idhayammedia@gmail.com.

நலமா?"

"முறைத்து விட்டு நடந்தாள்

"எதுக்கிந்த முறைப்பு? நான் காதலிக்கிறேன்னு சொல்ல வந்தேன்னா? அதெல்லாம் பழைய கதை. ஆஃப்ட்ரால் ஒரு சாப்பாட்டுக்குக் கடை வச்சிருக்கிற பொம்பளையோட பொண்ணு நீ! விஷயம் தெரிஞ்ச பிறகு அந்தக் காதல்... கால்ல போடற செருப்பு மாதிரி மரியாதை இழந்த போச்சு!"

அந்த வார்த்தை தந்த வலியோடு... நடந்தாள்.

"எவ்வளவோ பேசணும்னுதானே... உன் சாலரி கணக்கை முடிக்கச் சொல்லி வரவச்சேன். உடனே போறேங்கறியே..."

".....?!"

"நந்தன் எப்படியிருக்கார் தீபிகா? உன்னை ஞாபகமிருக்காமா?"

"....?!" சடக்கென தலை உயர்த்தி பார்த்தாள். கண்களில் மிரட்சி.

'நந்தனை இவனுக்கெப்படித் தெரியும்?'

"என்ன மேடம்... நந்தனை எப்படி இவனுக்குத்தெரியும்னு ஷாக்கா இருக்கா? சொல்றேன். அதுக்கு முன்னாடி ஒரு சின்ன ஃப்ளாஷ்பேக்! எப்படியெல்லாம் அவமானப்படுத்தினே செருப்பு பிஞ்சிடும்னு சொன்னே! அதனால தான்டி... உன் வாழ்க்கையை அறுந்த செருப்பு மாதிரி ஆக்கினேன்.

"எ...ன்...ன...து?"

"உனக்கெல்லாம் என்னை ரிஜக்ட் பண்ண என்ன தகுதியிருக்கு? அதுதான்டி தாங்கிக்க முடியலே. நந்தன் யாரு தெரியுமா? என் தம்பி... சித்தப்பா பையன்!"

"வாட்?" காலடியில் வெடிகுண்ட வெடித்தது போலிருந்தது.

"நோ... நோ... சோறுவிக்கிறப் பொண்ணு இங்க்லீஷ்ல ஃபீல் பண்ணக் கூடாது புரியுதா..." நக்கலாய் சொன்னான்.

"பாவிப்பயல் தராதரம் தெரியாம உன்னை லவ் பண்ணித் தொலைச்சிட்டான். பயல் நிஜமா உன்னை நினைச்சு உருகினான். அவன் மூலமா பர்த்டே அன்னைக்கு என் வீட்டுக்கு வரவைச்சேன்.

"அ...து.... உன் வீடா?"



"யா! அங்கே என்ன நடந்தது?"

".....?!?!"

"கல்யாணத்துக்கு முன்னாடி பைக்ல கூட ஏறமாட்டேன்னு அடம்பிடிச்சவ... நந்தனோட...."

"....?!"

"எல்லாம் ஜூஸோட மகிமை! உங்க ரெண்டுபேருக்கும் தெரியாம அதிலே போதை மாத்திரை கலந்து வச்சேன். வேலை செஞ்சது... உன் வாழ்க்கை காலியாச்சு."

"....?!"

"உறுத்தல் காரணமா உடனே ஊருக்குப்போய் உன்னைப் பத்தி சொல்லி கல்யாணம் பண்ணிக்கனும்னு தீவிரமா இருந்தவனை... ஆசைக்காட்டி ஆஸ்திரேலியா கூட்டிட்டுப்போனேன். ஆக்ஸிடண்ட் ஆச்சு. அதுவும் என்னோட செட் அப்தான். தலையில் அடி. பெரிய காயம் எதுவுமில்லை. ஆனால், அங்கே என் ஃப்ரண்ட் பெரிய சர்ஜன். பல லட்ச ரூபாயை ஃபீஸா கொட்டினேன். சின்னதா ஒரு ஆபரேஷன் பண்ணினான். "மெமரி எரெஸர்." யெஸ்... உன்னைப் பத்திய... உன் சம்பந்தப்பட்ட எல்லா நினைவுகளையும் உடைச்சு எறிஞ்சேன்! அவன் திரும்பி வர்றப்ப... சுத்தமா உன்னோட நினைவுகள் ஒரு துளிக்கூட இல்லை. அவனைத் தேடி வந்தியாமே! 'யாரோ ஒரு பொண்ணு மாறா... ஆபீஸக்கு வந்து தெரிஞ்சவ மாதிரி பேசறா. சென்னையிலே பொண்ணுங்க அத்தனை மோசமான்னு?' என்னையேக் கேட்கிறான். இனி என்ன பண்ணப் போறே? கற்புதான் உயிர்ன்னு வாழ்ந்த கவரிமானாச்சே? சாப்பாட்டு கடையில சாப்பிட வர்ற எந்த இளிச்சவாயனாவது... ரிக்ஷாக்காரன், கூலிக்காரன்னு உன் லெவலுக்கு மாட்டமாட்டானா என்ன? மடக்கிப்போட்டு செட்டில் ஆகிடு." சேவல் கொக்கரிப்பதுப் போல் சிரித்தான் இளமாறன்.

கலங்கிப் போய் ஸ்தம்பித்து நின்றிருந்தாள் தீபிகா.

"அப்புறம்... முக்கியமான விஷயம் ஒண்ணு சொல்ல மறந்துட்டேனே... நந்தனுக்கு ஊர்ல... அவங்க அந்தஸ்த்துக்கு ஏத்த மாதிரி பொண்ணெல்லாம் பார்த்தாச்சு. உன்னால என்ன பண்ண முடியுமோ பண்ணிக்க... நந்தன் உன்னை காதலிச்சான்ற ஆதாரம் இருந்தா... அவனை செத்த எலியைப் போல் பார்த்துவிட்டு சென்று விட்டான்.

தீபிகா எப்போது வீட்டுக்கு வந்தாள் என்றே புரியவில்லை.

இவன் சொன்னதெல்லாம் நிஜமா? எல்லாம் இந்த இளமாறனின் வேலையா? தேவையற்ற நினைவுகளை மூளையிலிருந்து அகற்றக்கூட ஆபரேஷனா? அதனால் தான் நந்தனுக்கு என்னைத் தெரியவில்லையா? ரூஸோக்கூட அப்படித்தானே சொன்னார்! ரூஸோ இந்த ஏரியாவில் வசிப்பவர். இந்த மெஸ்ஸிற்கு கூட சாப்பிட வந்தவர் என்பதால், புத்திசாலித்தனமாய் அவரையும் நந்தனின் நினைவிலிருந்து அகற்றி விட்டானா?

இப்போது என்ன செய்வது? நந்தனிடம் என்னைப் பற்றிய உண்மையை தெரியப்படுத்தியே ஆக வேண்டும். நானும் நந்தனும் பழகியதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? கடிதம் கூட பரிமாறிக் கொண்டதில்லை. வெளியே எங்கும் சுற்றாமல், நண்பர்களுக்குக் கூட தெரியப்படுத்தியதில்லை. போனில் பேசிக் கொண்டதோடு சரி.' அவள் யோசித்துக் கொண்டிருக்கும்போதே அந்த எண்ணம் உதயமானது.

அவன் எனக்கு எஸ்எம்எஸ் அனுப்பியிருக்கிறானே! அவன் நம்பரிலிருந்து அனுப்பியதுதானே? இப்போது அந்த என்னை அவன் பயன்படுத்தாவிட்டாலும் அந்த நம்பர் அவன் பயன்படுத்தியது என்பதை நிரூபிப்பது எளிதாயிற்றே! நந்தன் என் உயிர். என் கணவர். அவரை யாருக்காகவும் நான் விட்டுத்தர முடியாது. அந்த இளமாறனின் சூழ்ச்சியிலிருந்து... என் வாழ்க்கையை நான் மீட்டாக வேண்டும்.' எதிர்காலத்தை பற்றிய பயம், கோபம், டென்ஷன் எல்லாமாக சேர்ந்து... தலை கிறுகிறுக்க வைக்க... வெட்டிப்போட்ட வாழையிலையாய் மயங்கி சரிந்தாள்.

சாருமதியின் அலறலில்... பாக்கியம் ஓடோடி வர... அந்த கணத்தில் அவளை அப்படிப் பார்க்கையில் ரேகாவின் மரணம் கண்முன் நிற்க... ஆடிப்போய்விட்டாள். மகளை ஆட்டோவில் அள்ளிப்போட்டுக் கொண்டு ஹாஸ்பிடலுக்கு ஓடினாள்.

★★★

வீடு திரும்பிய இருவர் முகமும் பாறாங்கல்லை விழுங்கியதைப் போலிருக்க... பதற்றத்துடன் ஓடி வந்தாள்.

"என்னாச்சுக்கா?"

"ஒண்ணுமில்லே... சாப்பிடலே... அதனாலதான்..."

தட்டுத்தடுமாறி வந்தன வார்த்தைகள்.

மறுநாள்... சாருமதி பள்ளிக்குச் செல்லும்வரை பாக்கியம் அமைதி



காத்தாள்.

அவள் சென்றதும்... தீபிகாவின் தலைமுடியை கொத்தாகப் பற்றி கன்னத்தில் மாறி மாறி அறைந்தாள்.

"அம்மா... அம்மா... அம்மா..."

"சொல்லுடி... ஏன் இப்படிப்பண்ணினே? அப்பன் இல்லாத வளர்ப்புன்னு நாலுபேர் காறித்துப்பற மாதிரி ஒரு காரியம் பண்ணிட்டு வந்து நிக்கிறியே... இவ்வளவுதானா நீ? எனக்குப் பிறகு இந்தப் பிள்ளைகளை கட்டிக்காப்பாத்துவேனு நம்பிட்டிருந்தேன்.... உன்னையே காப்பாத்திக்க வக்கில்லாம... வயித்துல பிள்ளையை வாங்கிட்டு வந்து நிக்கறியே... சீ.... நீயெல்லாம் என்னடி ஜென்மம்? நெருப்பு சட்டியிலே வெந்துக்கிட்டிருக்கிற என்னைப் பத்தி... தப்பு செய்யறதுக்கு முன்னாடி ஒரு நிமிஷம் நினைச்சுப் பார்த்தியா? இந்த மெஸ்ஸிலே வந்து சாப்பிட்டுப் போறவங்கள்லாம் ஆம்பளைனு. நீ இப்படின்னு விஷயம் வெளியில் தெரிஞ்சு... என் தொழிலைப் பத்தி என்னடி நினைப்பாங்க? ஐயோ... நான் என்னப் பண்ணுவேன்? யாரு... யாருடி அந்தப் பாவி...?"

அம்மாவின் அடியும், வசவுகளும் வலித்ததை தாண்டி.... அவளின் சூழ்நிலைதான் பெரிதும் வதைத்தது.

'எப்படிச் சொல்லுவேன்? நந்தன் இருக்கிற நிலையில் அவன்தான் என்று எப்படிச் சொல்லுவேன்? எப்படி இந்த பிரச்னையை சமாளிக்கப் போகிறேன்?'

"கேக்க... கேக்க... கல்லு மாதிரி நிக்கறியே... நாயே... ஊர்மேயத்தான் வேலைக்குப் போறேன்னுப் போனியா? மரியாதையா சொல்லு... யாரவன்?"

"இப்ப என்ன எதுவும் கேக்காதம்மா!"

"இப்ப கேக்காம? பெத்து கையில வச்சுக்கிட்ட பிறகு கேக்கச் சொல்றியா? சொல்லு... சொல்லு!" அடிப்பின்னி எடுத்தாள்.

தீபிகா சொல்லவேயில்லை.

பாக்கியத்தின் கண்களில் சார்ஜரில் இருந்த செல்போன் நிரட... வெப்பமாய் அதனருகேச் சென்றாள்.

## 17

"உன்னை மாதிரி எல்லா சனியன்களும் இந்த போனால தானே உருப்பிடாம போறீங்க? காதோட ஒட்டவச்சு... கிசுகிசுன்னு வெளியே சத்தம் கேட்காம பேசி.... பெத்தவங்க வயித்துல அடிக்கிறது இந்த எமனாலதானே? பொத்தி பொத்தி வளர்த்தாலும் அத்துக்கிட்டு ஓடறது இதனாலதானே? இதை..." ஆவேசமாய் அந்த

செல்போனை எடுத்துச் சென்று பிரியாணி தம் போட்டு வைத்திருந்த தெருப்பில் போட்டாள்.

அந்த சூட்டில் சட்டென... சுருங்கி கருகி எரிய ஆரம்பித்தது.

நடப்பதை உணர்வதற்கு சில காரணங்கள் தேவையாய் இருக்க... தீபிகா துடித்துப்போனாள்.

"ஐயோ... அம்மா என்னப் பண்றே?"

"நியாயமா உன்னைப் பொசுக்கி இருக்கணும்!"

"ஏன் இப்படி ராட்சஷி மாதிரி நடந்துக்கிறே? நீ என்ன காரியம் பண்ணிட்டே தெரியுமா? என் வாழ்க்கையையே பொசுக்கி நாசமாக்கிட்டே? என் வாழ்க்கைக்கே எமனாயிட்டே! என் சூழ்நிலை தெரியாம... என் வாழ்க்கையை சின்னாபின்னமாக்கிட்டே!" தீபிகா ஆத்திரத்தில் வார்த்தைகளை அளவற்றுக் கொட்டினாள்.

பாக்கியம் நிலைகுலைந்துப் போனாள்.

தான் பேசுவது தனக்கே புரியாத மன இறுக்கத்தில் தலையில் அடித்துக் கொண்டு அழுதாள் தீபிகா.

ஆனால்... மகளின் வார்த்தைகள் பாக்கியத்தை சுட்டுப்பொசுக்க... துடித்துப்போனாள்.

அன்று முழுவதும் இருவரும் பேசிக் கொள்ளவில்லை. சாருமதிக்கு வீட்டின் அமைதி... எதுவுமே புரியவில்லை. அதிகாலையில் வழக்கம்போல்... கோயம்பேடு மார்க்கெட்டிற்கு புறப்பட்டாள் பாக்கியம்.

தீபிகா இரவு முழுக்க உறங்கவில்லை.

ஒரு பக்கம்... ஒரே ஆதாரமாய் இருந்த செல்போனை அம்மா எரித்துவிட்ட துயரம். மறுபக்கம் அம்மாவை தாறுமாறாக பேசிவிட்டோமே... என்கிற வேதனை. 'பாவம்! எந்த தாய்க்குமே மகள் திருமணத்திற்கு முன்பே கர்ப்பமாய் இருப்பது அறிந்தால்... துடித்துதானே போவார்கள்? கஷ்டத்தை மட்டுமே அனுபவித்து, தன்னை வருத்தி ஆளாக்கிய அம்மாவுக்கு என்னைக் கொல்லவும் உரிமை இருக்கிறதே! நான் ஏன் அப்படிப் பேசினேன்? என் கர்ப்பத்திற்கு யார் காரணம் என்பதை நந்தன் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும்,



அம்மாவிடம் உண்மையை சொல்லித்தானே ஆகணும்? கர்ப்பத்திலுள்ள சிசுவை டிஎன்ஏ மூலம் நந்தன் எனக்கு என்ன உறவு என்பதை நிரூபித்துவிடலாமே!

'அம்மா வந்ததும் நிதானமாய் எல்லாவற்றையும் சொல்லி மன்னிப்பு கேட்க வேண்டும்.' கொஞ்சம் ரிலாக்ஸ் ஆனது போல் உணர்ந்தாள் தீபிகா.

★★★

விடியலின் குளிர் ஊசியாய் துளைக்க... திறந்த வேனில் அமர்ந்திருந்த பெண்மணிகள் புடவைத் தலைப்பை போர்த்திக் கொண்டனர்.

பின்னால் வந்த வாகனங்களின் லைட் வெளிச்சம் கண்களை கூசச் செய்தது. ஆனால், எதிர்காலம் இருட்டாய் பேய் மாதிரி பயமுறுத்தியது.

உறவுகளினால் மனதில் ஏற்பட்ட பள்ளம் பெரிதாகிக் கொண்டே போக... அதில்தான் உடைந்து நொறுங்கி விடுவோமோ என்ற பயம் ஏற்பட்டது.

கணவன் செய்த துரோகம்.

கடவுள் செய்த அநியாயம் ரேகாவின் மரணம். வயதாகிக் கொண்டே போக, மகள்கள் மற்றும் பேரனின் வளர்ப்புக் கடமை... உழைக்க ஏது பலம்?

போதாதற்கு இடியாய் தீபிகாவின் கர்ப்பம்.

என்ன பேச்சு பேசிவிட்டாள்? நானா ராட்சஷி? நானா பேய்? நானா எமன்? தான் செய்ததை தப்பே என்றுக் கூட உணராமல் நியப்படுத்துகிறாளே! இருக்கிற பிள்ளைகளுக்கு எனக்கடுத்து தாயாய் இருந்து கரையேற்றுவாள் என்று நினைத்தேனே. அதையெல்லாம் விட... நாளை ஊர் உலகம் என்ன பேசும்? யாரிடம் ஏமாந்தாள் என்றுக் கூட சொல்லமாட்டேன்கிறாளே! என் வளர்ப்பை மட்டுமல்ல, என்னையுமே நடத்தையில் சந்தேகப்படுவார்களே! இன்னும் ரெண்டு மூன்று மாதத்தில் வயிறு காட்டி கொடுத்து விடுமே! வாழ்க்கை என்னாவது? அடுத்தவள் ஒருத்தி இருக்கிறாளே! அனலில் வெந்து காப்பாற்றியதற்கு கிடைத்த பரிசா இது? என்ன பண்ணப் போகிறேன்? யோசித்து... யோசித்து... பனியிலும் வியர்த்துக் கொட்டியது பாக்கியத்துக்கு!

வீடு வந்தது! அனைவரும் இறங்கினர். பாக்கியம் மட்டும்

இறங்கவில்லை.

"அக்கா... பாக்கியம் அக்கா! சீக்கிரம் இறங்கு. அடுத்த லோடு அடிக்க வேணாமா?" டிரைவர் குரல் கொடுக்க...

அசையவே இல்லை!

பாக்கியம் மேலே போய்விட்டிருந்தாள். அவள் உடம்பு மட்டுமே இறக்கப்பட்டது.

***

தீபிகாவும், சாருமதியும் அழுதழுத துவண்டு போயிருக்க... தினேஷ் செய்வறியாத பயத்தில் அழுதான். அந்த சிறுபிள்ளைக்கு பாட்டி இறந்தது கூட புரியவில்லை.

எங்கோ போயிருக்கிறாள். மறுபடி வந்து விடுவாள் என்றே அவன் கண்கள் காத்திருந்தன.

அம்மா இறந்து விட்டாள் என்ற அதிர்ச்சியை, உண்மையை இப்போதும் கூட தீபிகாவினால் நம்ப முடியவில்லை. அம்மாவை சடலமாய் பார்த்த ஷாக்கில் அவள் தொப்புள் கொடியில் சிறுவிதையாய் பற்றியிருந்த எழுபதுநாள் கரு, பட்டென்று அறுந்து விழுந்தது.

அது தீபிகாவிற்கு இரண்டாவது பேரிடி!

இதுநாள் வரை தாங்கியிருந்த அம்மாவும் போய்விட்டாள். தன்னைப் பற்றிக் கொண்டிருந்த கருவை சாட்சியாய் வைத்து தன் காதலை, வாழ்க்கையை காப்பாற்றிக் கொள்ளலாம் என்று நம்பியிருந்ததிலும் பெரிய அடி விழுந்துவிட்டது.

பாக்கியம் மெஸ் மூடப்பட்டது.

பணிபுரிந்தவர்களுக்கு மனதில் ஈரம் இருந்தாலும், அவர்களுக்கும் வயிறு இருக்கிறதே! வேறிடத்தில் வேலை தேடிப்போய்விட்டார்கள்.

சாருமதி அரை மயக்கத்தில் இருந்தாள். பார்க்கவே வயிற்றை கண்டியிழுத்தது.

காலண்டரில் கிழிக்கப்பட்ட ஒரு நாளை மறுபடி ஒட்டவைப்பதால் திரும்ப உருவாக்கிட முடியாது. அம்மாவும் அப்படித்தான்!

அவள் இனி வரமாட்டாள். அவளில்லாத நிமிடங்களை எதிர்கொண்டே ஆக வேண்டும்.



சாருமதியும், தினேஷும் இனி என் குழந்தைகள்.

என் வாழ்க்கை மறுபடி எனக்கு கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் இவர்களை ஒரு நிலைக்கு உருவாக்குவது என் கடமை!

"சாரு... எந்திரி"

"....!?" அவளிடமிருந்து விசும்பல் எழுந்தது.

"எந்திரி சாரு... ஸ்கூலுக்கு போகணுமில்லே?"

"என்னக்கா அம்மா நம்மளை விட்டுட்டுப் போயிட்டாங்க?"

"........?!"

"எனக்கு அம்மாவை பார்க்கணும் போல இருக்குக்கா!"

"சாரு... நீ ரொம்ப சின்னப் பொண்ணு இல்லே. புரிஞ்சுக்க. அம்மா இனி வரவே மாட்டாங்க. தாங்கிக்கவே முடியாத தண்டனையை கடவுள் குடுத்துட்டான். ஆனா, தாங்கிதான் ஆகணும் சாரு!"

"இல்லக்கா... அம்மா இல்லாம எப்படி இருக்கப்போறோம்? பேசாம நாமளும் செத்துப்போயிடலாம்க்கா!" பயத்தில் தேம்பி அழுதாள்.

தீபிகா அவளைத் தன்னுடன் அணைத்துக் கொண்டாள்.

"அப்படியெல்லாம் பேசக்கூடாது. நான் இல்லையா உங்களுக்கு?"

"......?!"

"நீ படி... நிறையபடி. நான் படிக்க வைக்கிறேன்."

"செலவாகுமே!"

"அம்மா நம்மளை சும்மா விட்டுட்டுப் போயிடலே சாரு. ஓரளவு பேங்க்ல சேர்த்து வச்சிருக்காங்க. நான் வேலைக்குப்போறேன். சம்பாதிக்கிறேன்... பயப்படாதே... அம்மா இடத்துல இருந்து நான் பார்த்துக்கறேன்."

"பேசாம... மெஸ்ஸை நாம நடத்தலாமா?"

"எதுவும் சுலபமில்லை. ஆனா, எல்லாமே சாத்தியம் தான். இப்ப நம்ம மனசு உள்ள சூழ்நிலையில் இந்த விஷயத்தை தள்ளிப்போடலாம். அம்மா என்னை படிக்க வச்சு டிகிரி வாங்க வச்சிட்டாங்க. நீயும் டிகிரி வாங்கணும். மெஸ் நடத்தினா அதிகமா உழைக்கணும். படிக்க

முடியாது. எந்த சூழ்நிலையிலேயும் பொண்ணுங்களுக்கு படிப்பு தான் கைகொடுக்கும்."

"நீ எத்தனை நாளைக்கு எங்களோட இருக்க முடியும்?"

"ஏன்... நான் எங்கே போயிடப் போறேன்?"

"கல்யாணமாகிட்டுப் போயிட்டா... நாங்க அனாதை ஆகிடுவோமில்லையா?"

"இல்லையாது... எந்த சூழ்நிலையிலேயும் உங்களை விட்டுட்டு மாட்டேன். உங்களுக்கு அப்புறம்தான் எனக்கு எல்லாமே!"

சொல்லும்போதே மனசு குழைந்தது.

"நந்தன் மட்டும் பழையபடி இருந்திருந்தால் எங்களை இப்படி விட்டிருப்பாரா?"

## 18

உணரும்வரை உண்மையும் பொய்தான்! புரியும் வரை வாழ்க்கையும் ஒரு புதிர்தான்!

நிர்மலாவை பொறுத்தவரை அவளின் வாழ்க்கை அப்படித்தான் ஆகிப்போனது.

நந்தனுக்கு உண்மையை உணர்த்த அவளிடம் இனி எந்த சாட்சியமும் இல்லை. குடும்ப வாழ்க்கை என்பது இந்த குடும்பத்தை பொறுத்தவரை கானல் நீர்தான்.

'அம்மாவிற்கும், அக்காவிற்கும் இணைந்த துணை சரியில்லை. ஆனால், எனக்கு அருமையாய் ஒரு நல்ல மனிதன் அமைந்தும் இளமாறன் அக்கிரமமாய் பிரித்துவிட்டான். அதுவும் யாரும் யோசித்தே பார்க்க முடியாத மெஸ்மரிசம் ஆபரேஷன் மூலம்!'

அவனை நினைக்கும் போதெல்லாம் இதயத்தை பிளேடால் கிழிப்பதுபோல் வலிக்கும். ஆனாலும் சாருமதி, நிர்மலாவுக்காக மனதை சமாதானப்படுத்திக் கொள்வாள்.

அவனை மறுபடி பார்த்து என்னவாகப் போகிறது என்று ஒதுங்கிக் கொண்டாள்.

காலையில் சீக்கிரம் எழுந்து சமைத்து, இருவரையும் பள்ளிக்கு அனுப்பிவிட்டு தானும் எடுத்துக் கொண்டு அலுவலகம் ஓடுவாள்.



வேறு ஒரு அலுவலகத்தில் முன்பை விட சற்று அதிக சம்பளத்தில் பிரைவேட்டில் வேலை கிடைத்தது. ஓவர் டைம் வேலை செய்து... அதிகமாய் சம்பாதித்தாள்.

வாழ்க்கை சலனமின்றி ஓடிக்கொண்டிருந்தது.

* * *

நந்தன் பைக்கில் பறந்துக் கொண்டிருந்தான்.

செல்போன் அழைக்க... ஓரமாய் நிறுத்திவிட்டு எடுத்து "ஹலோ" என்றான்.

"நான்தான்டா" என்றார் வேலாயுதம்.

"சொல்லுங்கப்பா!"

"நிச்சயதார்த்தம் குறிச்சாச்சு"

"எப்பப்பா?"

"அடுத்தவாரம்! நீ என்னப் பண்றே... மூணுநாள் முன்னாடியே இளமாறனோட கிளம்பி ஊருக்கு வந்துடு. நாளைக்கு நிச்சயிக்கிற வச்சுக்கிட்டு முதல் நாள் கிளம்பி வர்ற வேலை எல்லாம் வச்சுக்காதே!"

"இல்லேப்பா... அப்படிப்பார்த்தா அந்தநாள் லீவாயிடுமே! ஏற்கனவே ஆபீஸில் போனதுக்காக வேற நிறைய லீவு எடுத்துட்டேன்!"

"இதப்பாருடா... நம்ம சொந்தக்காரங்கல்ல பாதிபேர் வந்தாச்சு. லீவு தானேன்னா நிறைய சடங்கு, சம்பிரதாயமெல்லாம் இருக்கு. லீவுக்கு பண்ணிட்டு வா! சொந்த பொறுப்புக்கே ஆளில்லாம தவிக்கிறேன் இங்கே..." அப்பா கறாராய் பேச...

"சரிப்பா... வந்துடறேன்" என்றான் அவசரமாக.

"சரி...சரி... வச்சிடறேன்"

நந்தனுக்கு சொந்தத்திலேயே பெண் பார்த்தாயிற்று. வசதியான இடம். அழகி. நந்தன் தான் பார்த்து ஓகே சொன்னான்.

பெண்ணுக்கு குறை என்று எதையும் சொல்ல முடியாது. படிப்பு, குணம், அழகு, அந்தஸ்து எல்லாம் இருந்தும்... நந்தனுக்கு உள்ளுக்குள் என்னவோ நெருடியது.

கண்களுக்கு பாந்தமாய் அந்தப் பெண் பார்க்கையிலேயே சந்தோஷமாய் உணர்த்தினாலும், 'வேண்டாம் நந்தன்' என்று உள்ளுணர்வு தகித்தது. மறுக்க எந்தக் காரணமும் இல்லாமல் என்னவென்று சொல்வது? சரியென தலையாட்டி விட்டு வந்தான். இதில் இளமாறனின் பங்கு அதிகமாய் இருந்தது.

நந்தன் செல்போனை பாக்கெட்டில் செருகி விட்டு, பைக்கை உதைத்துக் கிளப்பினான்.

தி.நகர் வழியாகச் செல்லும்போது... வழக்கம் போல அந்த இடத்தில் வண்டி நின்றது.

நந்தனுக்கு ஒன்றுமே புரியவில்லை. அந்த வழியாய் செல்லும்போது ஆட்டோமெடிக்காக பாதையோரம் வண்டியை நிறுத்தத் தோன்றுகிறதே.

எதையோ தவறவிட்டது போல் ஒரு பதைப்பு.

அந்த உணர்வுக்கு என்ன பொருள் என்று அவனால் உணர முடியவில்லை.

★★★

வேலைக்காரி கொடுத்த காபியை பருகிக் கொண்டே போனில் பேசிக் கொண்டிருந்தான் நந்தன். அவன் காலடியில் ஊருக்குச் செல்வதற்கான உடைகள் அடங்கிய பேக்.

அவனிருந்தது இளமாறனின் அறையில். இருவரும் ஊருக்கு கிளம்புகின்றனர்.

இளமாறன் டவலுடன் பாத்ரூம் நோக்கிச் சென்றான்.

"குளிச்சிட்டு வந்துடறேன்!"

"நீ டிரஸ் எடுத்து வச்சுட்டியா மாறன்?"

"ஆச்சுடா!"

"பாவம்... எனக்காக உன் பிஸினஸை எல்லாம் விட்டுட்டு வர்றே..."

"என்னடா பேசறே? உன் நிச்சயதார்த்தம் விடவா எனக்கு பிஸினஸ் முக்கியம்? இப்படியெல்லாம் பேசாதே!"

இளமாறன் பாத்ரூமிற்குள் நுழைந்தான். நந்தன் செல்போனில்



பேச்சைத் தொடர்ந்தான். பேசிக் கொண்டிருக்கும்போதே... கட் ஆக... சத்தமாய் சார்ஜ் இல்லை.

"ப்ச்..." அலுத்துக் கொண்டவனாய் தன் பேக்கிலிருந்த சார்ஜரை எடுத்து ஃப்ளக்கில் பொருத்தி... செல்போனில் செருகி வைத்தான்.

"மாறா" கதவைத் தட்டினான்.

"என்ன?"

"உன் செல்போனை கொஞ்சம் யூஸ் பண்ணிக்கட்டுமா? அஃபி ஷியலா சில இன்ஃபர்மேஷன் சொல்லிட்டிருந்தேன். என் போன்ல சார்ஜ் போயிடுச்சு!"

"இவ்வளவு விளக்கம் சொல்லணுமா? டேபிள் மேல என் போன்

## சருமம் மினு மினுக்க...



- வெள்ளரிக்காய் சாற்றுடன் பால் சேர்த்து முகத்தை துடைத்து வர, முகம் அழுக்கு நீங்கி பளபளக்கும்.
- முட்டையின் வெள்ளை கரு அதனுடன் தேன் சேர்த்து முகத்தில் பூசினால் முகம் மினுமினுக்கும்.
- முகத்தின் எண்ணெய் பசை மாற திராட்சை பழச்சாறுடன், எழுமிச்சை பழச்சாற்றையும், முட்டையின் வெள்ளை கருவையும் சேர்த்து முகத்தில் ஊர வைத்து சுடு நீரில் கழுவி வர வேண்டும்.
- புத்துணர்ச்சிக்கு எழுமிச்சை பழத்தை முகத்தில் தேய்த்து வர வேண்டும். பிறகு குளிர் நீரில் முகத்தை கழுவினால் முகத்திற்கு புத்துணர்ச்சி கிடைக்கும்.
- கேரட் சாற்றை தினமும் முகத்தில் பூசி வர முகத்தின் நிறம் கொஞ்சம் கொஞ்சமாக சிவப்பாக அல்லது பளிச்சென மாறும்.
- ஆப்பிள் பழத்தை மெலிதாக நறுக்கி முகத்தில் பூசி வாருங்கள். முகத்தில் எண்ணெய் வடிவதை நீக்கும்.

இருக்குப் பார்... எடுத்துக்க..." உள்ளிருந்தே குரல் கொடுத்தான்.

"தாங்க்ஸ்"

டேபிள் மேலிருந்த உயர் ரக செல்போனை எடுத்தவன் கைதவறி விழ... அதை பிடிக்க பிரயத்தனப்பட்டதில்... அவன் கை எதிலோ பட்டு, எதையோ அமுக்க...

ஸ்க்ரீனில்... அந்தப் பெண்ணின் அசைவுகள்.

இவள்... இவள்... இந்தப் பெண்தானே அன்று என் ஆபீஸிற்கு வந்து... என்னை.. ரொம்ப நாள் தெரிந்தவள் போல் பேசினாள்! இவளை எதற்கு மாறன் வீடியோ எடுத்து வைத்திருக்கிறான்?

குழப்பத்துடன் தொடர்ந்து பார்த்தான்.

தீபிகா அலுவலகம் செல்லும்போது, அமர்ந்து பணிபுரிந்தபோது என்று நீளமாக ஓட..... அடுத்து வந்த சீன் அவனை தூக்கி அடித்தது.

நந்தனும், தீபிகாவும் அறைக்குள் நுழைய, ஜூஸ் பருக, பேச... கண்கள் செருக... இருவரும் ஒன்று கலப்பது வரை எல்லாமே ஓட..... அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி.

அப்படியானால் அந்தப் பெண் தீபிகாவும், நானும் அவள் சொன்னது போல் காதலர்களா? அதுவும் எல்லை மீறியக் காதலர்கள். அந்த அறை இந்த வீட்டில் உள்ளதல்லவா ஏன் எனக்கு இதெல்லாம் நினைவில் இல்லை? எங்களுக்குள் நடந்த அந்தரங்கத்தை இளமாறன் ஏன் செல்போனில் படம் பிடிக்கணும்?

முழுக்க புரியவில்லை என்றாலும், ஓரளவு யூகிக்க முடிய... ஆத்திரத்திலும், அவமானத்திலும் உடம்பு ஆடியது.

சுற்றுமுற்றும் பார்த்தான். மேஜைமேல் தட்டில் ஆப்பிளும், நறுக்க கத்தியும் இருந்தது.

கத்தியை எடுத்தவன், குளியலறை நோக்கிச் சென்றான்.

கதவைத் தட்டினான்.

"ஆச்சு... இதோ வந்துட்டேன்!" என்றபடி இடுப்பில் டவலோடு வெளிப்பட்ட மாறனை. அப்படியே தள்ளி பாத்டப்பில் வைத்து அமுக்க... திடீர் தாக்குதலில் நிலைகுலைந்துபோன மாறன், "ஏய்... என்ன... என்ன பண்றே!" என்றலறினான்.

செல்போனில் அந்தக்காட்சியை காண்பித்து அணைத்தவன், "என்ன



தாய் தான் எல்லாம். ஒரு குழந்தையைப் பெற்று எடுத்து, வளர்த்து, ஆளாக்கி, அவனை மனிதனாக்கி, அவன் நல்ல நிலையில் இருக்கிறான் என்பதை உறுதிசெய்து, அவனை விட்டு அந்த தாய் தனியாக வாழ்ந்தாலும், தனக்கு வயதாகிவிட்டாலும், தன் மகன் அல்லது மகள் சந்தோஷமாகவும், வசதியோடும் இருக்கிறார்கள் என்பதை அறிந்து, நாளும் மகிழ்ச்சியடையும் ஒரே பிறவி தாய்தான்.

சில்லுனு ஒரு சவிங் நிகழ்ச்சியில் தொழிலதிபர் அபிராமிராமநாதன் பேச்சிலிருந்து...



இது?" என்றான்.

"அ... அது...ஒ... ஒண்ணுமில்லே... அம்மா!"

"என்ன இதுன்னு கேட்டேன்!" அடிக்குரலில் கர்ஜித்த நந்தனின் கையில் கத்தி, கண்களில் சிவப்பு. பயந்துப்போன மாறன், "அவ தீபிகா... உன்னோட காதலி" என்று எல்லாவற்றையும் மனமனவென்று சொன்னான்.

அத்தனையும் கேட்டுவிட்டு அசந்துபோய் விட்டான் நந்தன்.

"மைகாட்! ஒரு மோசமான மனுஷன் கூட இப்படி எல்லாம் செய்ய மாட்டான். ஆனா, நீ அந்த லிஸ்ட்ல கூட சேர்க்க முடியாத விஷம். நான் இரும்போ, பித்தளையோ அல்ல. மிஷின்ல கொடுத்து இஷ்டப்படி வளைக்கறதுக்கு . ஆனா அதையும் மிஞ்சி எப்பேர்ப்பட்ட காரியத்தைப் பண்ணியிருக்கே? கற்பனை கூட செஞ்சு பார்க்க முடியாத ஒரு விஷயத்தை, எனக்கு ஆபரேஷன் பண்ணி தீபிகா சம்பந்தப்பட்ட அத்தனை விஷயத்தையும் அழிச்சிருக்கே! நான் என்னடா பண்ணினேன் உனக்கு? நைஸாப் பேசி உன் வீட்டுக்கு வரவழைச்சு, போதை மாத்திரை கலந்த ஜூஸை குடிக்க வச்சு, அறைக்குள்ளே எங்களுக்கே தெரியாம ஒளிஞ்சிருந்து... செல்போன்ல எல்லாத்தையும் வீடியோ எடுத்து... சீசீ... இவ்வளவு தரங்கெட்டவனா நீ? தூ... முகத்தில் காறித்துப்ப...

தலைகவிழ்ந்தான் மாறன்.

"பாவம் அந்தப் பொண்ணு! ஒரு ஏழைப்பொண்ணோட



– நிறைவு –